சுவடி : 40

ஏடு : 4

அக்டோபர் 2016

*

ஆசிரியர்

**வே.ஆனைமுத்து**

*

ஆசிரியர் குழு

**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**

*

அலுவலக
நிருவாகப் பொறுப்பு

**ப. வடிவேலு**
94441 05892

*

அனைத்துத் தொடர்புகளுக்கும்

**'சிந்தனையாளன்'**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர்,
எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு,
அம்பத்தூர், சென்னை - 53.

தொடர்புக்கு :
94448 04980
044-2625 2119

மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com

*


இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179

*

இணையத்தில் படிக்க
**www.keetru.com**

*


# ஏது இந்தியா? எந்த இந்தியா? எந்த காஷ்மீர்? ஜம்மு-காஷ்மீர், தன்னுரிமை காஷ்மீர்! ஜம்மு-காஷ்மீரின் தன்னுரிமை எங்கே? எங்கே? தன்னுரிமை இல்லாத காஷ்மீரில் அமைதி வருமா?



தமிழகத்தின் தென்பகுதி, தொழுதூருக்குத் தெற்கே உள்ள பகுதி 12 கோடி ஆண்டுகளுக்கு முன் கடலாக இருந்தது. பெரம்பலூர் மாவட்டம் சாத்தனூர் குடிகாட்டில் கிடக்கும் கல்மரம் (FOSSIL TREE) அதை உறுதி செய்வதுதான். அப்போது இமயமலை இல்லை.

இமயமலைக்கும் தென்குமரிக்கும் இடையே உள்ள-இந்துமாக் கடலுக்கும் அரபிக்கடலுக்கும் இடையே உள்ள பரந்த-அகன்ற-நீண்ட பரப்பில் "இந்தியா" என்று ஒருநாடு எப்போதும் இருந்தது இல்லை. "இந்திய அரசு" என, எதுவும் இருந்ததுமில்லை.

1757 வரையில்-ஆங்கிலேய வெள்ளைக்காரன் பிளாசியில் வெல்கிற வரையில் ஏது இந்தியா? தென்னிந்தியா உட்பட்ட பகுதிகளைப் பிடித்து, 1801 இல், அவன் உருவாக்கியதுதான் "இந்தியா". அந்த இந்தியாவின் மூன்றில் ஒரு பகுதி "சுதேச இந்தியா". அதில் வெள்ளைக்காரனுக்குக் கப்பம் கட்டும். 565 அடிமைகள் அரசர்களாக இருந்தார்கள்; எஞ்சிய மூன்றில் இரண்டு பங்கில் அமைந்தது "பிரிட்டிஷ் இந்தியா".

இவை அன்னியில் "பிரெஞ்சு இந்தியா", "போர்ச்சுகீசு இந்தியா" என்று இரண்டு குட்டி இந்தியாக்கள் இருந்தன. இவை அலுங்காமல்-நலுங்காமல் இருந்ததை நானும் என் வயதுள்ளவர்களும் 1947, 1954 வரையில் பார்த்தோம். இப்போது அந்த "இந்தியா"அப்படி இல்லை. அந்த இந்தியா எங்கே?

இந்தியாவிலிருந்து ஆஃப்கனிஸ்தான் 1919இல் பிரிந்தது. அதற்குப் பிறகும் "இந்தியா"வை அப்படி அழைத்தோம். 1935 ஒப்பந்தப்படி, இந்தியாவிலிருந்து பர்மா 1937ல் பிரிந்தது. அப்புறமும் "இந்தியா"வை அப்படிக் குறிப்பிட்டோம்.

18-7-1947இல் பிரிட்டிஷ் மக்கள் அவையில் (British House of Commons) இந்தியாவை- "இந்தியா", "பாக்கித்தான்" என இரண்டு துண்டுகளாகப் பிரித்து, இரண்டுக்கும் 'சுதந்தரம்' தருவது என்று வெள்ளைக்காரன் சட்டம் நிறைவேற்றினான்.

சுதேச அரசர்கள் இந்தியாவோடு அல்லது பாக்கித்தானோடு சேர்ந்து கொள்ளலாம் அல்லது தனித்தும் இருக்கலாம் எனவும் ஆங்கிலேயன் அறிவித்தான்.

அதன்படி, 15-8-1947 நள்ளிரவு 12.05 மணிக்கு "சுதந்தர இந்தியா" அமைந்தது. அந்த மூளியான பெரும் பரப்பையும் நாம் "இந்தியா" என்று ஒத்துக் கொண்டோம்.

அந்தப் பெரும்பரப்பில் வடக்கே, அரிசிங் என்கிற அரசனின் கீழ் இருந்தது, "காஷ்மீர்". காஷ்மீரில் வாழ்ந்த-வாழும் மக்களில் 80% பேர் இஸ்லாமியர்கள். இஸ்லாமியர்களுக்குத் தனிச் சுதந்தர நாடு-பாக்கித்தான் அமைந்துவிட்டது.

அந்த நாட்டின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள காஷ் மீருக்குள், பாக்கித்தான் மலைவாழ் பழங்குடி முரடர்கள் படை படையாகப் புகுந்தனர். தூங்குவதிலும், பெண் களை வேட்டையாடுவதிலும் விருப்பங் கொண்ட-அரிசிங் அலறித் துடித்தான்.

''இந்தியா''வோடு இணைத்திட ஒப்பந்தம் போட் டான்; குடும்பத்துடன் தில்லிக்கு அழைத்து வரப்பட்டான்.

பாக்கித்தானியரால் அனுப்பப்பட்ட பழங்குடிகள் முரட்டுப்படை, வடபகுதியிலுள்ள மூன்றில் ஒரு பங்கு காஷ்மீரைப் பிடித்துக் கொண்டது. ''ஆசாத் காஷ்மீர்'' - ''விடுதலை பெற்ற காஷ்மீர்'' என்கிற அந்தப் பகுதி, இன்றைய பாக்கித்தானின் முற்றாளுகையில் உள்ளது.

15-8-1947இல் அமைந்த சுதந்தர இந்தியாவுக்கு, 1946இல் வெள்ளையன் காலத்தில் தேர்ந்தெடுக்கப் பட்ட மத்திய சட்டப்பேரவை (Central Legislative Assembly) மற்றும் மாகாணங்களில் 1946ல் அமைந்த சட்டப் பேரவைகளின் (Provincial Legislative Councils) பிரதிநிதி கள்-ஆகிய இவர்களை வைத்து, 9-12-1946 இலேயே -சுதந்தரம் வருவதற்கு 8 மாதங்களுக்கு முன்னாலேயே, இந்திய அரசமைப்புச் சட்டத்தை வரையத் தொடங்கி விட்டார், மெத்தப் படித்த பண்டித ஜவகர்லால் நேரு.

**இதை 1946லேயே கண்டனம் செய்த ஒரே மனிதர், 24 கோடி இந்தியரில், பெரியார் ஈ.வெ.ரா மட்டுமே.**

பண்டித நேரு காஷ்மீரி பண்டிட் பார்ப்பனர்.

ஒரு பார்ப்பனர் பிரதமராக வர வாய்ப்பு வந்ததைக் கொண்டாடிட, காசிக்கு நேருவை வரச்சொல்லி, அங்கே யாகம் நடத்தினார்கள் பார்ப்பனர்கள். நேரு அதில் பங்கேற்றார்.

அந்த நேரு, அரசமைப்புச் சட்டம் எழுத, தன் இச்சைப்படி, ''இந்திய அரசமைப்புச் சட்ட முதலாவது வரைவை'' எழுதுகிற வேலையை பி.என்.ராவ் என்கிற பார்ப்பனரைக் கொண்டு செய்து முடித்து, அதை அச் சிட்டு, 18-10-1947இல் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரிடம் கொடுத்தார். இது முதலாவது அரசமைப்புச் சட்ட மோசடி.

காந்தியாரின் ஆலோசனைப்படி, 29-8-1947இல் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் ''இந்திய அரசமைப்புச் சட்ட வரைவுக்குழுவின் தலைவராக'' அமர்த்தப்பட்டார். அவர், வரைவுக்குழுவின் முதலாவது கூட்டத்தை 30.8.1947இல் நடத்தினார். அது வரைந்த அரச மைப்புச் சட்டவரைவு, அரசமைப்புச் சட்ட அவையி னரிடம் 1948 பிப்ரவரியில் ஒப்படைக்கப்பட்டது.

அந்தச் சட்டத்துக்கு 8,000 திருத்தங்கள் வந்தன. அவ்வளவையும் விவாதத்துக்கு உட்படுத்திய பிறகு, 26.11.1949இல், இறுதியான அரசமைப்புச் சட்ட வரைவு நிறைவேற்றப்பட்டது.

அப்போது இந்தியாவிலிருந்த மாகாணங்களில் பாதி எண்ணிக்கைக்கு மேற்பட்டவை அச்சட்ட வரைவை ஏற்றுக்கொண்டு, மாகாண சட்டப்பேரவையில் தீர் மானம் போட்டு, பிரதமருக்கு அனுப்பவேண்டும். அது நடத்தப் பெறப் போதிய நேரமில்லை என்று கூறி விட்டு, 26.11.1949இல் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை, 26.1.1950இல் நடைமுறைக்குக் கொண்டு வந்தார், நேரு.

இது இரண்டாவது அரசமைப்புச்சட்ட மோசடி.

இந்நிலையில், காஷ்மீரை தனி சுதந்தர நாடாக ஆக்க வேண்டும் என எண்ணிய ஷேக் அப்துல்லா வை காங்கிரசுக் கட்சி நம்பவில்லை.



*இராணுவ ஒடுக்குமுறையைத் தீரமுடன் எதிர்த்து நிற்கும் காஷ்மீர் மக்கள்*

ஷேக் அப்துல்லா, ''காங்கிரசுக் கட்சிக்குள்ளும் மத வாதப் போக்கு அதிகரித்துவிட்டது; இந்தியாவில் மதவாத அரசியல் தவிர்க்கப்பட முடியாதது'' என்று குறை கூறினார்.

அத்துடன் இந்தியாவுடன் இணைக்கப்பட்ட காஷ்மீருக்கு உள்ள 'சிறப்புநிலையை' இந்திய அரசமைப்புச் சட்டத்தில் உறுதி செய்யவேண்டும் என்றும் வற்புறுத்தினார். அதனால் இந்திய அரசமைப்பில், 306 (அ) என்ற புதிய விதி, 309 ஆம் விதியாக (Article) மாற்றப்பட்டது.

அப்போது நேருவுக்குப் பல நெருக்கடிகள் ஏற்பட்டன. ஷேக் அப்துல்லா மேலும் அதிக சலுகைகள் கேட்டு நெருக்கினார்; இந்துமதவாதிகள் நேருவின் போக்கை விரும்பாமல் எதிர்த்தனர். மற்றொரு பக்கம் அய்க்கிய நாட்டு அவை, காஷ்மீரைப் பற்றி வாக்கெடுப்பு நடத்துவதை வற்புறுத்தியது.

**இந்தக் கடுமையான நெருக்கடிகளின் காரணமாக, ஷேக் அப்துல்லா கோரியபடி, ஜம்மு-காஷ்மீருக்கு மேலும் பல உரிமைகளை அளிக்க நேரு ஒப்புக்கொண்டு, அதற்காக, இந்திய அரசமைப்புச் சட்டத்தில் 370ஆம் விதி, பழைய 309ஆம் விதியைத் திருத்தி, அமைக்கப்பட்டது. அதற்கான சட்டம் 17.10.1949இல் இந்திய அரசமைப்பு அவையில் நிறைவேற்றப்பட்டது. அது இன்றும் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் உள்ளது.**

**ஆனால் அச்சட்டத்தின்படி, ஜம்மு-காஷ்மீருக்கு அளிக்கப்பட்ட சிறப்பு உரிமைகள் அப்படியே இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இருக்கின்றனவா? இல்லை; இல்லை; இல்லை.**

அதனால்தான் தொடர்ந்து சிக்கல்கள், ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் இன்னமும் அங்கு நடக்கின்றன.

**ஆனால், ''ஜம்மு-காஷ்மீர் அரசமைப்புச் சட்டம்'' என்கிற தனி அரசமைப்புச் சட்டத்தில் சிறப்புவிதிகள் அனைத்தும் தெளிவாக உள்ளன.**

**அவற்றை நாம் ஒவ்வொருவரும் அறிவது முதன்மை.**

ஜம்மு-காஷ்மீர் அரசமைப்புச் சட்டம், 17.11.1956இல் ஜம்மு-காஷ்மீர் அரசமைப்புச் சட்ட அவையால் நிறைவேற்றப்பட்டது; அது 26.1.1957இல் நடப்புக்கு வந்தது.

ஜம்மு-காஷ்மீர் அசரமைப்புச் சட்ட முகவுரை என்ன கூறுகிறது?

**முகவுரை**

''**ஜம்மு-காஷ்மீர் குடிமக்களாகிய நாங்கள்,** இந்த எங்கள் மாநிலம் 26.10.1947இல் இந்தியாவுடன் இணைக்கப்பட்டதையும், அதன் பிரிக்க முடியாத பகுதியாக ஆனதையும் தொடர்ந்து, இந்தியாவுடன் ஆன எங்கள் உறவை வரையறுக்கும் தன்மையிலும் உறுதி பூண்டு இச்சட்டதை இயற்றிக் கொண்டோம்.

......................................................................

விதி (Article) 6 : இந்தியக் குடிமகனாக உள்ள ஒவ்வொருவரும், இந்த மாநிலத்தில் 14.5.1954 அன்று:

அ. இந்த மாநிலத்தின் முதல்நிலை, அல்லது இரண்டாம் நிலை குடிமகனாக இருந்திருக்க வேண்டும்;

ஆ. இம்மாநிலத்தில் சட்டப்படிப் பெற்ற அசையாச் சொத்தைப் பெற்றவராகவும், இம்மாநிலத்தில் 14.5.1954 இல் 10 ஆண்டுகள் வசித்தவராகவும் இருக்க வேண்டும்.

விதி 27: ஏற்கெனவே ஜம்மு-காஷ்மீர் குடிஅரசுத் தலைவர் (President of Jammu-Kashmir-Sardar-i-Riyasat) என்று அழைக்கப்பட்டவர், ஜம்மு-காஷ்மீர் அரசமைப்பின் 1965 ஆண்டைய 6வது திருத்தத்தின் படி, இனி, ஆளுநர் (Governor) என அழைக்கப்படுவார்.

விதி 36: இதுவரையில் ''பிரதமர்'' - Prime Minister" என்று அழைக்கப்பட்டவர், ஜம்மு-காஷ்மீர் அரசமைப்பின் 1965 ஆம் ஆண்டைய 6வது திருத்தத்தின்படி, இனி, ''முதலமைச்சர்''- "Chief Minister" என அழைக்கப்படுவார்.

**இவை, 26.1.1957 நடப்புக்கு வந்த ஜம்மு-காஷ்மீர் அரசமைப்பின்படி, அவர்கள் பெற்றிருந்த சிறப்பு உரிமைகள் பறிக்கப்பட்டதைக் காட்டவில்லையா?**

இந்த உரிமைப் பறிப்பை 1959இல் தொடங்கினார், நேரு. அது தொடர்ந்து 1960, 1961, 1963, 1965, 1967, 1968, 1970 எனப் பல கட்டங்களில் நடைபெற்றது.

பண்டித நேரு என்கிற தந்தையைத் தொடர்ந்து, அவர் மகள் இந்திரா காந்தி கால ஆட்சிக்குள் எண்ணற்ற உரிமைகள் பறிக்கப்பட்டன.

ஜம்மு-காஷ்மீருக்கான தனிக்கொடி பற்றிய விதி தப்பியது.

விதி 144 : இம்மாநிலத்தின் கொடி நீண்ட சதுர வடிவத்தில் சிவப்பு நிறத்தில் இருக்கும். சமஇடைவெளியில், சமதூரத்தில், சம அகலத்தில் குத்துவாக்கில் மூன்று வெள்ளைக்கோடுகள் கம்பத்தை ஒட்டி இருக்கும். கம்பத்தை நோக்கி நடுவில் ஏர் இருக்கும்.

அப்படிப்பட்ட கொடி, தேசியக் கொடியுடன் பறப்பதை 2012 செப்டம்பரில், நானும், தில்லி தானப்பனும், செந்துறை சீனுவாசனும் ஜம்முவில், குளிர்காலத் தலைமைச் செயலகத்தின் கட்டடத்தில் பார்த்தோம்.

இப்படிப்பட்ட இருப்பு நிலைமைகளை மார்க்சிய-லெனினியக் கொள்கையினரும், திராவிட-தமிழ்த் தேசியக் கொள்கையினரும், பெரியாரிய அம்பேத்கரியவாதிகளும் இப்போதாவது நல்ல எண்ணத்துடன் படிப்பதும், தெரிந்து கொள்ளுவதும் மிகவும் நல்லது.

இப்படிப்பட்ட இந்திய அரசின் உரிமைப் பறிப்பை நன்றாக அறிந்த 70-75 அகவையினர் - இந்துக்களும்,

இஸ்லாமியர்களும், மற்ற மதத்தினரும் இந்தியாவிலும், ஜம்மு-காஷ்மீரிலும், ஆசாத் காஷ்மீரிலும், பாக்கித்தானிலும் இலட்சக்கணக்கில் உள்ளனர்.

இந்துத்துவக் கொள்கையின் கர்த்தாக்களுள் ஒருவரான தீனதயாள் உபாத்யாயா, கோல்வால்கர் தொடங்கி, இன்று உள்ள பிரதமர் மோடி வரையில்-மொத்த காஷ்மீரும் இந்தியாவுடன் இரண்டறக் கலந்து இணைந்து விட வேண்டுமெனக் கூவுகிறார்கள்.

இதை, பாக்கித்தானியரும், அமெரிக்கரும், ஜம்மு-காஷ்மீர் மக்களும் எப்போதும் அனுமதிக்கமாட்டார்கள்.

அதேபோல, ஜம்மு-காஷ்மீரை பாக்கித்தானோடு சேர்த்துக் கொள்ள வேண்டும் என, லியாகத் அலிகான் முதல்-புட்டோ, முஷ்ரஃப், இப்போதைய பிரதமர் ஷரீஃப் வரையில் மனதார இச்சிக்கிறார்கள்.

அதற்கு வழிகோலத்தான் அவ்வப்போது ஜம்மு-காஷ்மீர் எல்லைக்கோட்டைத் தாண்டியும், மலைமுகடு பகுதியிலும் பாக்கித்தானில் முறையாகப் பயிற்சி அளிக்கப்பட்ட பயங்கரவாதிகளையும், பட்டாளத்தையும் பாக்கித்தானியர் அனுப்புகின்றனர். இந்துமத வெறியர்களின் கோரிக்கையும், இஸ்லாமிய ஜிகாத்துகளின் கோரிக்கையும் ஒருபோதும் நிறைவேறாது,

மொத்த காஷ்மீரில் மூன்றில், ஒரு பகுதி-வடக்குப் பகுதி, 'ஆசாத் காஷ்மீர்'-அதாவது 'விடுதலை பெற்ற காஷ்மீர்' என உள்ளது. இது பாக்கித்தானின் ஒரு பகுதியாக-பாக்கித்தானின் நேரடி ஆளுகையின் கீழ் உள்ளது. மீதிப்பட்ட மூன்றில் இரண்டுபகுதி, 'ஜம்மு-காஷ்மீர், என, இந்தியாவின் ஒரு பகுதியாக உள்ளது.

இந்த காஷ்மீருக்கும்-ஆசாத் காஷ்மீருக்கும் இடையே "கட்டுப்பாட்டு எல்லைக்கோடு" (LoC), சர்வதேச எல்லைக்கோடு (IB) என இரண்டு எல்லைகள் உள்ளன. இவற்றைத்தாண்டி, லஷ்கர்-இ-தைபா (Lashkere-e-Thaiba) வைச் சார்ந்த 8 பேர், ஊரி (Uri) பகுதியில் ஊடுருவதற்காக வேவு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்" என்ற செய்தியை முன் கூட்டி, 15.9.2016 வியாழன் அன்றே, இந்திய அரசு உளவுத்துறையினர், இந்திய அரசின் உள்துறைக்கும், இராணுவத்துறையினர்க்கும் அறிவித்துவிட்டனர்.

ஊரியிலுள்ள இராணுவ தளத்தை, பக்கத்திலுள்ள மலைமுகட்டில் இருந்து, 2016 ஆகத்து 28 முதல் கூர்ந்து நோக்கி அறிந்திருக்கிறார்கள் பயராங்கவாதிகள். எனவே தக்க புலனாய்வின் பேரில், "ஊரி படைமுகாம்" என்பதில் நுழைய இருக்கிறார்கள்" என்பதையும் இராணுவ அதிகாரிகளுக்கு உளவுத்துறையினர் 15.9.2016 அன்றே தெரிவித்திருக்கிறார்கள்.

ஊரி படைமுகாம் எங்கே அமைந்திருக்கிறது என்பது பற்றிய நில வரைபடத்தையும் பயங்கரவாதிகள் வைத்திருந்தனர்.

அத்துடன் ஆர்.டி.எக்ஸ், டி.என்.டி. வெடி மருந்துகளை வைத்த கையெறி குண்டுகள், AK-47 துப்பாக்கிகள் 4, 12வது படைக்குழுவினர் தங்கியிருக்கும் இடம், பற்றிய விவரங்களையெல்லாம் பஷ்டு மொழியில் விவரமாக எழுதி வைத்திருந்தார்கள், பயரங்கவாதிகள். 4 பயங்கரவாதிகள் ஊரி படைத்தளத்தில், 18.9.2016 ஞாயிறு காலை 5.30 மணிக்கு, படைவீரர்கள் டீசல் மாற்றி நிரப்பிக் கொண்டிருந்த பொழுது நுழைந்து, கையெறி குண்டுகளை வீசினார்கள். ஒரு குண்டு டீசல் சேமிப்புக் கிடங்கின் மீது விழுந்தவுடன் கூடாரத்தில் தீப்பிடித்தது. அங்கு தூங்கிக் கொண்டிருந்த 13 வீரர்கள் தீயில் கருகிச் செத்தார்கள். உடனே பயங்கரவாதிகளுக்கும் படை வீரர்களுக்குமிடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் 6 படை வீரர்கள்-ஒரு படைத்தலைவர் உட்பட மாண்டனர். தற்கொலைப் படை பயங்கரவாதிகள் நால்வரும் 18.9.2016 ஞாயிறு காலை 8.30 மணிக்கு சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்கள் வைத்திருந்த ஆயுதங்கள் பாக்கித்தான் முத்திரையுடன் இருந்தன.

2002 மே முதல் இப்படி எல்லைதாண்டி நடக்கும் பயங்கரவாதிகளின் தாக்குதல் நடக்கிறது.

14.5.2002ல் கலுசாக் பகுதியில் மூன்று பயங்கரவாதிகள் நுழைந்து 3 படை வீரர்களையும், படைவீரர்களின் குடும்பத்தினர் 18 பேரையும், பொதுமக்கள் 10 பேரையும் சுட்டுக் கொன்றனர்.

அதனால், அப்போது பிரதமராக இருந்த வாஜ்பேயி, இந்திய எல்லையில் படைகளைக் குவித்துப் போரிட ஆயத்தமானார்; பாக்கித்தானும் அங்கு படையைக் குவித்தது. ஆனால் போர் மூளவில்லை.

2.1.2016 சனி, அதிகாலை 3.30 மணிக்கு, பஞ்சாபில், பத்தான்கோட்டிலுள்ள இராணுவ வானூர்தி நிலையத்துக்குள் 6 பயங்கரவாதிகள் புகுந்து, கண்மண் தெரியாமல் சுட்டு, 7 வான்படை வீரர்களைக் கொன்றனர்.

ஊரி படைத்தளம் பயங்கரவாதிகளால் தாக்கப்பட்ட செய்தி பரவிய உடனே, ஜம்மு-காஷ்மீர் பொதுமக்களும் இளைஞர்களும் தெருவுக்கு வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தங்களைக் கலைந்து போகச் சொன்ன படைவீரர்கள், மற்றும் காவலர்களை நோக்கிக் கற்களை எடுத்து வீசித்தாக்கினர்.

காஷ்மீரின் தெற்குப் பகுதியில், குல்காம் மாவட்டத்தில் 12.7.2016 அன்று 3000, 4000 பேர் கொண்ட மக்கள் கும்பல், காவல்நிலையத்துக்குள் புகுந்து, 2 காவலர்களைக் கடத்திக் கொண்டு போனது; 70 தானியங்கித் துப்பாக்கிகளைப் பறித்துக் கொண்டு போனது. கடத்திச் சென்ற இருகாவலர்களுக்கும் செமத்தியான அடி கொடுத்து, மக்கள் விடுவித்தனர்.

எப்போது ஜம்மு-காஷ்மீரில் வன்முறை வெடித்தாலும் 50, 60 காவலர்கள் மட்டுமே கலவர இடத்தில்

இருக்கிறார்கள்; ஆனால் மக்களோ 3000, 4000 பேர் கூடி விடுகிறார்கள். காவலர்களைக் கல்லால் அடித்தே சந்திக்கிறார்கள்; அஞ்சி ஓடுவதில்லை.

**ஹிஸ்புல் முஜாஹிதீன் பயங்கரவாத அமைப்பின் தளபதி புர்ஹான் வானி, 8.7.2016 வெள்ளி அன்று சுட்டுக்கொல்லப்பட்ட நாள் முதல், 30.9.2016 வெள்ளி முடிய கடந்த 85 நாள் களாக, ஜம்மு-காஷ்மீரில் அமைதி இல்லை.**

78ஆம் நாள் தான் சற்று அமைதி திரும்பியது. கடைகள், உணவு விடுதிகள், பள்ளிகள் திறக்கப்பட்டன.

ஆயினும் நிரந்தரமான அமைதி ஜம்மு-காஷ்மீரில் இப்போது வராது. ஏன்?

1. கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டில் (LoC) கம்பி வேலி மட்டுமே உள்ளது. முக்கிய இடங்களில் இரவு-பகல் காவலாளி (Security) இருப்பார்.

18.9.2016 காலை 5.30 மணிக்கு ஊரி படைத் தளத்துக்குள் நுழைந்த பயங்கரவாதிகள், கம்பிவேலி வலிவாக இல்லாத இடத்தில் கம்பிகளை அறுத்துவிட்டுத் தான் நுழைந்தனர்; அங்கு காவலாளியும் இல்லை.

2. ஜம்மு-காஷ்மீர் மக்கள் தொகை இன்று 70 இலக்கம், அங்கு பாதுகாப்புப் பணியில் உள்ள காவலர்கள் (Cops), எல்லைப் பாதுகாப்புப் படையினர் (B.S.F), அதிரடிப் படையினர் (C.R.P.F.) என, 2015 முதல் 7,50,981 பேர் உள்ளனர்.

3. ஆயினும் ஊரி பகுதியில், சர்வதேச எல்லையில் (International Border-IB) பாக்கித்தானில் இயங்கும் ஜெய்ஷ்-ஏ-முகமது இயக்கத்தைச் சேர்ந்த இருவர் 21.9.2016 புதன் அன்று பிடிபட்டனர் என்ற செய்தியை, 24.9.2016 சனி அன்று இந்திய இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

இப்படி இரண்டு எல்லைக்கோடுகள் வழியாகவும் பாக்கித்தான் பயங்கரவாதிகள் ஊடுருவுவதை எப்படித் தடுக்க முடியும்?

மேலும், "இந்த சர்வதேச எல்லைக்கோடு பிரச்சனையை, வேண்டுமென்றே நாங்கள் தீர்க்காமல் விட்டுவிட்டுச் சென்றோம்" என, 25 ஆண்டுகளுக்கு முன்னர் காஷ்மீருக்கு வந்த ஓர் ஆங்கிலேயே அதிகாரி கூறியதையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இப்போது ஜம்மு-காஷ்மீர் ஆட்சியிலிருக்கும் பி.டி.பி.-பி.ஜே.பி. கூட்டணி ஆட்சி, கட்டுப்பாட்டு எல்லைகளை ஒட்டி (LoC) 20,125 பதுங்கு குழிகளை (bunkers) அமைக்கப் போவதாகத் தொடக்கத்திலேயே கூறியது. அதுவும் நடைபெறவில்லை.

4. கள நிலைமை நிலவரப்படி, ஜம்மு-காஷ்மீர் மக்களில் 100க்கு 80 பேர் இஸ்லாமியர்கள்.

அரிசிங் ஆட்சியில், 1947 வரையில், இஸ்லாமியர்களுக்குப் படிக்க வசதி செய்யப்படவில்லை; அரசுப் பணிகளில்-காவலர், ஏவலர், எழுத்தர், ஆசிரியர் பணிகளில் கூட இஸ்லாமியர்கள் அமர்த்தப்படவில்லை.

இன்று படித்துள்ள முஸ்லீம்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் மிக அதிகம்.

இதைப் பயன்படுத்தி, இப்போது, 10,000 காவலர்களை, மாதம் தலைக்கு ரூ.6,000 ஊதியத்தில் அமர்த்தப் போவதாக இந்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அறிவித்துள்ளார்.

அத்திட்டத்தின் கீழ் ஜம்மு-காஷ்மீரைச் சேர்ந்த நபீல் அகமது வானி (26) என்கிற, உதம்பூரைச் சேர்ந்த இளைஞர், எல்லைப் பாதுகாப்புப் படையில் (B.S.F.) துணை அதிகாரி (Assistant Commandant) வேலைக்கான தேர்வில் முதல்நிலையில் தேர்ச்சி பெற்றுப் பணியில் சேர உள்ளார்.

அவரை, உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் தில்லிக்கு வரவழைத்து, 11.9.2016இல் நேரில் பாராட்டியுள்ளார்.

இப்போது நபீல் அகமது வானிக்கு என்ன பணி?

"ஜம்மு-காஷ்மீர் இளைஞர்களும் இளம் பெண்களும் கல்லைத் தூக்காதீர்கள்; எவ்வளவு அதிகம் படிக்க முடியுமோ படியுங்கள்; அப்போது நல்ல வேலை கிடைக்கும்; கல்லை விடுங்கள்-கல்வியைக் கைக் கொள்ளுங்கள்" என்கிற செய்தியை தொலைக்காட்சி செய்தியாளர்களிடம் உள்துறை அமைச்சர் 11.9.2016 அன்றே தெரிவித்தார்.

இந்தப் புதிய வானி, இதைச் செய்வாரா? எல்லையைக் காப்பாரா? நிற்க.

**இப்படிப்பட்ட தற்காலித் திட்டங்கள் வழியாக, ஜம்மு-காஷ்மீர் மக்களையும், விடுதலை கோரும் உள்ளூர் போராளிகளையும், அங்கு இயங்கி வரும் கட்சிகளையும் இந்திய அரசு இனியும் ஏமாற்ற முடியாது.**

**அங்குள்ள போராளிகள் பாதி அளவில் வட வியட்நாம் போராளிகளையும், பொதுமக்களையும் ஒத்தவர்கள்.**

**இந்திய அரசுக்குப் பொறுப்பும் அறிவும் இருந்தால், ஜம்மு-காஷ்மீர் மக்களுக்கு 17.11.1956 இல் நிறைவேற்றப்பட்ட ஜம்மு-காஷ்மீர் அரசமைப்பில் கண்டபடி, முழுத்தன்னுரிமை (Total Autonomy) வழங்கிவிட வேண்டும். இந்திய அரசின் கண்ணாமூச்சி விளையாட்டு இந்தியர்களை ஏமாற்றவே பயன்படும்.**

**தன்னுரிமை பெற்ற மாநிலங்களைக் கொண்ட உண்மையான கூட்டாட்சியாக இந்தியாவை மாற்றி விட வேண்டும். அமைதி வர, வேறு வழியே இல்லை.**

1-10-2016 - **வே.ஆனைமுத்து**

# வருகுதப்பா தீபாவளி.....

பெரியார் ஈ.வெ.ரா.

**வ**ருகுதப்பா தீபாவளி, வழக்கம்போல், நீ என்ன செய்யப் போகிறாய்?

தம்பி! பழைய சாத்திரம் இன்றைக்கு உதவாது; இன்றைக்கு ஏற்றபடி அது மாறவும் மாறாது. அதை ஒருத்தன் எடுத்து வைத்தால்தான் அல்லது அது அசைக்கப்பட்டால்தான் ஓர் இடத்திலிருந்து ஓர் இடத்திற்கு மாறும். அல்லது அதை ஒருவன் எடுத்து நமக்கு வேண்டாததை அடித்து வேண்டியதை எழுதினால் தான் திருந்தும்.

ஏன் அப்படிச் சொல்லுகிறேன்? அதற்கு உயிரில்லை, அது ஏடு; காகிதம் போன்ற அசேதன வஸ்து; சிந்திக்கும் தன்மை அற்றது.

"ஆதலால் சாத்திரம் சொல்லுகிறது. அந்தப்படிச் செய்கிறேன்" என்று நீ சொல்லுவாயானால், நீ சேதன (சிந்திக்கும் சக்தி உள்ள) வஸ்து ஆகிய மனிதன் என்றோ, அறிவுள்ளவன் என்றோ சொல்லிக் கொள்ள உனக்குச் சிறிதும் யோக்கியதை கிடையாது.

"சாத்திரம் பெரியவாள் எழுதினது" என்று சொல்லுவாயானால், நீ யார், சிறியவாளா? எந்தப் பெரியவாள்? "அந்தப் பெரியவாள்" காலத்தைவிட முட்டாள்தனமான-காட்டுமிராண்டித்தனமான காலத்திலா நீ பிறந்தாய்? போக்குவரத்துச் சாதனமில்லாத, விஷயஞானம் பெற வாய்ப்பும் சாதனமும் இல்லாத, கல்லாயுத காலத்திலா இருந்து வாழ்ந்து வருகிறாய்! ஆகவே அந்தக் காலத்தைவிட-அந்தக் காலத்துப் பெரியாரைவிட, நீ தாழ்ந்தவனாக இருக்க முடியாது. ஆதலால், சாத்திரம், பெரியவாள், வெகு காலத்திற்கு முன் ஏற்பட்டது என்கின்ற முட்டாள்தனத்துக்குத் தாயகமாக இருக்கும் பித்தலாட்டத்தில் இருந்து முதலாவதாக நீ வெளியில் வா!

"சாத்திரத்தைப் பற்றிக் கவலை இல்லை, பெரியவாளைப் பற்றிக் கவலை இல்லை. ஆனால், அந்தச் சாத்திரங்கள் கடவுளால் சொல்லப்பட்டது; உண்டாக்கப்பட்டது" என்று சொல்லுகிறாயோ? அப்படியானால் இப்படிச் சொல்லுகிறவனைப் போல் முட்டாள் மனித வர்க்கத்தில் ஒருவருமே இருக்க முடியாது என்பதோடு, இதைக் கேட்டு - நம்பி நடக்க ஆரம்பிக்கிறானே, அவனைப் போல் அடிமடையனும் வேறு இருக்க முடியாது என்று சொல்லுவதற்குத் தம்பி, நீ மன்னிக்க வேண்டும்.

கடவுள் இருக்கிறார் என்று வைத்துக் கொள்; கடவுள் சொன்னார் என்று வைத்துக் கொள், யாருக்குச் சொன்னார்? உனக்கா சொன்னார்? மனிதனுக்குச் சொன்னார் என்பாய். அப்படியானால் கிறித்தவருக்குச் சொன்னாரா? முசுலீமுக்குச் சொன்னாரா? பார்சிகனுக்குச் சொன்னாரா? அவற்றை நம்பாத நாத்திகனுக்குச் சொன்னாரா? எப்பொழுது சொன்னார்? அந்தக் காலத்தில் நீ இருந்



தாயா? பார்த்தாயா? அல்லது யார் பார்த்தது? கடவுள் சொன்னார் என்று இன்று உனக்குச் சொன்னவர்கள் யார்? சொன்னவர்களுக்குச் சொன்னவர்கள் யார்? சாத்திரம் கடவுளால் சொல்லப்பட்டது என்பதைச் சாத்திரமே சொன்னால் போதுமா? இவைகளையெல்லாம் யோசித்த பிறகல்லவா 'சாத்திரம் சொல்லுகிறது' என்பதையும், சாத்திரத்தைக் கடவுள் சொன்னார் என்பதையும், நீ மனிதனாய் இருந்தால் நம்ப வேண்டும். மாடாயிருந்தால் அல்லவா யோசியாமல் ஆம் என்று தலையாட்ட வேண்டும்? இந்த இருபதாவது நூற்றாண்டில் உனக்கு இதுகூடவா தம்பி தெரியவில்லை?

சாத்திர காலத்தைவிட இன்று கடவுள்கள் அருமை என்று நினைக்கிறாயா? எண்ணி முடியாத கடவுள்கள் தோன்றி இருப்பதோடு தோன்றியவண்ணம் தானே இருக்கின்றன. "கடவுள்களுடைய அற்புதங்கள்" இக்காலத்தில் நடக்காத நாள் எது? மனிதர்களிடத்தில் கடவுள்கள் பேசாத நாள் எது? (அன்னி) பெசண்ட் அம்மை இடம் பேசினார்கள், காந்தியாரிடம் பேசுகிறார்.

அசரீரியும் சோதனைகளும் நடக்காத நாள் எது? இப்படி எல்லாம் இருக்கும் போது, இக்காலத்தில் கடவுள் நேரில் வந்து உன்னையோ அல்லது என்னையோ கூப்பிட்டு நேரில், "அடே மக்களா! நான் தாண்டா சாத்திரம் சொன்னேன், சந்தேகப்படாதீர்கள்" என்று சொல்லித் தொலைத்தால், பிறகு உலகில் ஏதாவது கலவரம் இருக்க முடியுமா?

அல்லது ரமண ரிஷிகள் என்ன, சாயிபாபாக்கள் என்ன, மகாத்மாக்கள் என்ன, மற்றும் தெய்வீக சக்தி பெற்றவர்கள் என்று சொல்லப்படும் மகான்கள் என்ன - இத்தனை பேர்களில் யாரிடமாவது ஒரு வார்த்தை சொல்லித் தொலைக்கக் கூடாதா?

இவ்வளவு தகராறு, தர்க்கம், கலகம் நடந்து ஒருத் தன்மேல் ஒருத்தன் கல், சாணி, செருப்பு எறிந்து அடிதடி நடந்து போலீசு வந்து மக்கள் சீரழிகின்ற காலத்தில் தைரியமாய் அல்லது கருணை வைத்து வெளிவந்து நிலைமையை விளக்க முடியாத சுவாமிகள், இனி வேறு எந்தக் காலத்திற்குப் பயன்படப் போகிறார்கள்?

ஆகையால், ‘‘கடவுள் சொன்னது சாத்திரம்’’ என் பதைக் கட்டி வைத்துவிட்டு, உன் அனுபவத்தையும் அறிவையும் பயன்படுத்தித் தீபாவளியைப் பற்றி யோசித் துப்பார். அப்பா - தயவு செய்து கோபியாதே தம்பி!

‘‘கோபம் செய்தால் எமன் கொண்டோடிப் போவான்’’ என்று சொன்னது சரியல்ல; கோபம் செய்தால் நீ ஏமாந்து போவாய் என்று நான் கூறுகிறேன். ஆகவே அறிவுக்கண்ணுடன் நாடு, இனம், மானம் ஆகியவை களின்மீது பற்றுவைத்துத் தீபாவளியைப் பற்றிச் சிந் தித்துப் பார்!

**தீபாவளிக் கதை :**

தீபாவளிக் கதை பற்றி சுமார் 10 வருடங்களுக்கு மேலாக எழுதியும் பேசியும் வருகிறோம். ஆதலில் விரித்து எழுத வேண்டியதில்லை என்றாலும் குறிப்புக் கொடுக்கின்றோம்.

இந்த தீபாவளிக் கதை மிகவும் அதிசயமானதும், ஆபாசமானதும், இழிவும், ஈனத்தன்மையும் பொருந் தியதாகும்.

மகாவிஷ்ணுவுக்கு வாயில் காப்பாளராக இருந்த இரண்டு காவலர்கள் உத்தரவின்றி உள்ளே விட மறுக்கப்பட்ட இரண்டு பேர் பிராமணர்கள் சாபத்தால், இரணியன் - இரணியாட்சதன் என்று இரண்டு இராட்ச தர்களாகப் பிறந்து விஷ்ணுவால் கொல்லப்பட்டு, சீக்கிரம் மோட்சமடைய வேண்டுமென்று ஏற்பட்டுவிட்டதற்கிணங்க, மூத்தவன் தேவர்களுக்குத் தொல்லைக் கொடுத்து வந்தான்; இளையவன் பூமியை பாயாகச் சுருட்டி எடுத்துக் கொண்டு ஓடி, சமுத்திரத்திற்குள் நுழைந்து கொண்டான்.

தேவர்கள் வேண்டுகோளால் மூத்தவனைக் கொல்ல மகாவிஷ்ணு நரசிம்ம (சிங்க) அவதாரம் எடுத்து வந்து கொன்றுவிட்டார். இளையவனான இரண்யாட் சனைக் கொல்ல மகாவிஷ்ணு வராக (பன்றி) அவ தாரம் எடுத்து வந்து, சமுத்திரத்திற்குள் பாய்ந்து, இரண் யாட்சனைக் கொன்று பூமியைக் கொண்டுவந்து பழையபடி விரித்துவிட்டுப் போய்விட்டார்.

இதுவரை, கதையில் அதிசயம் அதாவது பொய்யும் புளுகும் இருக்கலாமே தவிர, இதில் ஆபாசமில்லை; இனிமேல் நடப்பதுதான் ஆபாசம்.

என்னவென்றால், விஷ்ணு பல அவதாரம், பல ரூபம் எடுத்து இருக்கிறார். அவற்றுள் பெரும்பாகம் ஆபாசமாகவே முடிகின்றன.

விஷ்ணு அசுரர்களால் கடைந்து எடுக்கப்பட்ட அமிர் தத்தை வஞ்சித்துத் தேவர்களுக்குக் கொடுப்பதற்காக - அசுரர்களை ஏமாற்ற, மோகினி அவதாரம் எடுத்தார். அந்தக் காரியம் தீர்ந்தவுடன் சிவனுக்கு அந்த மோகினி அவதாரத்தின்மீது ஆசை வந்து, அவர் பின் திரிந்து - மோகினி இணங்காமல் போய், இருவரும் பலாத்காரம் செய்து, சிவன் இந்திரியம் பூமியில் கொட்ட - அந்த இந்திரியம் பூமியில் வெள்ளி, தங்கமாக வேர் இறங்கி விட்டன. அதுதான் இன்று வெள்ளியும் தங்கமுமாம்.

மற்றொரு சமயம், சிவன் பத்மாசூரனுக்கும் வரம் கொடுத்ததால் அவன் சிவன் தலையிலேயே கையை வைத்துச் சிவனைக் கொல்ல வர, சிவன் ஓடி ஒளிந்து விஷ்ணுவைக் கூப்பிட, விஷ்ணு மோகினி அவதார மெடுத்துத் தந்திரம் செய்து பத்மாசூரனை இறக்கும் படிச் செய்துவிட்டுத் திரும்புகையில் சிவன் அவளைப் புணர்ந்தானாம். அப்போது அய்யப்பன் பிறந்தார்.

இப்படியுள்ள கதைகள் போலவே, விஷ்ணு பன்றி அவதாரமெடுத்து இரண்யாட்சதனைக் கொன்றுவிட்டுத் திரும்பும் காலையில், பன்றி தான் கொண்டு வந்த பூமியைத் தனக்கு என்ன வேண்டுமானாலும் செய்ய உரிமை இருக்கிறதென்று கருதி, அந்தப் பூமியையே அந்தப் பன்றி புணர்ந்ததாம். பூமியும் அதற்குச் சம்மதித்து இடம் கொடுத்ததாம். அப்போது பூமி கர்ப்பமாகி ஒரு குழந்தையையும் பெற்றுவிட்டதாம். அக்குழந்தைக்கு நரகாசூரன் என்று பெயர் இட்டார்களாம். ஏன் அப் பெயர் இட்டார்கள் என்றால், நரகலைச் சாப்பிடுகின்ற பன்றிக்கும் நரகலைச் சுமக்கின்ற பூமிக்கும் குழந் தையாகப் பிறந்தால் ‘நரகன்’ என்று பெயர் இடாமல் வேறு என்ன பெயர் இடுவார்கள்?

இப்படிப் பிறந்த இந்தக் குழந்தை வங்காளத்துக்கும், அசாமுக்கும் மத்தியில் உள்ள ஒரு பிரதேச அரசனாக இருந்துகொண்டு, பிரம்மாவின் மனைவி காதணியையும் வருணனின் ஆயுதத்தையும் பிடுங்கிக் கொண்டு, இந்திரனின் சிம்மாசனத்தையும் தூக்கிவர எத்தனித் தானாம்; அதோடு தேவர்களுக்குத் தொல்லைக் கொடுத் தானாம்; உலகத்தையும் துன்புறுத்தினானாம். தேவர் களுக்காகக் கிருஷ்ண பகவான் வந்து இந்த அசுரனை வதம் செய்தாராம். அந்த நாளைக் கொண்டாடுவது தான் தீபாவளியாகும்.

இது என்ன கதை? இதில் அறிவு, மானம் இருக்கிறதா?

இரண்யாட்சன் பூமியைச் சுருட்டித் திருடிக் கொண்டு போகக் காரணம் என்ன?

பூமி தட்டையாய் இருந்தாலல்லவா சுருட்ட முடியும்? அதுதான் உருண்டை ஆயிற்றே! பூமியை உருட்டிக் கொண்டல்லவா போயிருக்க வேண்டும்?

அப்படியே சுருட்டினதாக வைத்துக் கொள்வதா னாலும், சுருட்டினவன் எங்கே இருந்துகொண்டு பூமியைச் சுருட்டி இருப்பான்? ஒரு சமயம் ஆகாயத்தில் தொங்கிக் கொண்டு சுருட்டி இருந்தாலும் பூமியில் இருந்த மலை, சமுத்திரம், ஆறு, ஜீவப்பிராணி முதலிய சகலமும் தானே பாயாகச் சுருட்டப்பட்டு பாய்க்குள், சிக்கி இருக்க வேண்டும்? அப்படி இருக்க, அவன் பூமியைத் தூக்கிக் கொண்டு ஓடி ஒளிய சமுத்திரம் ஏது? வேறு சமுத்திரம் இருந்தால் அது எதன்மீது இருந்திருக்கும்?

அப்படியே வைத்துக் கொண்டாலும் இந்தப் பூமி யைத் திருப்பிக் கொண்டுவர விஷ்ணு அவதாரம் எடுப்பானேன்? அதுவும் பன்றி அவதாரம் எதற்கு? அப்போது அது ஆகாரமாக எதைத் தின்று இருக்கும்? எதையோ தின்று தொலைந்து போகட்டும்!

இந்தப் பன்றி பூமியைப் புணர ஆசைப்படுவா னேன்? கொண்டு வந்ததற்குக் கூலியா? அப்படியே தான் இருக்கட்டும். இதற்கு இந்தப் பன்றியுடன் போகம் செய்ய பூமாதேவி இணங்கலாமா? இது என்ன கதை? திராவிட மக்களை அசுரன், இராட்சதன், அரக்கன் என்று கூறி அவர்களை இழிவு செய்ய எழுதினதல்லாமல் வேறு என்ன இது?

வங்காளத்தில் ஆரியர் வரும் முன்பு திராவிடர்கள் தானே ஆண்டுகொண்டிருக்க வேண்டும்? ஆரியர்கள், திராவிடர்களைக் கொல்வதனால் மானம், வெட்கம் பார்க்காமல் மிருகங்களுடன் புணர்ந்தாலும் சரி, மலத் தைத் தின்னாலும் சரி, "எப்படியான இழிவான அசிங்கமான காரியத்தைச் செய்தாவது கொல்லலாம்" என்கின்ற தர்மத்தை ஆரியர்களுக்குப் போதிக்க வந்த மநுநூல் போன்ற ஒரு கோட் (Code) தானே ஒழிய, இப்புராணங்களுக்கு வேறு என்ன கருத்துச் சொல்ல முடியும்?

ஆகவே, அப்பேர்ப்பட்ட கதையில் ஒன்றான நரகா சூரன் கதையை நம்பி நாம் பண்டிகை கொண்டாட லாமா? நாம் திராவிடர் அல்லவா? நம் கடவுள்கள் மலம் தின்பதையும், நம் பெண் கடவுள்கள் பன்றியுடன் புணர்ச்சி செய்வதையும் ஒப்புக்கொள்ள நம்மால் முடியுமா? ஒப்புக்கொள்ளலாமா? நமக்கு மானம், வெட்கம், புத்தி ஒன்றுமே கிடையாதா?

**நம் தலைவனைக் கொன்றதை நாம் கொண் டாடும் அளவுக்கு மானம், ஈனம் அற்றவர்களா நாம்! நாம் வீரத்திராவிடர் அல்லவா? நம் இன மக்கள் தீபாவளி கொண்டாடலாமா? கண்டிப் பாய்க் கொண்டாடாதீர்கள். கொண்டாடுவதானால், இந்தக் கதை கொண்ட புத்தகங்களை வாங்கி நடு வீதியில் வைத்து ஆண்கள் மிதியடியால் மிதிமிதியென்று மிதியுங்கள்; பெண்கள் முறத் தால் மொத்து மொத்து என்று மொத்துங்கள்.**

("குடிஅரசு" சித்திரபுத்திரன் என்ற பெயரில் கட்டுரை, 7-10-1944. பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனை கள் இரண்டாம் பதிப்பு பக்கம் 4080-4084)

# என் அன்பு அண்ணியார் கு.இராமாமிர்தம் மறைந்தார்

கடலூர் மாவட்டம் நெய்வேலியை அடுத்த முத்துகிருஷ்ணாபுரத்தில் பிறந்தவரும், விழுப்புரம் அரசு சார் கருவூல அதி காரியாக இருந்தவரு மான சி.குருசாமியின் துணைவியார் இராமாமிர்தம் அம்மை யார், தம் 86ஆம் அக வையில் 16-9-2016 வெள்ளி அன்று மறை வுற்றார் என்பதை 27.9.2016 அன்று அறிந்து வேதனைப்பட் டேன்.



வேலூர் கந்தசாமி கண்டர் உயர்நிலைப் பள்ளியில் 11 வகுப்புத் தேர்வு எழுதிய முதல் குழு (First Set) மாணவர்களுள் முதன் மையானவர், சி.குருசாமி.

1945இல் தேர்ச்சி பெற்றவுடன், சென்னை பி அண்டு சி ஆலையில் தலைமை அலுவலகத்தில் எழுத்தர் பணியில் சேர்ந்தார். பின்னர் அரசுப் பணி கிடைத்தது. கள்ளக்குறிச்சி மாவட்ட முன்சீப் நீதி மன்றம், கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எனப் பணியாற்றி, விழுப்புரம் சார் கருவூல அதிகாரியாக இருந்தபோது நெஞ்சடைப்பில் மறைந்தார்.

என் உடன் பிறவாத உண்மை அண்ணனாக விளங்கியவர், சி.குருசாமி. அவருடைய திருமணத் தில் நான் பங்கேற்றேன். அன்று முதல் அவருடைய அன்புத் துணைவியார் இராமாமிர்தம் அவர்கள் நல்ல அண்ணியாராக இருந்து எண்ணற்ற தடவைகள் எனக்கு உணவளித்தார். 1954 ஆகத்தில், என் திரு மணத்தில் மணமகள் சு.சுசீலாவுக்கு அவர்தான் பெண் தோழியாக விளங்கினார்.

அன்னார் தாம் பெற்ற 3 மகன்களையும், மருமகள் களையும், 3 மகள்களையும், மருமகன்களையும் பெயரக் குழந்தைகளையும் தம் தமையன்மார் குடும்பங் களையும் தவிக்கவிட்டு மறைந்துவிட்டார்.

அன்னாரை இழந்து துயருறும் அனைவர்க்கும் என் குடும்பத்தின் சார்பிலும், மா.பெ.பொ.க. சார்பிலும் ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் உரித்தாக்கு கிறேன்.

**வாழ்க கு.இராமாமிர்தம் புகழ்!**

**- வே. ஆனைமுத்து**

# ஏக இந்தியா எனும் ஏகாதிபத்திய ஒற்றைச்சிமிழுக்குள் பல்வேறு தேசிய இனங்களை அடக்கி ஒடுக்குவதற்கான வஞ்சக சூழ்ச்சியே,

# தேசிய தகுதிகாண் நுழைவுத்தேர்வு

- க. முகிலன்

மருத்துவப் படிப்புக்கான தகுதிகாண் பொது நுழைவுத் தேர்வு (NEET) அடிப்படையில், தனியார் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை நடைபெறல் குறித்து என். இராமநாதன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு பொதுநல வழக்குத் தொடுத்தார். அவருடைய விண்ணப்பத்தில், பொது நுழைவுத் தேர்வு முடிவில் கண்டுள்ள மதிப்பெண் தரவரிசையின்படி ஒற்றைச் சாரள அடிப்படையில் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் முதலாம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை, தமிழ்நாட்டு அரசின் மருத்துவக் கல்வி இயக்குநரகத்தின் கண்காணிப்பின்கீழ் நடத்தப்பட வேண்டும் என்று தமிழ்நாட்டு அரசுக்கு உயர் நீதிமன்றம் ஆணையிட வேண்டும் என்று என். இராமநாதன் கோரியிருந் தார்.

மேலும், தற்போது ஒவ்வொரு தனியார் மருத்துவக் கல்லூரிக்கும் மாணவர்கள் தனித்தனியே விண்ணப்பித்து வருகின்றனர். ஒருங்கிணைந்த தன்மையில் இதை ஒழுங்குபடுத்துவதற்கான - முறையான எந்தவொரு நடைமுறையும் வகுக்கப்படவில்லை. அதனால் மாணவர் சேர்க்கையின் வெளிப்படைத் தன்மை வினாக்குறியாக நிற்கிறது என்று என். இராம நாதன் தன்னுடைய விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி எஸ்.கே. கவுல், நீதிபதி ஆர். மகாதேவன் ஆகியோரைக் கொண்ட முதல் அமர்வு, 19.9.2016 அன்று இந்த வழக்கைத் தள்ளுபடி செய்தது. பொதுநல வழக்கைத் தொடுத்த என். இராமநாதன், தான் தெரிவித்துள்ள கருத்துக்கு ஆதாரமாகத் திட்டவட்டமான சான்று எதையும் அளிக்கவில்லை. வெறும் ஊகத்தின் அடிப்படையிலேயே தன் கருத்தை முன்வைத்துள்ளார். இவர் மருத்துவக் கல்வி சார்ந்த வல்லுநரோ அல்லது பாதிக்கப்பட்டவரோ அல்ல. இவர் தொடுத்த வழக்கு பொய்யானது மட்டுமல்லாமல், விளம்பரம் தேடும் வகையில் பாற்பட்டதாகவும் இருக்கிறது என்று கூறி நீதிபதிகள் இந்த வழக்கைத் தள்ளுபடி செய்வதற்கான காரணங்களாகக் கூறியுள்ளனர். இதில், நீதிபதிகள் பொறுப்பற்ற தன்மையில் கருத்துரைத்துள்ளனர் என்றே கருத வேண்டியுள்ளது.

ஏனெனில், மருத்துவப் படிப்புக்கான நுழைவுத் தேர்வு முறையை முற்றிலுமாக நீக்கிடக் கோரி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த, 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர் ஈ. சுரேஷ் என்பவர் பொது நுழைவுத் தேர்வை நீக்கிடக் கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். உச்சநீதிமன்ற நீதிபதிகள் அனில் ஆர். தவே, யு.யு. லலித், எல். நாகேசுவரராவ் ஆகியோர் அடங்கிய அமர்வு முன், 9.9.2016 அன்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. நுழைவுத் தேர்வுக்கு எதிராக வந்துள்ள மற்ற விண்ணப்பங்களுடன் இது சேர்த்து விசாரிக்கப்படும் என்றும், இந்திய மருத்துவக் கவுன்சில், நடுவண் அரசு மற்றும் தமிழ்நாடு அரசு ஆகியவை இதற்கு நான்கு வாரங்களுக்குள் பதில் அளிக்குமாறு அறிவிக்கை அனுப்புமாறும் ஆணையிட்டனர்.



*பொதுநுழைவுத் தேர்வுக்கு எதிராகத் தமிழக மருத்துவர்கள் நடத்தியப் போராட்டம்*

உச்சநீதிமன்றம் இதற்குமுன் வழங்கிய தீர்ப்புகள் சிலவற்றில் பொதுமக்களின் உணர்வுகளும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன என்று கூறப்பட்டுள்ளது. ஆகவேதான் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் என். இராமநாதன் வழக்கைத் தள்ளுபடி செய்யுமுன்,

சமூகத்தில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதைக் கருத்தில் கொள்ளவில்லை என்று நாம் கூறுகிறோம்.

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் பொறுப்பற்ற தன்மையில் ஒற்றைச் சாரள முறையில் மாநில அரசின் கண்காணிப்பின்கீழ் மருத்துவப் படிப்பில் மாணவர் சேர்க்கை நடைபெற வேண்டும் என்ற கோரிக்கை விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்தனர் என்கிற கருத்துக்கு வலிமை சேர்க்கும் வகையில் 21.9.2016 அன்று உச்சநீதிமன்றம் ஓர் ஆணையை பிறப்பித் துள்ளது.

மத்தியப்பிரதேச மாநிலத்தில் தனியார் மருத்துவக் கல்லூரிகளே கலந்தாய்வை (counselling) நடத்தி மருத்துவப் படிப்புக்கான மாணவர் சேர்க்கையை நடத்தின. இதை எதிர்த்து மத்தியப் பிரதேச மாநில அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. உச்சநீதி மன்ற நீதிபதிகள் அனில் ஆர். தவே, ஏ.கே. சிக்ரி, ஆர்.கே. அகர்வால், ஆதர்ஷ்குமார் கோயல், ஆர். பானுமதி ஆகியோர் அடங்கிய அரசமைப்புச்சட்ட அமர்வு இதை விசாரித்தது. இந்த அமர்வின் தலைவர் அனில் ஆர். தவே, "எந்தவொரு தனியார் மருத்துவக் கல்லூரி யிலோ அல்லது பல்கலைக்கழகத்திலோ கலந்தாய்வு நடத்தப்பட்டு, அதன்மூலம் மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கை மேற்கொள்ளப்பட்டிருந்தால் அவை அனைத்தையும் இரத்து செய்கிறோம். மருத்து வப் படிப்புக்கான பொது நுழைவுத் தேர்வை இந்தக் கல்வி ஆண்டே நடத்தவேண்டும் என்று நாங்கள் ஆணையிட்ட போது, மாநில அரசுகளின் கண்காணிப் பின்கீழ் ஒற்றைச் சாரள முறையிலான கலந்தாய்வு மூலம் மட்டுமே மாணவர் சேர்க்கை நடைபெற வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தோம். எனவே மத்தியப் பிரதேசத்தில் மாநில அரசின் கலந் தாய்வின் மூலம் செப்டம்பர் 30ஆம் நாளுக்குள் மாண வர் சேர்க்கையை முடிக்க வேண்டும்" என்று ஆணை யிட்டார்.

மருத்துவப் படிப்புக்கான பொது நுழைவுத் தேர்வின் முடிவு 16.8.2016 அன்று வெளியானதும் கேரள மாநில முதலமைச்சர் பிரணாய் விசயன், கேரளத்தில் தனியார் மருத்துவக் கல்லூரிகளிலுள்ள நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களுக்குப் பொது நுழைவுத் தேர்வின் மதிப்பெண் தரவரிசை அடிப்படையில் ஒற்றைச் சாரள முறையில் கலந்தாய்வு மூலம் மாநில அரசு மாணவர் சேர்க்கையை நடத்தும் என்கிற ஆணையைப் பிறப்பித்தார். பஞ்சாப் மாநில முதலமைச்சரும் இவ்வாறு அறிவித்தார். ஆனால் கேரளத்தில் உள்ள தனியார் மருத்துவக் கல் லூரிகளின் சங்கம், கேரள அரசின் ஆணையை எதிர்த்து கேரள உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது.

கேரள உயர்நீதிமன்றம், "மாநில அரசு, தனியார் மருத்துவக் கல்லூரிகளின் நிர்வாக ஒதுக்கீட்டு இடங் களுக்கு ஒற்றைச் சாரள முறையில் கலந்தாய்வு நடத்த வேண்டும் என்பதை நடுவண் அரசு நிபந்தனையாக விதிக்கவில்லை" என்று தனியார் கல்லூரிகளில் வைத்த வாதத்தை ஏற்றுக்கொண்டு, அரசின் ஆணையை இரத்து செய்தது.

**பொது நுழைவுத் தேர்வின் அடிப்படையில் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை குறித்து, இவ்வளவு குழப்பம் இருப் பதற்கு காரணம் நடுவண் அரசோ, உச்சநீதி மன்றமோ இதுகுறித்து ஒரு திட்டவட்டமான நெறிமுறையை வகுக்காததே ஆகும்.**

நடுவண் அரசு, மாநில அரசுகளின் கீழ் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை என் பதைத் தன்னுடைய அதிகாரத்தின்கீழ் கொண்டுவந்து விடவேண்டும் என்கிற ஏகாதிபத்திய எண்ணத்தால் எப்படியும் பொது நுழைவுத் தேர்வை இந்தக் கல்வி ஆண்டே நடத்திட வேண்டும் என்று துடியாய்த் துடித் தது. அதனால்தான் இந்தக் கல்வி ஆண்டே பொது நுழைவுத் தேர்வை நடத்த வேண்டும் என்று பார்ப்பன - மேல்சாதி ஆதிக்க வர்க்கத்தின் "சங்கல்பம்" என்கிற தொண்டு நிறுவனம் தொடுத்த வழக்கின் விசாரணை, 27.4.2016 அன்று உச்சநீதிமன்றத்தில் நடைபெற்ற போது, நடுவண் அரசின் வழக்குரைஞர், இந்திய மருத்துவக் கல்விக் குழுவின் (MCI) வழக்குரைஞர், நுழைவுத் தேர்வை நடத்தும் பொறுப்பில் உள்ள மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தின் (CBSE) வழக்குரைஞர் மூவரும் இந்தக் கல்வி ஆண்டிலேயே (2016-17) மருத்துவப் படிப்புக்குப் பொது நுழைவுத் தேர்வை நடத்திட அனைத்து ஏற்பாடுகளும் அணிய மாக இருப்பதாக உறுதி கூறினர். அப்போதுகூட தனியார் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை எவ்வாறு நடத்துவது என்பதற்கான வழிமுறையைப் பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை.

நுழைவுத்தேர்வு குறித்த அட்டவணையை நடு வண் அரசு உச்சநீதிமன்றத்தில் அளித்தது. அதன் அடிப்படையில் உச்சநீதிமன்றம் 28.4.2016 அன்று இந்தக் கல்வி ஆண்டே மருத்துவப் படிப்புக்கான பொது நுழைவுத் தேர்வு நடத்த வேண்டும் என்று அறிவித்தது. அதன்படி 1985 முதல் மாநிலங்களிடமிருந்து நடுவண் அரசு பறித்துக் கொண்ட 15 விழுக்காடு இடங்களுக்கு 1.5.2016 அன்று நுழைவுத் தேர்வு நடக்கும். மீதி 85 விழுக்காடு இடங்களுக்கு 24.7.2016 அன்று நுழைவுத் தேர்வு நடக்கும். இவ்விரு கட்ட நுழைவுத் தேர்வின் முடிவுகள் 17.8.2016க்குள் வெளியிடப்பட வேண்டும். மாணவர் சேர்க்கை 30.9.2016க்குள் முடிக்கப்படட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் ஆணையிட்டது.

உச்சநீதிமன்றத்தின் அறிவிப்பு வெளியான பின், அரசு மருத்துவக் கல்லூரிகளுக்குப் பொது நுழைவுத் தேர்வு கூடாது; மாணவர் சேர்க்கை அதிகாரம் மாநிலங் களிடமே இருக்க வேண்டும் என்று கூறிப் பல மாநில அரசுகள் எதிர்த்தன. எனவே இந்தக் கல்வி ஆண்டிற்கு மட்டும் பொது நுழைவுத் தேர்விலிருந்து மாநில அரசு

களின் கல்லூரிகளுக்கு விலக்கு அளிக்கும் அவசரச் சட்டத்தை நடுவண் அரசு 20.5.2016 அன்று பிறப்பித்தது. அதன்படி தமிழ்நாட்டில் பனிரெண்டாம் வகுப்பின் மதிப்பெண் தரவரிசைப்படி மாநில அரசின் மருத்துவக் கல்லூரி இடங்களுக்கும், தனியார் மருத்துவக் கல்லூரிகள் அரசுக்கு ஒப்படைத்த இடங்களுக்கும் ஒற்றைச் சாரளக் கலந்தாய்வு மூலம் மாணவர் சேர்க்கை நடந்தது.

**19.7.2016 அன்று மக்களவையில் அவசரச் சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்படவும், அடுத்த ஆண்டு முதல் மாநில அரசுகளின்கீழ் உள்ள மருத்துவப் படிப்புக்கான இடங்கள் உள்ளிட்ட அனைத்து இடங்களுக்கும் சேர்த்து தகுதிகாண் பொது நுழைவுத் தேர்வு நடத்தப்படவும் சட்டத் திருத்தம் நிறைவேறியது. மாநிலங்கள் அவையில் 1.8.2016 அன்று இச்சட்டங்கள் நிறைவேறின. பொது நுழைவுத் தேர்வு குறித்த விசாரணை உச்சநீதிமன்றத்தில் இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. இதன்மீது உச்சநீதிமன்றம் இறுதியான தீர்ப்பு வழங்காத நிலையில், எப்படி நடுவண் அரசு இதற்கான சட்டங்களை நிறைவேற்றலாம்? மாநில உரிமைகளைப் பறிக்க வேண்டும் என்கிற அதிகார வெறிதானே இதற் குக் காரணம்!**

இரண்டு கட்டங்களாக நடைபெற்ற நுழைவுத் தேர்வில் 7,31,223 பேர் தேர்வு எழுதினர். இவர்களில், 4,09,477 பேர் தேர்ச்சி பெற்று, மருத்துவக் கல்லூரிகளில் சேருவதற்கான தகுதியைப் பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டது. இவர்களின் மதிப்பெண் தர வரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டது.

இந்தியாவில் மொத்தம் 412 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. 190 அரசுக் கல்லூரிகளில் 25,880 இடங்கள்; 222 தனியார் கல்லூரிகளில் 26835 இடங்கள் என மொத்தம் 52715 இடங்கள் உள்ளன.

நுழைவுத் தேர்வின் முடிவு வெளியாவதற்கு ஒரு கிழமைக்குமுன் 9.8.2016 அன்று நடுவண் அரசின் மக்கள் நலவாழ்வு அமைச்சகத்திலிருந்து மாநில மக்கள் நலவாழ்வுத் துறையின் செயலாளருக்கு ஒரு மடல் அனுப்பப்பட்டது. அதில், மாநில அரசுகள் விரும்பினால், தனியார் மருத்துவக் கல்லூரிகளின் மாணவர் சேர்க்கையை கலந்தாய்வு மூலம் நடத்திக் கொள்ளலாம் என்று கூறப்பட்டிருந்தது. திட்டவட்டமான நெறிமுறையாக எதையும் கூறவில்லை. மேலும் பொது நுழைவுத் தேர்வை நடத்துவதற்கு அணியமாக இருப்பதாக உச்சநீதிமன்றத்தில் உறுதியளித்த நடுவண் அரசின் மக்கள் நலவாழ்வு அமைச்சகமோ, இந்திய மருத்துவக் கல்விக் கழகமோ (MCI), மத்திய இடைநிலைக் கல்வி வாரியமோ தத்தம் இணைய தளத்தில் மாணவர் சேர்க்கை குறித்த வழிமுறையை வெளியிடவில்லை.

ஆனால் மாநிலங்களிலிருந்து பறித்த 15 விழுக்காடான - 3521 இடங்களுக்கு மட்டும் நடுவண் அரசு கலந்தாய்வு மூலம் மாணவர் சேர்க்கையை நடத்தியது.




ஆனால் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் எஞ்சியிருந்த 85 விழுக்காடு இடங்களுக்கு - அதாவது 26,500 இடங்களுக்கு மாணவர் சேர்க்கையை எவ்வாறு நடத்த வேண்டும் என்று திட்டவட்டமான தன்மையில் அறிவிக்காமல் விட்டது வேண்டுமென்றே செய்த அயோக்கியத்தனமாகும். அப்போது தான் தனியார் மருத்துவக் கல்லூரிகள் மருத்துவப் படிப்புக்கான இடங்களை ஏலத்தில் விட்டு பெருங் கொள்ளையடிக்க முடியும் அல்லவா!

அதனால், தேசிய தகுதிகாண் மற்றும் நுழைவுத் தேர்வின் தரவரிசைப் பட்டியல் அடிப்படையில் மாணவர்களுக்கான சேர்க்கை நடத்த தனியார் மருத்துவக் கல்லூரிகள் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங் களுக்கு இந்திய மருத்துவக் கல்விக் குழு (MCI) அனுமதி வழங்கியுள்ளதாகவும், மாணவர்களே தாங்கள் படிக்க விரும்பும் மருத்துவக் கல்லூரியைத் தேர்வு செய்து கொள்ளலாம் என்றும் செய்திகள் நாளேடுகளில் (தி இந்து, 22.8.2016) வெளிவந்தன. தனியார் மருத்துவக் கல்லூரிகளும், நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களும் இதே தன்மையில் விளம்பரங்கள் செய்தன.

அதேசமயம் மருத்துவப் படிப்புச் சந்தையில் இடங்களின் விலை மிகவும் உயர்ந்தது. கடந்த ஆண்டு கல்விக் கட்டணம் உருபா நான்கு அல்லது ஐந்து இலட்சம் என்று இருந்தது. இவ்வாண்டு நுழைவுத் தேர்வின் முடிவுக்குப்பின் இது ரூ.15 இலட்சம் முதல் ரூ.20 இலட்சம் வரை என்று உயர்த்தப்பட்டுள்ளது. ஒரு கோடி உருபாவுக்கு மேல் செலவிடக்கூடிய பெரும் பணக்காரர் வீட்டுப் பிள்ளைகள் மட்டுமே மருத்துவப் படிப்பில் சேர முடியும். தமிழ்நாட்டில் ரூ.15 இலட்சம், ரூ.20 இலட்சம் என ஆண்டுக்கட்டணம் செலுத்தி மாணவர்கள் சேர்ந்து வருகின்றனர். கடந்த ஆண்டுகளில் நன்கொடை என்ற பெயரில் ஒரே தடவையாக ரூ.50 இலட்சம் முதல் 70 இலட்சம் என்று தொடக்கத்திலேயே வாங்கியதை இப்போது கல்விக் கட்டணம் என்ற பெயரில் அய்ந்தரை ஆண்டுகளில் பிரித்து வாங்கப் போகிறார்கள். கல்விக் கட்டணம் தவிர, வேறு பெயர் களில் மேலும் சில இலட்சம் வாங்கப்படும்.

தனியார் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையில் தனக்குள்ள அதிகார வாய்ப்பைப் பயன் படுத்துவது பற்றியோ, கல்விக் கட்டணக் கொள்ளை பற்றியோ தமிழ்நாடு அரசு அக்கறை ஏதும் காட்ட வில்லை. மத்தியப் பிரதேச மாநிலத்தில் தனியார் கல்லூரிகளே நடத்திக் கொண்ட கலந்தாய்வு மூலம் நடந்துள்ள மாணவர் சேர்க்கை செல்லாது என்றும், செப்டம்பர் 30க்குள், ஒற்றைச் சாளர முறையில், நுழைவுத் தேர்வின் தரவரிசைப் பட்டியல் அடிப்படை யில், கலந்தாய்வு மூலம் மாநில அரசு தனியார் மருத் துவக் கல்லூரிகளுக்கான மாணவர் சேர்க்கையை முடிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் 22.9.2016 அன்று பிறப்பித்த ஆணை தமிழ்நாட்டு அரசுக்கும், மற்ற மாநில அரசுகளுக்கும் பொருந்துமா? இல்லையா? என்ற கேள்வி எழுகிறது.

ஒரே வகையில் பலர் பாதிக்கப்பட்டிருந்தாலும், நீதிமன்றத்தை நாடி நீதி பெறுவோர்க்கு மட்டுமே அது பொருந்தும் என்று கூறப்படுகிறது. இதனால்தான் மத்தியப் பிரதேச வழக்கில் பிறப்பித்த ஆணையில் உச்சநீதிமன்றம் எல்லா மாநிலங்களும் ஒற்றைச் சாளர முறையில் கலந்தாய்வு மூலம் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையை நடத்த வேண்டும் என்று அறிவுறுத்தவில்லையோ என்று எண்ண வேண்டியுள்ளது.

எனவே நடுவண் அரசு, இப்போது உச்சநீதி மன்றம் மத்தியப் பிரதேச மாநிலத்துக்குப் பிறப்பித்துள்ள ஆணையின் அடிப்படையில், எல்லா மாநிலங்களுக் கும் பொருந்தும்படியான வழிகாட்டு நெறியை அறிவிக்க வேண்டும். 30.9.2016க்குள் தனியார் மருத்துவக் கல்லூரிகள் அதிக தொகைக்கு ஏலம் எடுத்தவர்களை மாணவர்களாகச் சேர்த்து முடித்தபின், இதில் ஏதும் செய்ய முடியாது. அந்நிலையில் உச்சநீதிமன்றம் தானே முன்வந்து இத்தகைய மாணவர் சேர்க்கையை இரத்து செய்யுமா?

தனியார் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை ஒளிவுமறைவின்றி நடைபெறுவதில்லை; பல தில்லுமுல்லுகள் நடக்கின்றன; குறைவான மதிப் பெண் பெற்ற மாணவர்கள், அதிக அளவில் பணம் கொடுத்து சேர்ந்துவிடுகின்றனர் என்று கூறி நடுவண் அரசும், உச்சநீதிமன்றமும், தகுதி-திறமையை நிலை நாட்டிட தேசிய தகுதிகாண் நுழைவுத் தேர்வு வேண் டும் என்று வரிந்து கட்டிக்கொண்டு வாதிட்டன. இதற் கான சட்டத்தை மக்களவையில் முன்மொழிந்தபோது, நடுவண் அரசின் மக்கள் நலவாழ்வு அமைச்சர் ஜெகத் பிரகாஷ் நட்டாவும் இக்கருத்தை வலியுறுத்தினார். ஆனால் 9.8.2016 அன்று மாநில அரசுகள் விரும்பி னால், கலந்தாய்வின் மூலம் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் மாணவர் சேர்க்கையை நடத்தலாம் என்று பட்டும்படாமல் கூறித் தன் பொறுப்பைத் தட்டிக் கழித்துக் கொண்டது நடுவண் அரசு. நடுவண் அரசின் முதன்மையான நோக்கம் அரசு மருத்துவக் கல்லூரி களில் மாணவர்களைச் சேர்க்கும் அதிகாரம் மாநிலங் களிடம் இருப்பதைப் பறித்தே ஆக வேண்டும் என்பதே ஆகும் என்பது அம்பலமாகிவிட்டது.

தனியார் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையை ஒற்றைச் சாரள முறையில் கலந்தாய்வு மூலம் நடத்தும் அதிகாரத்தை மாநில அரசுகளுக்கு நடுவண் அரசு முறைப்படி வழங்கும் நிலை ஏற்பட் டாலும்கூட, பொது நுழைவுத் தேர்வு என்பது கட்டாயம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதே நம்முடைய நிலைப் பாடாகும்.

முதலில், இந்திய அளவில் தகுதி-திறமை என்பதை நிர்ணயிப்பது என்பதே ஒரு மோசடியாகும். இருபதாம் நூற்றாண்டு நெடுகிலும் தகுதி-திறமை கூப்பாடு என்பது பார்ப்பன - மேல்சாதி ஆதிக்க வர்க்கத்தின் தன்னலமே என்பதை வரலாறு காட்டுகிறது.

2013 சூலை 18 அன்று உச்சநீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளைக் கொண்ட அமர்வு, “மருத்துவப் படிப்பு களுக்கான சேர்க்கைக்கு நாடு முழுவதற்கும் ஒரே மாதிரியான பொதுத் தேர்வை நடத்துவது மாநில அரசுகளின் கல்வி உரிமையில் தலையிடுவதாகும்” என்று கூறியது. இதுவே சரியான நிலைப்பாடாகும். எனவே 1976இல் இந்திரா காந்தி நெருக்கடி நிலை காலத்தில் மாநில அதிகாரப் பட்டியலில் இருந்த கல்வியை பொது அதிகாரப் பட்டியலுக்கு மாற்றிய பெருங்கேட் டைச் செய்தார். கல்வி மீண்டும் மாநில அதிகாரப் பட்டியலில் இடம்பெற்றிட எல்லா மாநில அரசுகளும் மக்களும் குரல் கொடுக்க வேண்டும்; போராட வேண் டும். அது ஒன்றே கல்வியில் நடுவண் அரசின் ஆதிக்கத் தையும், கல்வி காவிமயமாவதையும் தடுப்பதற்கான வழியாகும்.

நுழைவுத் தேர்வு இந்தி, ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளில் மட்டுமே நடத்தப்படுகிறது. இந்திய அள வில் 70 விழுக்காடு மாணவர்கள் மேனிலைப் பள்ளிக் கல்வியை அவரவர் தாய்மொழி வழியில் கற்கின்ற னர். அரசமைப்புச் சட்டத்தில் இடம்பெற்றுள்ள 22 மொழிகளில் இந்தி, சமற்கிருதம் (மக்கள் பேச்சு வழக் கில் இது ஒரு செத்த மொழியாகவே இருக்கிறது) தவிர்த்த மற்ற 20 தேசிய மொழிகளின் வாயிலாகப் படிக்கும் மாணவர்களின் உரிமையைப் பொது நுழை வுத் தேர்வு பறிக்கிறது. அம்மொழிகளைப் பேசும் தேசிய இன மக்களின் தாய்மொழி உரிமையை நசுக்குகிறது.

நடுவண் அரசின்கீழ் உள்ள நான்கு மருத்துவக் கல்வி நிறுவனங்கள் பொது நுழைவுத் தேர்வின்கீழ் இடம்பெறாததுடன், அவை தனித்தனியே நுழைவுத் தேர்வை நடத்தி மாணவர்களைச் சேர்ப்பதை எந்த வகையில் ஞாயப்படுத்த முடியும்?

தமிழ்நாட்டில் 2006ஆம் ஆண்டு வரையில் மருத்துவப் படிப்புக்குப் பொது நுழைவுத் தேர்வு முறை இருந்தது. 12ஆம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்களும் மருத்துவப் படிப்பில் சேரப் பெருமளவில் கணக்கில் கொள்ளப்பட்டன. ஆயினும் நகர்புறத்தைச் சேர்ந்த பணக்கார வீட்டுப் பிள்ளைகள் அதிகக் கட்டணம் செலுத்தி சிறந்த தனிப்பயிற்சி நிறுவனங்களில் பயின்று, அதிக இடங்களைக் கைப்பற்றினர். தமிழ்நாட்டில் 2007 முதல் பனிரெண்டாம் வகுப்பின் மதிப்பெண் தரவரிசைப்படி மாணவர் சேர்க்கை நடப்பதால், ஊரகப் பகுதி மாணவர்களுக்கும் மருத்துவப் படிப்பில் சேருவதற்கான சம வாய்ப்பு இருந்தது.

அடுத்த கல்வி ஆண்டில் (2017-2018) மருத்துவப் படிப்புக்கு இந்திய அளவில் தகுதிகாண் நுழைவுத் தேர்வு நடைபெற்றால், வெளியிடப்படும் மதிப்பெண் தரவரிசைப் பட்டியலில் முதலிடப் பகுதியில் இடம் பெற்றுள்ள பிற மாநில - பிற மொழி பேசும் மாணவர்கள் தமிழ்நாட்டில் அரசுக் கல்லூரிகளில் சேர விரும்பினால் அதைத் தடுக்க முடியாது! அந்நிலையில் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டைச் செயல்படுத்துவதில் சிக்கல் ஏற்படும். தமிழ்நாட்டு அரசுக் கல்லூரிகளில் பெரும் எண்ணிக்கையில் பயிலும் பிறமொழி மாணவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு மருத்துவம் செய்யாமல், அவர்களின் சொந்த மாநிலங்களுக்குச் செல்வதைத் தடுக்க முடியுமா? பிற மாநில மாணவர்கள் மருத்துவப் பட்டம் பெறுவதற்கு, தமிழ்நாட்டு மக்களின் வரிப் பணம் செலவிடப்பட வேண்டுமா?

இதற்கிடையில் மருத்துவ நுழைவுத் தேர்வுக்கான தனிப்பயிற்சி நிறுவனங்கள் இப்போதே புற்றீசல் போல் முளைத்துக் கொண்டிருக்கின்றன. நுழைவுத் தேர்வின் மதிப்பெண் மட்டுமே சேர்க்கைக்கான அடிப்படை என்பதால், மாணவர்கள் விட்டில் பூச்சிகள் போல் இதில் விழுவார்கள். அவர்கள் ஒட்டச் சுரண்டப்படுவார்கள். மேலும் நுழைவுத் தேர்வால் மாணவர்களும் பெற்றோர்களும் அலைக்கழிப்புக்கும் மனஉளைச் சலுக்கும் ஆளாவார்கள்.

மேலும் நுழைவுத் தேர்வு மத்திய இடைநிலைக் கல்விப் பாடத்திட்டத்தின்படி (CBSE) இருப்பதால் மாநிலப் பாடத் திட்டத்தின்கீழ் படிக்கும் மாணவர்களின் வாய்ப்பும் உரிமையும் பறிக்கப்படுகின்றன. பல்வேறு மொழிகள், பண்பாடுகள், பழக்கவழக்கங்கள் உள்ள மக்களுக்கு ஒரே மாதிரியான பாடத் திட்டம் என்பதும் ஒரே மாதிரியான தேர்வு என்பதும் பணக்கார - பார்ப்பன - மேல்சாதியினரின் வீட்டுப் பிள்ளைகளுக்கு எல்லா வகையிலும் ஆக்கம் சேர்ப்பதாக இருக்கும்.

கீழ்ச்சாதி-ஏழை எளிய, ஊரகப்பகுதி மாணவர்களின் நலன்களுக்கு எதிரான, தேசிய இனங்களின் தாய்மொழி உரிமையைப் பறிக்கின்ற, மாநிலங்களின் உரிமையை மறுக்கின்ற, தேசிய தகுதிகாண் நுழைவுத் தேர்வை முழுமூச்சுடன் எதிர்த்து வீழ்த்திடுவோம்.

## இந்திய ஆட்சிப்பணி முதன்மைத் தேர்வுக்கு தமிழக அரசினர் இலவசப் பயிற்சி!

இந்திய ஆட்சிப்பணி முதன்மைத் தேர்வுக்கு உதவித் தொகையுடன் இலவசப் பயிற்சி பெற விருப்பம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் என, தமிழக அரசு அறிவித்துள்ளது.

சிவில் சர்வீஸ் போட்டித் தேர்வின், முதல்நிலைத் தேர்வு முடிவு அண்மையில் யு.பி.எஸ்.சி. இணைய தளத்தில் வெளியிட்டது. அதன்படி, 15 ஆயிரத்து 445 பேர் முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அடுத்த கட்டத் தேர்வான முதன்மை (மெயின்) தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்கள். முதன்மைத் தேர்வு திசம்பர் 3ஆம் தேதி தொடங்குகிறது. தமிழ்நாட்டில் சென்னையில் மட்டும் முதன்மைத் தேர்வு நடத்தப்படுகிறது.

*இந்நிலையில், தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது :*

“2016ஆம் ஆண்டுக்கான மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணைய (யு.பி.எஸ்.சி.) முதன்மைத் தேர்வுப் பயிற்சிக்கு மாணவ, மாணவியர் சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவம் ‘அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையம், காஞ்சி கட்டடம், பி.எஸ்.குமாரசாமிராஜா சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை-28’ என்ற முகவரியில் வழங்கப்படும். பின்னர், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைப் பெற்று சேர்க்கை நடைபெறும்.

முதன்மைத் தேர்வுக்கான பயிற்சிக்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த மொத்தம் 225 பேர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அதில், எஸ்.சி.-92, எஸ்.சி. (அருந்ததியர்)-18, எஸ்.டி.-3, மிகவும் பிற்படுத்தப்பட்டோர்-40, பிற்படுத்தப்பட்டோர்-54, பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்)-7, மாற்றுத் திறனாளி-7, இதர வகுப்பினர்-4 பேர் என்ற அடிப்படையில் மாணவர் சேர்க்கை இருக்கும்.

இதர பயிற்சி மையத்தில் பயின்ற மாணவர்களும், எந்த பயிற்சி மையத்திலும் சேராமல் தனியே முதல் நிலைத் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றவர்களும் முதன்மைத் தேர்வுக்கான இப்பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள். மாணவர் சேர்க்கை முடிந்தவுடன் தொடங்கும் பயிற்சி வகுப்புகள், முதன்மைத் தேர்வுகள் தொடங்கும் வரை நடைபெறும். பயிற்சிக் காலத்தில் கட்டணமில்லா விடுதி வசதி உண்டு. மேலும் பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.3,000 வீதம் தமிழக அரசால் அனைத்து மாணவர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு www.civilservicecoaching.com என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

# கருநாடகம்வாழ் தமிழரைக் குலைத்த மூன்றாவது கலவரம்
# 1982, 1991இல் இரண்டு பெரும் கலவரங்கள்
# 2016இல் உயிரிழப்பு, பொருள் இழப்பு மிகப் பெரிது!

# தமிழகத் தலைவர்களும் மக்களும் என்ன செய்ய வேண்டும்?



1982 சூலை 5, 6, 7 மூன்று நாள்களிலும் - தங்கவயல் வாழ் தமிழர்களை கருநாடகக் காவல் துறை வேட்டையாடியது. அதற்குக் காரணம் காவிரி நீர்ப்பங்கீடு அல்ல.

"தங்கள் தாய்மொழியான தமிழை, முதல் மொழியாகக் கற்றிட உரிமை வேண்டும்" என்று தங்கவயல் தமிழின மாணவர்களும், தமிழ்ப் பெரியவர்களும் இணைந்து கோரிக்கை ஊர்வலம் நடத்தினார்கள். அதற்காகக் கொடுமையாகத் தமிழர்கள் தாக்கப்பட்டார்கள்; தமிழர் வீடுகள் அடித்து நொறுக்கப்பட்டன. 30 நாள் அங்கு சுடுகாட்டு அமைதி நிலவியது.

1. அவரவர் தாய்மொழியே கல்வியில் முதல் மொழி.
2. கன்னடம் எல்லோருக்கும் கட்டாயப் பாடம்.

என்பது, 30.4.1982இல் கருநாடக அரசு வெளியிட்ட ஆணை. அதைத் தமிழர் ஏற்றனர்; எல்லா மொழியினரும் ஏற்றனர்.

"இது கூடாது-கன்னடமே எல்லா மொழி மக்களுக்கும் முதல் மொழியாக இருக்க வேண்டும்" என்பது கன்னடரின் கோரிக்கை. இது, கோகாக் ஆய்வுக்குழு செய்த பரிந்துரை. இதை முன்னின்று நடத்தியவர் நாடறிந்த நடிகர் ராஜகுமார்.

தமிழக ஆய்வரண் நிறுவன உறுப்பினர் தோழர் குணா (எ) குணசீலனும், நானும் 13.8.1982 பிற்பகலிலும், 14.8.1982 முழுவதும் தங்கவயலில் வீடு தோறும் சென்று, கருநாடக அரசு செய்த அழிம்புகளை நேரில் கண்டோம். 28.8.1982 நாளிட்ட "சிந்தனையாளன்" இதழில் 12 பக்கங்களில் தங்கவயல் கோரக் காட்சிகளைப் பதிவு செய்தேன். அதை இப்போது படித்தாலும் தங்கவயலுக்கு என் நெஞ்சம் போய்விடுகிறது.

இது, தமிழர்க்கு எதிரான முதலாவது பெருங் கலவரம்.

அடுத்து 1991 திசம்பர் 13, 14இல் காவிரி நீர்ப் பங்கீட்டை ஒட்டி, கன்னட மொழி வெறிக்கும் - தமிழர் பேரிலான வெறுப்புக்கும் ஆளாகி, அன்றைய கருநாடக முதலமைச்சர் பங்காரப்பாவும், அவரது அமைச்சரவையில் ஓர் அமைச்சராக இருந்த ரமேஷ் அய்யங்காரும் சதி செய்து கன்னடக் காலிகளையும், வாட்டாள் நாகராஜ் போன்ற கலகக்காரர்களையும், காவல் துறையையும் பயன்படுத்தி, அந்த அய்யங்கார் 12.12.1991இல் அடையாளம் காட்டிய எல்லாத் தமிழர் பகுதிகளையும் எரித்தும், சுவர்களை இடித்தும், வீடுகளில் புகுந்து கொள்ளை அடித்தும், பெண்களை வன்புணர்ச்சி செய்தும், தொழிற்சாலைகளைத் தீயிட்டுக் கொளுத்தியும் இலட்சக்கணக்கான தமிழர்களைத் தமிழகத்துக்குத் துரத்திய பெருநாசம் விளைவித்த கலவரம் அது. இதைப் பார்த்த பிறகு அன்று மதிய உணவு ஒக்காளித்தது.

11.1.1992இல் பெங்களூரை அடைந்த நான், 12.1.1992 காலை 10 மணிமுதல், புலவர் மறைந்த வெ.கிழார் அவர்கள் துணையுடன் இரவு 7 மணி வரை, 90 பங்கு இடங்களைப் பார்த்தேன்.

கருநாடகம்வாழ் தமிழர் பேரில் கழிபேரிரக்கமும், தமிழகத் தறுதலைத் தலைவர்கள் பேரில் கடுஞ் சினமும் கொண்டேன். ஏன்?

இதுபற்றி, 1992 சனவரி "சிந்தனையாளன்" இதழில், 10 பக்கக் கட்டுரையில் தெளிவாக எழுதியுள்ளேன்.

இனி, அண்மையில் தமிழ்நாட்டு அரசினர், உச்ச நீதிமன்றத்தை அணுகி, மேட்டூர் அணைக்கு 64 டி.எம்.சி. அளவு தண்ணீரை, கருநாடக அணைகளிலிருந்து திறந்துவிட வேண்டுமெனக் கோரி, 2.9.2016இல் வழக்குத் தொடுத்ததின் பேரில், 5.9.2016இல் உச்சநீதிமன்றம், கருநாடக அரசுக்கு இட்ட கட்டளையை ஏற்று, அதன்படி, விநாடி ஒன்றுக்கு 15,000 கனஅடி அளவு தண்ணீரை, 10 நாள்களுக்குத் தொடர்ந்து மேட்டூர் அணைக்குத் திறந்துவிட கருநாடக அரசு முன்வந்தது. (15,000 கனஅடி என்பது, 4,24,755 லிட்டர் அளவு தண்ணீர் ஆகும். ஒரு கியூசெக் = 28,317 லிட்டர்).

கருநாடக அரசு ஒத்துக்கொண்டாலும், கருநாடக அதிகாரிகள் 6.9.2016 செவ்வாய் இரவு 10,000




பெங்களூருவில் கன்னட வெறியர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்த கே.பி.என். நிறுவனத்தின் 56 சொகுசுப் பேருந்துகளை எரித்தனர்

கனஅடி அளவு தண்ணீரே திறந்துவிட்டனர். இந்த 10,000 கனஅடி கிருஷ்ணராஜ் சாகரிலிருந்தும் மற்றும் 5,000 கனஅடி கபினி அணையிலிருந்தும் திறந்து விடப்பட்டதாக அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்குப்பின், முதல்வர் சீத்தராமையா அறிவித்தார்.

அவ்வளவு தான்!

கருநாடகம் வாழ் தமிழர்கள் குறிவைத்துத் தாக்கப் பட்டார்கள். "காவிரி நீர் கருநாடகத்துக்கே!" என்பது, கன்னடியர் ஒவ்வொருவரின் முழக்கம் ஆனது.

இங்கு நாம் ஆற, அமர சில செய்திகளைப் பார்க்க வேண்டும்.

கருநாடகத்தில் உள்ள 4 அணைகளின் மொத்தக் கொள்ளளவு 104 டி.எம்.சி. இப்போது நான்கு அணை களிலும் இருப்பு உள்ள நீரளவு 46 டி.எம்.சி.

இந்த நிலையில் தமிழகம் கோருகிறபடி, இப்போது, எப்படி 64 டி.எம்.சி. தண்ணீரைக் கொடுக்க முடியும் என்பது ஒரு கேள்வி.

அது சரியான கேள்வி ஆகாது. பின்னர் எது சரி? அவ்வப்போது கருநாடகத்தில் நான்கு அணைகளிலு முள்ள மொத்த நீரில், காவிரி ஆணையத் தீர்ப்பின்படி, அவ்வப்போது சரிசம விகிதாசாரப் பங்குநீரைத் (Prorata) தமிழகத்துக்குத் திறந்துவிட வேண்டும். இதைக் கரு நாடக அரசு சட்டப்படி செய்யவில்லை. அதை அப்படிச் செய்யச் சொல்வதற்கு அதிகாரம் படைத்த -

1. காவிரி நீர் மேலாண்மை வாரியம்;
2. காவிரி நீர் ஒழுங்கு முறை ஆணையம்

இரண்டையும் இந்திய அரசு உடனே உருவாக்க வேண்டும்.

அடுத்து, கிருஷ்ணராஜசாகர் என்கிற கண்ணம்பாடி அணை 1926 முதல் பாசனத்துக்குப் பயன்பட்டது. அதைக் கட்டியவர்கள் தமிழகத்திலிருந்து கூலிகளாகப் போன தமிழர்களே.

1924இல் பிரிட்டிஷார் காலத்தில் மைசூர் சுதேச அரசும், சென்னை மாகாண அரசும், செய்து கொண்ட ஒப்பந்தப்படி - மேற்கு கருநாடகப் பகுதியில் புதிய அணைகட்ட வேண்டுமானால் மய்ய அரசின் ஒப்பு தலையும் (approval) தமிழ்நாட்டு அரசின் - கீழ்மடைப் பகுதியின் (Riparian State) சம்மதத்தையும் (consent) பெறவேண்டும். ஆனால் அவர்கள் அப்படிப் பெறவில்லை.

I. சென்னை மாகாண ஆட்சியை 1946 முதல் 1967 வரை 21 ஆண்டுக்காலம் காங்கிரசுக் கட்சிதான் நடத்தியது. மத்தியிலும் காங்கிரசு அரசு - மாகாணத் திலும் காங்கிரசு அரசு.

காவிரியை மறித்து, கருநாடக அரசு

1. கபினி அணையை 1959இல் கட்டியது.
2. ஏரங்கி அணையை 1964இல் கட்டியது.
3. சுவர்ணவதி அணையை 1965இல் கட்டியது.

இந்த 3 அணைகளையும் கட்ட, மத்திய அரசிடம் ஒப்புதலும், தமிழக அரசிடம் சம்மதமும் கருநாடக

அரசு பெற்றதா? இல்லை. அப்படிப் பெறவேண்டும் என்பதை இந்திய அரசிடம் - பிரகாசம், ஓமந்தூரார், குமாரசாமி ராசா, இராசாசி, காமராசர், பக்தவத்சலம் ஆகியோர் ஏன் மத்திய அரசிடமும், கருநாடக அரசிடமும் வற்புறுத்தவில்லை.

இது பொறுப்பற்றத்தனம் அல்லவா?

II. 6.3.1967 முதல் 31.01.1976 வரை தி.மு.க. தமிழகத்தை ஆட்சி செய்தது.

1. அப்போது 1968இல் தான் ஏமாவதி அணை கட்டப்பட்டது. அதை ஏன் தி.மு.க. ஆட்சி தடுக்கவில்லை?

2. 1974இல் 1924 பழைய ஒப்பந்தம் பற்றிய - பேச்சுவார்த்தையின்போது, காவிரி நீர்ப் பங்கீடு தொடர்பான சிக்கல் பற்றியும் பேச்சு நடந்தது.

**1930 முதல் 1970 வரை சராசரியாக, மேட்டூர் அணைக்கு கார்நாடகாவின் நான்கு அணைகளிலிருந்தும் 378.4 டி.எம்.சி. தண்ணீர் வந்துள்ளது; பிறகு சராசரியாக 361 டி.எம்.சி. நீர்வந்துள்ளது.**

**பின்னதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, "ஏற்கெனவே சராசரியாக வந்த நீர் அளவில் 100 டி.எம்.சி.யைக் குறைத்துக் கொண்டு, தமிழ்நாட்டுக்கு 270 டி.எம்.சி. தர நாங்கள் சம்மதிக்கிறோம்" என கருநாடக அரசு முன்வந்த போது, அதை, ஏன் அன்றைய முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி ஒத்துக்கொள்ளவில்லை?**

**நேருவின் மகள் இந்திராகாந்தி சினங்கொள்வார் என்பதாலா? 1972இல் தனிக்கட்சி வைத்த எம்.ஜி.ஆர். அதை எதிர்த்து, தேர்தலில் சிக்கல் செய்வார் என்பதாலா? ஏன்? ஏன்? ஏன்?**

**III. அ.தி.மு.க. தலைவர் எம்.ஜி.ஆர். 1977-1979இல் தமிழக முதல்வராக இருந்தார்.**

**தி.மு.க. முதல்வர் ஏற்கெனவே கையெழுத்துப் போடத் தவறிய அதே ஒப்பந்தத்தை-அதே வாசகத்துடன் கருநாடக அரசு எம்.ஜி.ஆரிடம் நீட்டியது.**

**அவர் என்ன செய்தார்? தம்முடன் காவிரி நீர்ப் பங்கீடு பேச்சுவார்த்தையில் பங்கேற்ற - பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் சி.மணவாளனிடம் தந்து, "நீங்கள் கையொப்பம் போடுங்கள்" என்றார்.**

**"நான் போடக்கூடாது" என, சி. மணவாளன் மறுத்துவிட்டார். இச்செய்தியை அவரே ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் என்னிடமும் எங்கள் தோழர்களிடமும் அவருடைய வீட்டில் சொன்னார்.**

**எம்.ஜி.ஆர்., இந்திராவுக்குப் பயந்தாரா? கலைஞர் கருணாநிதிக்கு அஞ்சினாரா? ஏன்? ஏன்? ஏன்?**

**தமிழகத் தமிழர்களே! இப்போது நினையுங்கள் -**

**திராவிடக் கட்சிகளின் தந்நல-கட்சிநலக் கோழைத் தனத்தை எப்படி நாம் செரிப்பது?**

கருநாடகத்தில் காவிரி நீர் சிக்கல் என்றால் - அந்நாள், முன்னாள் முதல்வர்கள் நிஜலிங்கப்பா, அனுமந்தய்யா, ஹெக்டே, தேவகவுடா எல்லோரும்; இன்று சித்தராமையா, தேவகவுடா, குமாரசாமி எல்லோரும் ஒன்று சேர்ந்து பேசினார்கள்; பேசுகிறார்கள். ஒரே நேரத்தில் ஒரே வானூர்தியில் தில்லிக்குப் பறந்து போய், பிரதமரைப் பார்த்துப் பேசி அழுத்தம் தருகிறார்கள்.

கேரளாவில் தேங்காய் நார் பாய் ஏற்றுமதி குறைந்துவிட்டது-முல்லைப் பெரியாறு அணை சிக்கல் என்றால் கருணாகரன், அந்தோணி, ஈ.கே. நாயனார் என்னும் எதிரும் புதிரும் ஆனவர்கள்-தில்லிக்கு ஒன்றாக ஓடோடிச் சென்று, கேரள நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கூட்டிக்கொண்டு நாடாளுமன்றம் காந்தி சிலை அருகில் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்; மத்திய அரசுக்கு அழுத்தம் தருகிறார்கள்.

1969க்குப் பிறகு 6 ஆண்டுகள், 1989க்குப் பிறகு பல ஆண்டுகள் முதலமைச்சராக இருந்த கலைஞர் எதற்காவது-எப்போதாவது காமராசரை, பக்தவத்சலத்தை, எம்.ஜி.ஆரை அழைத்துக் கலந்து பேசினாரா? அவர்களை அழைத்துக் கொண்டு தில்லிக்குப் போய் - 57 தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சேர்த்துக் கொண்டு - காவிரி, முல்லைப் பெரியாறு, பாலாறு, ஈழச் சிக்கல் பற்றி மய்ய அரசுக்கு அழுத்தம் தந்தாரா? ஏன் எப்போதுமே இதில் நாட்டங்கொள்ளவில்லை?

அதேபோல், எம்.ஜி.ஆர். 1987 வரையில் 10 ஆண்டுகள் முதல்வராக இருந்தார். அவரும் அப்படிச் செய்யவில்லை. ஏன்?

ஜெயலலிதா நல்ல அகம்பாவி; ஒரு ஏமாற்றுக்காரர். அவர் அப்படியெல்லாம் செய்யமாட்டார். ஆனால் இப்போது அவர் செய்ய வேண்டும்.

தெரிந்தோ, தெரியாமலோ கருநாடகம் வாழ் தமிழர்கள் 1972 முதல் தி.மு.க., அ.தி.மு.க. எனப் பிரிந்து கிடக்கிறார்கள்.

எதிர்பாராமல் 6.9.2016 இரவு முதல் இன்று 25.9.2016 வரை - 20 நாள்களாக கருநாடகத்தில் பெங்களூரில், மாண்டியாவில்; மைசூரில் கன்னட மொழி-இன வெறியர்களும், இளைஞர்களும் காலிகளும், வாட்டாள் நாகராஜ் என்ற தெலுங்கரும் எத்தனை எத்தனை கொடுமைகளை கருநாடகத் தமிழருக்கு இழைத்துவிட்டனர்!

கே.பி.என். என்கிற தமிழகத் தனியார் குழுமத்துக்கு, நூற்றுக்கணக்கான சொகுசுப் பேருந்துகளும், சரக்கு உந்துகளும் உள்ளன.




*காவிரியில் தண்ணீர் திறந்துவிட மறுக்கும் கர்நாடக அரசுக்கு எதிராகத் தமிழ்நாட்டில் நடைபெற்ற முழு கடையடைப்பு*

அவர்கள் பெங்களூரில், டிசௌஸா நகரில், தங்களுடைய வண்டி நிறுத்த வளாகத்தில் நிறுத்தியிருந்த 56 பேருந்துகளை 12.9.2016 திங்கட்கிழமை தீயிட்டுக் கொளுத்திவிட்டார்களே! ஒவ்வொன்றும் ரூபா 4 கோடி பெறுமானம் என்றால், 225 கோடி ரூபா பெறுமான சொத்தை இழந்துவிட்டார்களே! இரண்டு ஆண்டுகளுக்குமுன் அங்கு பிழைக்க வந்த 22 வயது கன்னடப் பெண் தீ வைத்த கும்பலுக்குத் தொடர்ந்து உதவியிருக்கிறாரே!

நூற்றுக்கணக்கான தமிழக ஓட்டுநர்கள் அடி, உதை, அம்மண அவமானம் தாங்க முடியாமல் அங்கேயே ஒளிந்திருந்து கால்நடையாகவே அவரவர் வீட்டுக்கு வந்திருக்கிறார்களே!

குலதெய்வத்தைக் கும்பிட்டுவிட்டு, பிறந்த ஊரில் திருமணம் செய்துகொள்ள விரும்பிய தமிழ் மணமக்களும் உறவினர்களும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓசூர் வரை நடந்தே வந்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டுப் பதிவு எண் தாங்கிய மகிழுந்துகள், சரக்கு உந்துகள் 100க்கு மேல் தீயிட்டுக் கொளுத்தப் பட்டுள்ளன.

தமிழகத்திலிருந்து, அன்றாடம் 5,000 சரக்கு உந்துகள் கருநாடகத்துக்குச் செல்லும். அவையெல்லாம் ஓசூரிலேயே நிறுத்தப்பட்டன. கருநாடகத்திலிருந்து தமிழகத்துக்கு அன்றாடம் 1,000 சரக்கு உந்துகள் வரும். அவையெல்லாம் நிறுத்தப்பட்டுவிட்டன.

தமிழரின் உணவுக் கடைகள், பெட்டிக் கடைகள், துணிக்கடைகளை அடையாளம் கண்டு அவை அடித்து நொறுக்கப்பட்டன.

உச்சநீதிமன்றம் விநாடிக்கு 15,000 கனஅடி என்பதை 12,000 கனஅடி என்று மறு ஆணை பிறப்பித்த பிறகும், அழிம்பு வேலையை கன்னடர்கள் நிறுத்தவில்லை.

விநாடிக்கு 3000 கனஅடி விடவேண்டும் என இரண்டாந்தடவை உச்சநீதிமன்றம் ஆணையிட்ட போது, “அந்த ஆணையை மீறுவது - தமிழகத்துக்குத் தண்ணீர்விட முடியாது” என, அமைச்சரவையையும் எல்லாக் கட்சித் தலைவர்களையும் கூட்டி, கருநாடக அரசு முடிவு செய்தது.

கருநாடகாவில் நடந்த வன்முறையால், கன்னட நாட்டுக்கு ரூபா 25,000 கோடி இழப்பு ஏற்பட்டுவிட்டதாக ஒரு புள்ளிவிவரம் கூறுகிறது.

தமிழ்நாட்டில் பெரியார் திராவிடர் கழகம் என்ற அமைப்பினர் 10 பேர், மயிலாப்பூரிலுள்ள நியூ உட்லண்ட்ஸ் ஓட்டலுக்குள் 13.9.2016 காலை 3.45 மணிக்கு நுழைந்து பெட்ரோல் குண்டு வீசியதாகக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

கோயம்பேட்டில் கருநாடகப் பதிவெண் தாங்கிய தனியார் பேருந்து தாக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டு அரசு, கருநாடகத்தார் வணிக நிறுவனங்களுக்குத் தக்க பாதுகாப்பு அளித்திருக்கிறது.

முதலாவதாக உச்சநீதிமன்றம் தந்த தீர்ப்பை, கருநாடக அரசு ஏற்றுக்கொண்ட பிறகும் தன்னிச்சையாக கன்னடக் காலிகள் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டுப் பேரழிம்பைத் தமிழர்களுக்கு விளைவித்து விட்டார்கள்.

முழுக் கடையடைப்பை ஒருநாள் நடத்தி கன்னட மக்களை உசுப்பிவிட்டிருக்கிறார்கள்.

இனி, தமிழக மக்களும், தமிழக அரசும் செய்ய வேண்டியது என்ன?

1. இப்போது உடனடியாக, தமிழ்நாட்டு முதலமைச்சர் தம் தலைமையில் எல்லாக் கட்சிகளின் தலைவர்களையும் தமிழக அமைச்சர்கள் எல்லோரையும்-தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 57 பேர்களையும் ஒரு குழுவாக அழைத்துக் கொண்டு போய், தில்லியில் நாடாளுமன்றத் தின்முன் காவிரி நீரில் - அவ்வப்போது உள்ள மொத்த இருப்பில் - தமிழர்க்குரிய சரிசம விகிதாசாரப் பங்கைப் பெற ஆவன செய்ய வேண்டும். அதாவது காவிரி நீர் மேலாண்மைக்குழுவையும், காவிரி நீர் ஒழுங்குமுறை ஆணையத்தையும் இந்தியப் பிரதமர் உடனே அமைத்திட ஆவன செய்ய வேண்டும்.
2. இந்த காவிரிச் சிக்கலின் பக்கம் வேளாண் மக்களின் கவனத்தைத் திருப்புவதோடு நில்லாமல், தமிழகத்தில் உள்ள 41,000 சிறிய பெரிய ஏரிகளில்

10,000 பெரிய ஏரிகளைத் தெரிவு செய்து, 2020-க்குள் அவற்றின் முழுக் கொள்ளளவும் மழை நீரைத் தேக்க - **இயந்திரங்களைக் கொண்டு,** போர்க்கால விசையில் தூர் வார வேண்டும். நீர்வரத்து, போக்கு வாய்க்கால் ஆக்கிரமிப்புகளையும், ஏரி உள்வாயில் உள்ள வேளாண் ஆக்கிரமிப்புகளையும் கட்டாயமாக அகற்றியே தீரவேண்டும்.

இதில் கையூட்டு இல்லாமல் கண்காணிக்க வேண்டும்.

**இவற்றை எவ்வளவு விரைவில் தமிழக அரசு சாதிக்கிறதோ அதுதான் நிரந்தரத் தீர்வாக - நீண்டகாலத் தீர்வாக இருக்க முடியும்.**

3. கருநாடகத்தார் கன்னட மொழியைத் தமிழரும் மற்றோரும் கல்வியில் முதல் மொழியாகக் கற்க வேண்டும் என்பதிலும், காவிரியில் கீழ்மடையிலுள்ள தமிழகத்துக்கு உலக நீர்ப்பங்கீடு சட்டங்களின்படி முதலாவது உரிமை உண்டு என்பதை ஏற்காமல்-கருநாடக நலனே முதன்மை எனக் கொண்டும், இதுவரையில் பகைத்தார்கள்.

   அண்மைக்காலமாகத் தகவல் தொழில்நுட்பத்துறை அலுவலகங்களில் பெங்களூரிலும் மைசூரிலும் தமிழ்நாட்டாரே ஆதிக்கம் வகிக்கின்றனர் என்கிற பொச்சரிப்பும் வெறுப்பும் ஒரு புதிய காரணியாகச் சேர்ந்துகொண்டது என்பதை நாம் கணக்கில் கொள்ள வேண்டும்.

4. தமிழகத் தமிழர் எதில் எடுத்தாலும் கட்சி வழி மட்டுமே நின்று - அ.தி.மு.க. - தி.மு.க. என்கிற செம்மறிக் கூடாரங்களில் அடைபட்டு, அந்த அடிப்படையில் தமிழர்க்கான பொதுச் சிக்கல்களை நோக்குவது என்கிற ஈனத்தனத்தை அடியோடு விட்டுவிட வேண்டும்.


5. அதேபோல் கருநாடகம் வாழ் தமிழர்களும் சாதி, கட்சி அடிப்படையில் பிரிந்து நின்று - தாய்மொழி - காவிரி - ஈழச்சிக்கலை நோக்குவதை விட்டுவிட வேண்டும். தமிழ்மொழி உரிமையைக் காப்பதற்கு மட்டும் ஆர்ப்பாட்டம், அமைதியான கிளர்ச்சி செய்யுங்கள்.

கருநாடகம் வாழ் தமிழின ஆடவரும் பெண்டிரும் சிலம்பம், கராத்தே முதலான உடற்பயிற்சிகளைக் கற்றுக்கொண்டு, உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து நேரும் போது, தங்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள இப்போதே ஆயத்தம் ஆகவேண்டும்.

தமிழர் ஒன்றுபட்டால் மட்டுமே வாழ்வு உண்டு.

**- வே. ஆனைமுத்து**

## வே.வ. வீராசாமியின் மகன் வே.வீ. கிருஷ்ணமூர்த்தி மறைந்தார்



உடையார்பாளையம் - செயங்கொண்டம் பகுதி, முந்திரி விளைச்சலுக்குப் பெயர் பெற்றது.

60 ஆண்டுகளுக்கு முன்னரே அயல் மாநிலத்துக்காரர்கள் இப்பகுதிக்கு வந்து, குறைந்த விலையில் முந்திரிக் கொட்டையை வாங்கி உடைத்து அயல் நாடுகளுக்கு நல்ல விலைக்கு ஏற்றுமதி செய்தனர்.

அப்படிப்பட்ட சூழலில் பொன்பரப்பி வே.வீராசாமி அவர்கள் செந்துறையில் தங்கி, பெரிய அளவில் முந்திரிக்கொட்டையைக் கொள்முதல் செய்து, அப்பகுதியில் உள்ள தாய்மார்களைக் கொண்டு முழுப் பருப்பாக உடைத்து நல்ல விலைக்கு விற்றுப் பெரும் பொருள் திரட்டினார்.

அதே தொழிலை அவருடைய மகன் வே.வீ. கிருஷ்ணமூர்த்தி சிறப்புடன் செய்து வந்தார். அன்னார் 5.9.2016 திங்கட்கிழமை அன்று தம் 66ஆம் அகவையில் மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அன்னாரின் படத்திறப்பு நிகழ்ச்சி 21.9.2016 புதன்கிழமை நடைபெற்றது.

மறைந்த வே.வீ. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் துணைவியார் கோமதி, மகன் சிவக்குமார் மற்றும் குடும்ப உறுப்பினர்களை 19.9.2016 மாலை 5 மணிக்கு நேரில் கண்டு, வே. ஆனைமுத்து, இரா. கலியமூர்த்தி, இரா.சீனிவாசன், பொ.மன்னர்மன்னன் ஆகியோர் ஆறுதல் கூறி விடைபெற்றனர்.

மிகப்பெரிய அளவில் இயந்திரம் வழியாக முந்திரிக் கொட்டையை உடைத்து, அவர்களே அயல் நாட்டுக்கு ஏற்றுமதி செய்திட, அப்பகுதியினர் எவரும் துணியாதது பெரிய அவலம் ஆகும்.

**- வே. ஆனைமுத்து**

புலவர் கி.த.பச்சையப்பன் துணைவியார் ஆ.கு.செயம் மாள் நினைவு அறக்கட்டளை சார்பாக பெரியார்-நாகம்மை கல்வி அறக்கட்டளைக்கு ரூ.5,000 (அய்யாயிரம்) வழங்கப்பட்டது.

தலைவர்:புலவர் கி.த.பச்சையப்பன், செயலாளர்: கனக.இளங்கோவன்; பொருளாளர் : தொல்காப்பியன்.

## சூ.ர. தங்கவேலு வளர்ச்சி நிதி உருவா 1,000

சூலூர் பேரூராட்சியின் முன்னாள் தலைவர் - அறிவியல் படக் கண்காட்சி அமைப்பாளர், சூ.ர. தங்கவேலு உருபா 1,000/- வளர்ச்சி நிதியாக வழங்கினார்.


# ஓணம் பண்டிகையும் அமித் ஷாவும்

- செங்கதிர்

ஆரியப் பார்ப்பனர் கி.மு.1500-1000 காலத்தில் இந்தியாவின் வடமேற்கு வாயிலாகச் சிறுசிறு கூட்ட மாக நுழைந்தனர். இந்தியத் துணைக் கண்டத்தின் திராவிடத் தொல்குடியினர் வேதகால ஆரியர்களிட மிருந்து தோற்றத்தால், பழக்கவழக்கங்களால், பண் பாட்டால், சமய நம்பிக்கைகளால், மொழியால், வாழ் வியல் சடங்குகளால் முற்றிலும் வேறுபட்டு இருந்தனர். எனவே வேதகால ஆரியர்கள் இந்நாட்டின் திராவிடத் தொல்குடியினரை ‘தாசா’ (அடிமை)-‘தஸ்யூ’ என்ற சொற்களால் தாழ்வாகக் குறிப்பிட்டனர். ஆரியப் பார்ப்பனர் தமக்கே உரிய வஞ்சக வழிமுறைகள் மூலம் தங்கள் மேலாதிக்கத்தை நிறுவிட முயன்றனர். ஆயினும் ஆரியர் ஆதிக்கத்தை இந்நாட்டின் தொல் குடித் தலைவர்களும், அரசர்களும் தொடர்ந்து எதிர்த்தனர். இதுவே ஆரியர் - திராவிடர் போராட்டமாக இன்று வரை பல்வேறு தளங் களில் பல வடிவங்களில் தொடர்கிறது.

ஆரியப் பார்ப்பனர் வருணாசிரம - சாதியமைப்பு முறையைத் திணிக்க முயன்ற போதிலும் இந்தியா வின் பல பகுதிகளில் சூத்திரர்கள் அரசர்களாக ஆட்சி புரிந்தனர் என்று மேதை அம்பேத்கர் குறிப்பிடுகிறார். இந்நிலை கி.பி.2ஆம், 3ஆம் நூற்றாண்டுகளில் மேலோங்கி யிருந்தது. இக்காலக்கட்டத்தை பார்ப்பனப் புராணங்கள் ‘‘கலியுகம்’’-‘‘கலிகாலம்’’ என்று குறிப்பிடுகின்றன. வேதங் களின் உயர்வும் பார்ப்பனர்களின் மேன்மையும் மறுக்கப்பட்டது; எதிர்க்கப்பட்டது. இக்காலக்கட்டத்தில் பார்ப்பனர்களைப் ‘பூதேவர்களாக’ மதித்துப் போற்றாத -மக்களுக்கு நல்லாட்சி வழங்கிய அரசர்களை ‘விஷ்ணு’ அவதாரம் எடுத்துவந்து அழித்தார் என்கிற கதைகளைப் புனைந்தனர். அதாவது ஆரியப் பார்ப்பனர் தங்கள் வஞ்சகச் சூழ்ச்சியால் சூத்திர அரசர்களை வீழ்த்தியதைப் புராணப் புனை கதைகளாக எழுதினர். தங்களுடைய வஞ்சகத்தை மூடி மறைக்க கடவுளே அவதாரம் எடுத்து வந்து சூத்திரர்களான அரசர்களை-அரக்கன், இராட்சதன் என்ற பெயர்களால் இழிவுபடுத்தி அழித்ததாகப் புனிதப் போர்வையால் மூடி மறைத்தனர். பாகவதம் எனும் நூல் பார்ப்பனர்களின் இத்தகைய கதைகளைக் கொண்ட தாகும்.

இரணியனை, மகாவிஷ்ணு நரசிங்க அவதாரம் எடுத்துக் கொன்றான். ஏனெனில் இரணியன் கடவுளை மறுத்தான்; பார்ப்பனர்களை எதிர்த்தான். புராணக் கதையின்படி, பூமியைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு கடலுக்குள் ஒளிந்து கொண்ட இரண்யாட்சதனை மகா விஷ்ணு வராக (பன்றி) அவதாரம் எடுத்துக் கொன்றார். திருமாலின் (மகாவிஷ்ணு) ஒன்பது அவதாரங்களும் திராவிடர்களான - சூத்திரர்களான - பார்ப்பனர்களை எதிர்த்த மன்னர்களைக் கொன்ற கதைகளேயாகும்.




*ஓணம் பண்டிகையை காவிமயமாக்கிட அமித்ஷா தன் சுட்ரையில் வெளியிட்ட செய்தி*

அக்டோபர் 29 அன்று இந்தியா முழு வதும் தீப நாள் கொண்டாடப்பட உள்ளது. தேவர்களுக்குத் தொல்லை கொடுத்துவந்த நரகாசுரனை விஷ்ணு அவதாரமெடுத்துக் கொன்றார். இந்த நரகாசுரன் யார்? மகா விஷ்ணு பன்றி அவதாரம் எடுத்த இரண் யாட்சதனிடமிருந்து பூமியை மீட்டுவந்த போது, இப்பன்றி பூமாதேவியின்மீது காம முற்றுப் புணர்ந்ததால் பிறந்த பிள்ளைதான் நரகாசுரன். இந்த நரகாசுரனை கிருஷ்ண அவதாரம் கொன்ற கதைதான் தீபாவளி.

பார்ப்பனர்கள் தங்கள் மேலாதிக்கத்தை நிலை நாட்டும் புராணக் கதைகளைப் பண்டி கைகளாக்கி, திராவிட மக்களைக் கொண்டாட வைத்து, அவர்களை மடையர்களாக வைத் திருப்பதில் வெற்றி பெற்றுவிட்டனர். அறி வியலும் ஆராய்ச்சியும் வளர்ந்திருப்பதாகக் கூறப்படும் இந்நாளிலும் ஆபாசங்கள் நிறைந்த அவதாரக் கதைகள் - ‘‘தீய சக்திகளை வெற்றி கொண்ட நாள்’’ என்று பொன்முலாம் பூசப் பட்டுக் கொண்டாடப்படுகின்றன. ‘‘தீமைகள் ஒழிந்து

இனி நல்லவை நடந்திட வாழ்த்துகள்'' என்று ஆன்மிகத் தலைவர்கள் முதல் அரசியல் தலைவர்கள் வரை தீபாவளி போன்ற இந்துப் பண்டிகைகளின்போது வாழ்த்துக் கூறுகின்றனர்.

விஷ்ணு மனித உருவில் எடுத்த முதல் அவதாரம் வாமன அவதாரம் ஆகும். வாமனன் என்பதற்குக் ''குள்ளப் பார்ப்பான்'' என்று பொருள்.

தமிழ்நாட்டில் தமிழர் திருநாளாம் பொங்கல் நாளைப் பார்ப்பனர் 'சங்கராந்தி' என்ற பெயரால் எவ்வளவு தான் இந்துமதச் சாயம் பூசிட முயன்றாலும், அதை ஒரு இந்து மதப் பண்டிகையாக ஆக்க முடியவில்லை. தமிழ்மொழி சார்ந்த - இனம் சார்ந்த விழாவாகவே பொங்கல் திருநாள் மக்களால் கொண்டாடப்படுகிறது.

**அதேபோல் கேரளத்தில் ஓணம் பண்டிகை, வாமன அவதாரத்தை வணங்கும் நாளாகக் கொண்டாடப்படுவதில்லை. நல்லாட்சி செய்த-அசுர குலத்தைச் சேர்ந்த தங்கள் மாமன்னன் மகா பலியின் நினைவைப் போற்றுகின்ற நன்னாளா கவே கொண்டாடுகிறார்கள். மலையாள மொழி பேசும் மக்கள் இந்தியாவில் எந்த மூலையில் இருந்தாலும் ஓணம் திருநாள் விழாவுக்காகத் தங்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்பி வந்து குடும்பத்தினருடனும். உறவினருடனும், நண்பர் களுடனும் கூடி மகிழ்ந்து இவ்விழாவைக் கொண் டாடுகின்றனர். இது பாராட்டுக்குரியது.**

கேரளத்தில் முசுலீம்கள், கிறித்துவர்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்கின்றனர். இவர்களும் ஓணம் திருநாளை தங்கள் பெருமைமிகு விழாவாகக் கொண் டாடுகின்றனர். தி.மு.க. ஆட்சிக்காலத்தில் தமிழ்நாட்டின் ஆளுநராக கேரளத்தைச் சேர்ந்த இசுலாமியரான பாத்திமா பீவி இருந்தார். ஆளுநர் மாளிகையில் ஓணம் விழாவைக் கொண்டாடினார். அவருடைய அழைப்பை ஏற்று அப்போது முதலமைச்சராக இருந்த கலைஞர் மு. கருணாநிதி அவ்விழாவில் கலந்து கொண்டார்.

மக்களின் நன்மதிப்பைப் பெற்று நல்லாட்சி செய்து வந்த மாமன்னன் மகாபலியை, விஷ்ணு, வாமன அவதாரம் எடுத்து மூன்று அடி நிலம் கேட்டு, மகாபலி ஒப்பினான். விஷ்ணு ஒரு அடியை நிலத்திலும், இன்னொரு அடியை விண்ணிலும் வைத்து மூன்றாவது அடியை மாவலியின் தலைமீது வைத்து நிலத்துக்குள் புதைந்து போகச் செய்தது ஏன்? மாவலியின் புகழும் பெருமை யும் ஓங்கி வளர்வதைக் கண்டு பொறாமை கொண்ட தேவர்கள் விஷ்ணு மூலம் வஞ்சகமாக மகாபலி மன்னனைக் கொன்றனர். சாகும்போதும் மக்களை மறக்காத மகாபலி மன்னன், மண்ணுக்கும் விண் ணுக்கும் இடையில் பேருருவாய் நின்ற மகாவிஷ்ணு விடம் ஒவ்வொரு ஆண்டும் ஒருநாள் என் மக்களைப் பார்க்க வரவேண்டும் என்று வரம் கேட்டாராம். மகா விஷ்ணுவும் அப்படியே வரம் தந்தாராம். ஆண்டு தோறும் மகாபலி மன்னன் மக்களைக் காணவரும் நாளையே கேரள மக்கள் ஓணம் திருநாளாகக் கொண் டாடுகின்றனர்.

கேரளத்தையொட்டியுள்ள கன்னியாகுமரி மாவட்டத் தைச் சேர்ந்தவரும், நடுவண் அரசின் அமைச்சராகவும் இருக்கின்ற பொன். இராதாகிருஷ்ணன் ஓணம் பண்டி கைக்கு வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், ''மகாபலி சக்கரவர்த்தி, ஓணம் பண்டிகை நாளில் தன் மக்கள் மத்தியில் எழுந்தருளும் புனிதத் திருநாளாகும். மன்னன் எவ்வழியோ, மக்களும் அவ்வழியில் ஒருவருக்கொருவர் இணக்கமான துணையாக இணைந்து வாழும் ஓணத் திருவிழா அமைவதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நாளில் மகாபலி மன்னனை மனதில் கொண்டு மகிழ்ச்சியுடன் வாழ அனைவரையும் வாழ்த்துகிறேன்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

**மகாபலி மன்னனை மகிழ்ச்சியுடன் மக்கள் வரவேற்கும் விழாதான் ஓணம் திருநாள் என்று பொன். இராதாகிருஷ்ணன் சொல்கிறார். ஆனால் அவர் சார்ந்துள்ள பாரதிய சனதா கட்சியின் தலை வர் அமித் ஷாவோ ஓணம் பண்டிகை என்று குறிப்பிடாமல், ''வாமன ஜெயந்திக்குக் கேரள மக்களுக்கு என் வாழ்த்துகள்'' என்று தன் இணைய தளத்தில் சுட்டுரையில் தெரிவித்தார். அதற்கு முன்பாக, கேரள ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் ஓணம் பண்டிகை வாமன ஜெயந்தியாகும் என்று அறிவித்திருந்தது. இது கண்டனத்துக்கு உரியது.**

அசுரர்கள் - சூத்திரர்கள் உயர்நிலை அடைவதை; பார்ப்பனர்கள் எப்போதும் அனுமதிப்பதில்லை என் பதைப் புராணக் கதைகள் மட்டுமின்றி, இரண்டாயிர மாண்டுக் கால வரலாறு மட்டுமின்றி, இன்றைய மேல் சாதி ஆதிக்கவாதிகளின் செயல்பாடுகளும் காட்டுகின்றன என்பதற்காக சான்றுதான் ஓணம் திருநாளை 'வாமன ஜெயந்தி'யாகக் கொண்டாட வேண்டும் என்கிற அமித் ஷாவின் கூற்று.

ஓணம் திருநாளைக் காவிமயமாக்கி, வாக்குவங்கி யாக இந்துக்களை அணிதிரட்டுவதும், இசுலாமிய - கிறித்துவ மதச்சிறுபான்மையினருடன் மோதவிடுவதும் தான் அமித்ஷாவின் நஞ்சான நோக்கமாகும். கேரளத் தின் முதலமைச்சர் பினராயி விசயனும், எதிர்க்கட்சித் தலைவரான ரமேஷ் சென்னிதலாவும், மற்றும் பல் துறை சார்ந்த தலைவர்களும் அறிஞர்களும் அமித்ஷா வின் வாமன ஜெயந்தி முழக்கத்தைக் கண்டித்துள்ளனர். மக்களை ஒன்றுபடுத்தும் விழாவாக விளங்கும் ஓணத்தை,

மக்களைப் பிளவுபடுத்துவதற்கான ஆயுதமாகப் பயன் படுத்த முனைவது பார்ப்பனச் சூழ்ச்சியே ஆகும்.

நவீன இந்தியாவில் பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளை - ஆதிக்கத்தை அம்பலப்படுத்தவும், சூத்திரர்களை - ஆதி சூத்திரர்களை (தாழ்த்தப்பட்ட வகுப்பினர்) பார்ப்பன அடிமைத்தனத்திலிருந்து மீட்கவும் மராட்டியத்தில் மக்கள் திரள் இயக்கத்தைக் கட்டியமைத்து அரும் பணியாற்றியவர் சோதிராவ் புலே (1827-1890) ஆவர். புலே தன்னுடைய எழுத்துகளில் மாபலிதான் ஒடுக் கப்பட்ட வகுப்பினருக்கான மன்னன் என்று போற்று கிறார். மராட்டியத்திலும் பலிராஜனின் வருகைக்காக - மீண்டும் பலிராஜன் ஆட்சி அமைய வேண்டி மக்கள் விழாக் கொண்டாடுவதாக அவர் எழுதியுள்ள 'அடிமைத் தனம்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அந்நூலில் வாமனன் மண்ணுக்கும் விண்ணுக்கும் இடையில் பேருருவாக வடிவெடுத் தான் என்பதைக் கேள்விக்குள்ளாக்குகிறார் புலே. "அந்தப்பூத உருவம் தன் இரு அடியால் முழு பூமி யையும் வானத்தையும் நிரவி நின்ற போது அதன் மூலம் அடியில் எல்லா ஊர்களும் அடியோடு நசுங்கி இருக்காதா? அப்படியானால் பலிராஜன் மட்டும் எப்படி நசுங்காமல் தப்பித்தார்? பலிராஜனை மட்டும் தூக்கி பூதம் தன் பாதத்தின்கீழ் நிறுத்திக் கொண்டது என்று எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை. இரண்டாவ தாக பூதாகார உருவம் தன் இரண்டாவது அடியை வானத்தில் வைத்தபோது நட்சத்திர வான வெளியில் ஒன்றோடொன்று மோதி நொறுங்கி இருக்க வேண்டு மல்லவா? மேலும் பூதாகார உருவின் மாபெரும் எடையால் பூமியும் சேர்ந்தே பாதாளத்துக்கு அழுத்தப் படாமல் தப்பியது எப்படி?" என்று, பல வினாக்களை எழுப்ப இடந்தருகிற பாகவதத்தைப் படித்தால், அதை விட ஈசாப்பின் நீதிக்கதைகளே எவ்வளவோ நம்பும் படியாக இருக்கின்றன என்று புராணப் புளுகு மூட்டை கள் மீது வெடிகுண்டை வீசுகிறார், புலே.

**எனவே சோதிராவ் புலே, பெரியார், மேதை அம்பேத்கர் வழியில் இதிகாசப் புராணங்களை ஆராய்ந்து, அவை அறிவுக்குப் புறம்பானவை யாக இருப்பதுடன் மட்டுமல்லாது, நம்மை இழி சாதி மக்களாகவும் பார்ப்பனரை உயர்சாதி மக்க ளாகவும் வைத்திருப்பதால், அவற்றைப் புறக்கணிப் போம். அவற்றின் பெயரிலான மதப் பண்டிகை களை-திருவிழாக்களைப் புறக்கணிப்போம். பார்ப் பன மேன்மைக்கு ஆதாரமாக உள்ள புரோகிதச் சடங்குகளையும், சமற்கிருதத்தையும், புரோகி தப் பார்ப்பானையும் புறக்கணிப்போம். தமிழ் மொழி சார்ந்த, தமிழர்க்கான வாழ்வியலை - பண்பாட்டை உயர்த்திப் பிடிப்போம். வாருங்கள்.**

# ஒலிம்பிக் வீரர் மாரியப்பனுக்கு பிறந்த ஊரில் பெரிய வரவேற்பு!



**மிதி**வண்டியில் ஊர் ஊராகச் சென்று காய்கறி விற்றுச் சம்பாதித்துத் தம் குடும்பத்தைக் காப்பாற்றினார், குடும்பத் தலைவி சரோஜா அம்மையார். சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே பெரிய வடகம்பட்டியில் பிறந்தவர் மாரியப்பன்.

தம் சொந்த முயற்சியில் உயரம் தாண்டும் பயிற்சி பெற்றார். பயிற்சியாளர்களின் உதவியும் பெரிய அளவில் கிடைத்தது.

ஒரு கால் விரல்கள் நான்கை இழந்த நிலையிலும் விடாமுயற்சியுடன் பயின்று, பிரேசில் நாட்டில் ரியோடி ஜெனிரோவல் அண்மையில் நடைபெற்ற பாரா ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்று, 1.89 மீட்டர் உயரம் தாண்டிக்குதித்து, உலக அளவில் முதலாவது சாதனையாளராகத் தங்கப் பதக்கம் பெற்றார். அதன் வழி, பிறந்த ஊருக்கும், தமிழ் நாட்டுக்கும், இந்தியாவுக்கும் பெருமை சேர்த்தார்.

இந்தியப் பிரதமர், தமிழக முதல்வர், இந்திய அஞ்சல் துறையினர், அவர் படித்த பள்ளியினர் என, அனைத்துத் தரப்பினரின் பாராட்டையும் பெற்றார்.

24-9-2016 சனி அன்று, அவர் பிறந்த வடகம்பட்டிக்கு வந்து சேர்ந்த வெற்றி வீரர் மாரியப் பனை மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் தலைமையில் ஊர் மக்களே திரண்டு, மாபெரும் வரவேற்பு அளித்தனர்; ஊர்வலமாக அழைத்துச் சென்று ஆடைகளும் மாலைகளும் சூட்டி மரியாதை செய்தனர். தாம் பெற்ற தங்கப் பதக்கத்தைத் தாயிடம் அளித்தார், மாரியப்பன்.



**தமிழ் விளையாட்டு வீரன்**
**மாரியப்பன் வாழ்க! வளர்க!**

# பெரியார் ஈ.வெ.ரா. 138ஆவது பிறந்த நாள் விழாவும்; சுயமரியாதை வாழ்வியல் சான்றிதழ்ப் பயிற்சி வகுப்பு நிறைவு மற்றும் சான்றிதழ் வழங்கும் விழாவும்

சென்னை அம்பத்தூரில் உள்ள பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளை வளாகத்தில், 17.9.2016 சனிக்கிழமை காலை 10.30 முதல் பகல் 2 மணி வரை பெரியார் 138ஆவது பிறந்த நாள் விழாவும், சுயமரியாதை வாழ்வியல் சான்றிதழ்ப் பயிற்சி வகுப்பு நிறைவு மற்றும் சான்றிதழ் வழங்கும் விழாவும் எழுச்சியுடன் நடைபெற்றன.

2015 செப்டம்பர் மாதம் சுயமரியாதை வாழ்வியல் சான்றிதழ்ப் பயிற்சி வகுப்பு தொடங்கப்பட்டது. 2016 செப்டம்பர் 4ஆம் நாள் இப்பயிற்சி வகுப்பு நிறைவுற்றது. இடையில், 43 ஞாயிற்றுக்கிழமைகள் காலை 10 மணிமுதல் மாலை 5 மணிவரையில் பவுத்தம், வள்ளுவம், மார்க்சியம், லெனினியம், காந்தியம், பெரியாரியம், அம்பேத்கரியம், பாவேந்தம், கணினி அறிமுகம், தமிழ் மொழித்திறன் ஆகிய தலைப்புகளில் அவ்வத்துறை சார்ந்த வல்லுநர்கள் ஆசிரியர்களாக இருந்து வகுப்புகளை நடத்தினர். பயிற்சி வகுப்பிற்கு 46 தோழர்கள் பதிவு செய்திருந்த போதிலும், முப்பது தோழர்கள் மட்டுமே பயிற்சி வகுப்புக்குத் தொடர்ந்து வந்தனர். பயிற்சி மாணவர்களுக்கு அறக்கட்டளை வளாகத்திலேயே பகல் உணவும் இருவேளைகள் தேநீரும் வழங்கப்பட்டன. பயிற்சி மாணவர்களுக்கு இரண்டு வகையான தேர்வுகள் நடத்தப்பட்டன. 28 பயிற்சி மாணவர்கள் தேர்வில் தேர்ச்சி பெற்றனர்.

17.9.2016 அன்று நடைபெற்ற விழாவுக்கு அறக்கட்டளையின் தலைவரும் மேலாண்மை அறங்காவலருமான தோழர் வே. ஆனைமுத்து தலைமை தாங்கினார். அறக்கட்டளையின் செயலாளர் துரை. கலையரசு அனைவரையும் வரவேற்றார். தலைமை உரை ஆற்றிய தோழர் வே. ஆனைமுத்து, தத்துவப் பயிற்சி வகுப்பு நடத்துவதன் நோக்கத்தை, பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளை இன்றைய தேவைக்கு ஏற்ப செழுமைப்படுத்தி, செயல்படுத்த வேண்டியதன் முதன்மையை விளக்கினார்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி திருவாளர் அரிபரந்தாமன் அவர்கள் பயிற்சி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பித்தார். பயிற்சி வகுப்பில் நடத்தப்பட்ட தத்துவங்கள் குறித்து எளிய முறையில், ஆழ்ந்த கருத்துகளை விளக்கி முக்கால் மணிநேரம் சொற்பொழிவாற்றினார். புரட்சிக்கவிஞர் கலை இலக்கிய மன்ற மாநிலச் செயலாளர் கவிஞர் தமிழேந்தி, தன் உடல் இயலாமையையும் பொருட்படுத்தாமல் தன் கருத்தை எழுச்சிமிகு கவிதையாக உரைத்தார். இந்திய நடுவண் அரசின் செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சகத்தின் கள விளம்பரத்துறை இயக்குநர் மா. அண்ணாதுரை பெரியாரின் கொள்கைகளை விளக்கிப் பேசினார். பயிற்சி வகுப்பில் மார்க்சியம், அம்பேத்கரியம் பாடங்களை நடத்திய வரும், அறக்கட்டளையின் அறங்காவலருமான க. முகிலன் மற்றும் பயிற்சி பெற்ற மாணவத் தோழர்கள் செல்வி, சு. முருகவேல், தி.ச. குணசேகரன் ஆகியோர் உரையாற்றினர்.

பயிற்சி பெற்ற மாணவத் தோழர்களுக்குப் பரிசு நூல்கள் வழங்கிச் சிறப்பித்த கவிஞர் அறிவுமதி, சங்க இலக்கிய காலம் முதல் பெரியார் காலம் வரையிலான தமிழரின் சுயமரியாதை வாழ்வியலை விளக்கி நிறைவுரை ஆற்றினார். அறக்கட்டளை ஆலோசனைக் குழு உறுப்பினர் ப. வடிவேலு நன்றி கூறினார். சென்னை மாநகரிலிருந்தும் பிற மாவட்டங்களிலிருந்தும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த தோழர்களும், 50 தாய்மார்களும் திரளாக இந்நிகழ்வில் பங்கேற்றனர். அனைவருக்கும் பகல் உணவு வழங்கப்பட்டது.

## திருச்சி, திருவரங்கத்தில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா சிறப்புக் கூட்டம்

திருச்சி, திருவரங்கம், கீழவாசல் அன்னை பார்வதியம்மாள் நினைவுக் கூடத்தில் திருவரங்கம் பெரியார் பாசறை மூலம் 18.9.2016 ஞாயிறு மாலை 5 மணியளவில் தந்தை பெரியார் 138ஆவது பிறந்த நாள் விழாவும், பேரறிஞர் அண்ணா 108 ஆவது பிறந்த நாள் விழாவும் சிறப்பாக நடை பெற்றது.

விழாவில் பெரியார் பெருந்தொண்டர் மருத்துவர் எஸ்.எஸ்.முத்து, திராவிட இயக்க முன்னோடி, மறு மலர்ச்சி தி.மு.க. அரசியல் ஆய்வு மைய உறுப்பினர் புலவர் க. முருகேசன், தோழர் சீனி-விடுதலை அரசு, மா.பெ.பொ.க. மாவட்டச் செயலாளர் இரா. கலியபெருமாள், பெரியார் பாசறை ந. அன்பழகன், திருச்சி ந. கருணாகரன், சி. இராமமூர்த்தி, க. செகன்னாதன், த. அசோக், கோ. சுரேசு, திருச்சி கவிஞர் இ. சேவியர் ஆகியோரும் பொதுமக்களும் திரளாகக் கலந்துகொண்டனர். தந்தை பெரியாரின் கருத்துகள் அப்பகுதி மக்களிடையே இரண்டு மணிநேரம் பரப்பப்பட்டது.

# பெரியார் ஈ.வெ.ரா 138ஆவது பிறந்தநாள் விழா - சுயமரியாதை வாழ்வியல் சான்றிதழ்ப் பயிற்சி நிறைவு மற்றும் சான்றிதழ் வழங்கும் விழா - நிகழ்ச்சிப் படங்கள்




துரை.கலையரசு வரவேற்புரை



வே.ஆனைமுத்து தலைமையுரை



நீதிபதி அரிபரந்தாமன் அவர்களுக்கு நூல்கள் வழங்கல்



கவிஞர் அறிவுமதிக்கு நூல்கள் வழங்கல்



மா. அண்ணாதுரைக்கு நூல்கள் வழங்கல்



பயிற்சியாளர் தி.ச.குணசேகரன் சான்றிதழ் பெறல்




பயிற்சியாளர் தி.துரைசித்தார்த்தன் சான்றிதழ் பெறல்




க. விசயராசன் சான்றிதழ் பெறல்




வேலூர் மு. சுவாமிநாதன் சான்றிதழ் பெறல்




சீ.வெங்கடேசன் சான்றிதழ் பெறல்




வேலூர் மீ. டில்லிபாபு சான்றிதழ் பெறல்




சு. முருகவேல் சான்றிதழ் பெறல்




செல்வி சான்றிதழ் பெறல்




பு.மா. ஆனந்தன் சான்றிதழ் பெறல்




இரா. சிவப்பிரகாசம் சான்றிதழ் பெறல்




சு.ர. செல்வராஜ் சான்றிதழ் பெறல்




வெ. சுப்பிரமணி சான்றிதழ் பெறல்




வேலூர் சா. குப்பன் சான்றிதழ் பெறல்




காஞ்சி சி. நடராசன் சான்றிதழ் பெறல்




ஆவடி பா. நாகராசன் சான்றிதழ் பெறல்




மு. விசயராகவன் சான்றிதழ் பெறல்



அம்பத்தூர் நா.க. தமிழ்ச்சிற்பி சான்றிதழ் பெறல்



ச. சுரேஷ்குமார் சான்றிதழ் பெறல்




ஓய்வுபெற்ற நீதிபதி அரிபரந்தாமன் விழாப்பேருரை



பயிற்சியாளர் செல்வி உரை



பயிற்சியாளர் சு. முருகவேல் உரை



பயிற்சியாளர் தி.ச.குணசேகரன் உரை



அறங்காவலர் க. முகிலன் உரை



நடுவண் ஒலிப்பரப்புத் துறை அமைச்சக இயக்குநர்
மா. அண்ணாதுரை உரை



கவிஞர் தமிழேந்தி கவிதை வீச்சு



மோ.சி. சங்கர் அறக்கட்டளைக்கு முதல் தவணையாக
ரூ.50,000 வழங்குதல்



மூத்ததோழர் காஞ்சி அரங்க சானகிராமன்
வே.ஆனைமுத்துவுக்கு ஆடை அணிவித்தல்



மருத்துவர் முருகுதுரை நூலகத்திற்காக
அளித்த நூல்களை ஆ.கிருஷ்ணசாமி வழங்குதல்



கவிஞர் அறிவுமதி நிறைவுரை



ப. வடிவேலு நன்றியுரை



பார்வையாளர்களுள் ஒரு பகுதியினர்

# சிங்கூரில் நிலம் கையகப்படுத்தப்பட்டதற்கு எதிராக உழவர்கள் நடத்திய போராட்டமும் உச்சநீதிமன்றத் தீர்ப்பும்

**க. முகிலன்**

மனிதகுல வரலாற்றில் தொடக்க காலத்தில் மேய்ச்சல் சமூகமாக இருந்தபோது, கால்நடைகளே பெருஞ்செல்வமாகக் கருதப்பட்டது. மனிதர்கள் வேளாண்மை செய்வதைக் கற்றபின், நிலம் முதன்மையான உற்பத்திச் சாதனமாகியது. நிலமே செல்வத்தின் அளவுகோலாயிற்று. நிலத்தைச் சார்ந்ததாகவே மனிதகுல வாழ்வு அமைந்தது. தமிழ்ச் சமூகத்தில் நிலத்தை அடிப்படையாகக் கொண்டே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று தமிழரின் அய்ந்திணை வாழ்வியல் அமைந்தது.

சுதந்தர இந்தியாவில் 1950இல் வேளாண்மையையும் மற்றும் அதைச் சார்ந்த தொழில்களையும் தங்கள் வாழ்வாதாரமாகக் கொண்டு 80 விழுக்காடு மக்கள் வாழ்ந்தனர். அதன்பின் ஏற்பட்ட தொழில் வளர்ச்சி, சேவைப் பிரிவின் (Service Sector) வளர்ச்சி காரணமாக 2016 இல் 60 விழுக்காடு மக்கள் நிலத்தை நம்பி வாழ்கின்றனர்.

பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் இரயில் பாதைகள்-சாலைகள், தொழிற்சாலைகள், கல்விச் சாலைகள், மருத்துவமனைகள், அரசு அலுவலகங்கள், படைப் பிரிவு முகாம்கள்-குடியிருப்புகள் முதலானவற்றை அமைத்தல் என்னும் பொது நோக்கத்திற்காக (Public Purpose)வும் பொதுப்பயன்பாட்டுக்காகவும் தனியார் நிலத்தை அரசு கைப்பற்றுவதற்கான சட்டம் 1894ஆம் ஆண்டு இயற்றப்பட்டது.

1991இல் நடுவண் அரசு தாராளமயம், தனியார்மயம், உலகமயம் என்கிற முதலாளிகளுக்கு ஆதரவான கொள்கையை நடைமுறைப்படுத்தத் தொடங்கியது. நிலம் மாநில அதிகாரப் பட்டியலில் இருக்கிறது. ஆயினும் நடுவண் அரசும், மாநில அரசுகளும் தொழில் வளர்ச்சி, அதன் மூலமாக வேலை வாய்ப்பு பெருகுதல், நாட்டின் பொருளாதார வளர்ச்சி உயர்தல் என்கிற போர்வையில் நூற்றுக்கணக்கான-ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை உழவர்களிடமிருந்து கையகப்படுத்தி முதலாளிகளுக்கு அளித்தன.

இந்தியாவின் பல பகுதிகளில் முதலாளிகளுக்காக உழவர்களின் நிலங்கள் பெருமளவில் அரசால் கையகப்படுத்தப்பட்டன. உழவர்கள் தங்கள் நிலத்தையும் வாழ்வாதாரத்தையும் இழந்தனர்; பல வகையான துன்பங்களுக்கு உள்ளாயினர். நிலத்திற்கு உரிய இழப்பீடு வழங்கப்படவில்லை; மறுகுடியமர்த்தலுக்கோ மாற்றுத் தொழில் செய்வதற்கோ அரசு எத்தகைய ஏற்பாட்டையும் செய்யவில்லை. குறைந்த அளவில் இழப்பீடாகத் தரப்பட்ட பணமும் விரைவில் செலவாயிற்று. அதனால் நிலம் சார்ந்து, உழைத்து, கண்ணியமான வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த உழவர்களும், வேளாண் கூலித் தொழிலாளர்களும் நடுத்தெருவில் பிச்சைக்காரர் நிலைக்குத் தள்ளப்பட்டனர். அதனால் அரசின் நிலம் கையகப்படுத்தல் நடவடிக்கைகளைப் பல இடங்களில் வேளாண் குடிமக்கள் கடுமையாக எதிர்க்கத் தொடங்கினர்.



*நீதிமன்றத் தீர்ப்பு வெளியான நாளில் சிங்கூரில் வெற்றிக்களிப்பில் மக்கள்.*

மேற்கு வங்காளத்தில் 2006 ஆம் ஆண்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான கூட்டணி அரசு, ஹூக்ளி மாவட்டத்தில் உள்ள சிங்கூரில், டாடா நிறுவனத்தின் 'நானோ' மகிழுந்து தொழிற்சாலை அமைப்பதற்காக உழவர்களிடமிருந்து தடாலடியாக 1053 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தியது. இதில் பெரும்பகுதி நிலம் இரு போகம் விளையும் நல்ல நீர்ப்பாசன வசதி கொண்டதாகும். எனவே உழவர்கள் தங்கள் நிலம் கையகப்படுத்தப்படுவதை எதிர்த்துப் போராட்டம் நடத்தினர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான இடதுசாரி கூட்டணி மேற்கு வங்காளத்தில் 1977இல் ஆட்சியில் அமர்ந்தது. மேற்கு வங்காளத்தில் பெரும்பகுதி நிலம் குத்தகை முறையில் பயிரிடப்பட்டு வந்தது. நிலப் பண்ணையாளர்கள் குத்தகையாளர்களைத் தம் விருப்பம் போல் மாற்றினர்; பலவகையான கொடுமைகளுக்கு உள்ளாக்கினர். **இடதுசாரி கூட்டணி அரசு ஆட்சியில் அமர்ந்ததும், குத்தகையாளர்களுக்கே நிலத்தை உரிமையாக்கியது. மேலும் நில உச்சவரம்புச் சட்டத்தைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தியது. அதனால் நிலமற்ற கூலித் தொழிலாளர்களுக்கு நிலம் பிரித்தளிக்கப்பட்டது. இதனால் ஊரகப்பகுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பெரும் செல்வாக்குப் பெற்றது.**



*உச்சநீதிமன்றத் தீர்ப்பையொட்டி கொல்கத்தா நகரில் நடந்த வெற்றிப் பேரணியில் மம்தா பானர்ஜி*

**அந்த அடித்தளத்தின் மீதுதான் 1977 முதல் 34 ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சியில் நீடித்தது.**

1977இல் உழவர்களின் உரிமைகளைக் காத்த இடதுசாரி மேற்குவங்க அரசு, புத்ததேவ் பட்டாச்சாரியாவின் தலைமையில் 2006இல் சிங்கூரில் உழவர்களின் நில உரிமையை அடாவடித்தனமாகப் பறித்தது. இதை எதிர்த்த உழவர்களைக் கம்யூனிஸ்ட் கட்சியின் குண்டர்களையும் காவல்துறையையும் ஏவித் தாக்கியது. சிங்கூரில் நடந்த உழவர்களின் போராட்டத்தின் விளைவாக மேற்கு வங்காளத்தில் நந்தி கிராம் பகுதியில் 13,000 ஏக்கர் நிலத்தை இந்தோனேசியாவின் பன்னாட்டு நிறுவனத்துக்கு அரசு அளிக்க முயன்றதற்கும் கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. சிங்கூர், நந்தி கிராம் பகுதிகளில் நிலம் கையகப்படுத்தலுக்கு எதிரான போராட்டம் இந்திய அளவில் மட்டுமின்றி உலக அரங்கிலும் பேசப்படும் நிலையை உண்டாக்கியது.

உழவர்களின் போராட்டத்தில் நக்சல்பாரி இயக்கத்தினரும் முழு மூச்சுடன் ஈடுபட்டனர். மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணாமுல் காங்கிரசுக் கட்சி சிங்கூர் உழவர்களின் போராட்டத்தை முன்னின்று நடத்தும் நிலை உருவானது. 2006இல் மேற்குவங்க அரசு 997 ஏக்கர் நிலத்தை 99 ஆண்டுகள் குத்தகைக்கு டாடா நிறுவனத்துக்கு அளித்தது. டாடா நிறுவனம் மகிழுந்து தொழிற்சாலை அமைப்பதற்கான வேலைகளைத் தொடங்கியது. **மேற்குவங்க அரசின் மிரட்டலுக்கு அஞ்சி உழவர்களில் பெரும்பகுதியினர் அரசு வழங்கிய குறைந்த இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொண்டனர். ஆனால் 400 ஏக்கரின் நில உரிமையாளர்கள் இழப்பீடு தொகையைப் பெற மறுத்து, தங்கள் நிலம் கையகப் படுத்துவதைத் தொடர்ந்து எதிர்த்தனர்.**

2008 சனவரியில் கொல்கத்தா உயர் நீதிமன்றம் டாடா நிறுவனத்துக்காக மேற்கு வங்க அரசு நிலத்தைக் கையகப்படுத்தியது சரியே என்று தீர்ப்பளித்தது. 2008 ஆகத்து மாதம் மம்தா பானர்ஜி சிங்கூரில் காலவரையற்ற உண்ணாநிலைப் போராட்டத்தை மேற்கொண்டார். சிங்கூரில் மிகவும் பதற்றமான நிலை ஏற்பட்டது. அதனால் 2008 அக்டோபரில் டாடா நிறுவனம் சிங்கூரில் நானோ மகிழுந்து தொழிற்சாலை அமைக்கும் திட்டத்தைக் கைவிட்டு வெளியேறியது. அப்போது குசராத்தில் முதலமைச்சராக இருந்த மோடி விடுத்த அழைப்பை ஏற்று, மோடி அரசு அளித்த நிலத்தில் நானோ மகிழுந்து தொழிற்சாலையை டாடா நிறுவனம் அமைத்தது.

1965இல் தமிழ்நாட்டில் இந்தியை எதிர்த்து மாணவர்கள் நடத்திய போராட்டத்தில் தி.மு.க. தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டதன் மூலம் 1967இல் ஆட்சியைக் கைப்பற்றியது. அதுபோல் சிங்கூரில் உழவர்கள் நடத்திய போராட்டத்தில் திரிணாமுல் காங்கிரசு தன்னை முதன்மைப்படுத்திக் கொண்டதன் மூலம் 2011 மே-சூன் மாதங்களில் நடந்த சட்டப்பேரவைக்கான தேர்தலில், 34 ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சியில் இருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை மீண்டும் எளிதில் தலையெடுக்க முடியாத வகையில் தோற்கடித்து ஆட்சியில் அமர்ந்தது.

மம்தா பானர்ஜி முதலமைச்சரானதும், தேர்தலில் அளித்த வாக்குறுதியின்படி, 2006ஆம் ஆண்டு சிங்கூரில் நிலம் கையகப்படுத்தப்பட்டபோது, ஒப்புதல் அளிக்க மறுத்த-இழப்பீடு வாங்க மறுத்தவர்களில் 400 ஏக்கர் நிலத்தை அந்தந்த உழவர்களுக்குத் திருப்பித் தருவதற்கான சட்ட வரைவை முன்மொழிந்தார். ஆனால் டாடா நிறுவனம் அந்த நிலம் மேற்குவங்க அரசுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி தனக்குச் சொந்தமானது என்று கூறி, மம்தா கொண்டுவந்த சட்டத்தை எதிர்த்து கொல்கத்தா நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. இதை விசாரித்த நீதிபதி இச்சட்டம் செல்லும் என்று தீர்ப்பளித்தார். அதனால் டாடா நிறுவனம் கொல்கத்தா உயர்நீதிமன்றத்தின் தனி அமர்வுக்கு மேல் முறையீடு செய்தது. இந்த அமர்வு 400 ஏக்கர் நிலத்தை உழவர்களுக்குத் திருப்பித் தருவதற்கான சட்டம் செல்லாது என்று தீர்ப்பு வழங்கியது. எனவே இத்தீர்ப்பை எதிர்த்து மேற்குவங்க அரசு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. மேலும் உழவர்களும், தன்னார்வ அமைப்புகளும் இதேபோல் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தன.

சிங்கூர் உழவர்கள் மாநில அரசின் அடக்குமுறைகளுக்கு அஞ்சாது நடத்திய வீரத்செறிந்த போராட்டத்தின் விளைவாக, இந்திய அளவில் நிலம் கையகப்படுத்தல் குறித்துப் பெரும் விவாதம் எழுந்தது. குறிப்பாக பெருமுதலாளிய நிறுவனங்களுக்கு, சிறப்புப் பொருளியல் மண்டலங்கள், தொழில் நுட்பப் பூங்காக்கள் அமைப்பதற்காக என்று உழவர்களின் நிலங்களும் அரசின் நிலமும் மிகக்குறைந்த விலையிலோ, நீண்டகாலக் குத்தகையாகவோ அளிக்கப்படுவது குறித்து, பலதரப்பினரும் கடுமையான விமர்சனத்தை முன்வைத்தனர். 2006 முதல் தொடர்ந்து ஊடகங்களில் நிலம் கையகப்படுத்தல் பற்றிய விவாதம் முதலிடம் பெற்று வந்தது.

இந்தப் பின்னணியில் மன்மோகன் சிங் தலைமையிலான நடுவண் அரசு 2013 ஆம் ஆண்டு "நிலம் கையப்படுத்தல், மறுகுடியமர்த்தம், மறுவாழ்வு, சட்டத்தை (Land Acquisition, Rehabilitation and Re-settlement Act 2013) நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றியது. 2014 சனவரி 1 முதல் இது நடப்புக்கு வந்தது.

2013 ஆம் ஆண்டின் நிலம் கையப்படுத்தல் சட்டத்தில், நிலம் கையப்படுத்தலின் வெளிப்படைத் தன்மைக்கும், நியாயமான இழப்பீடு வழங்கப்படுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஒரு திட்டத்திற்காக நிலத்தைக் கையகப்படுத்த முடிவு செய்யும் போது அரசு முதலில், அதனால் ஏற்படக்கூடிய சமூகத் தாக்கங்களை மதிப்பீடு (Social impact assessment-SIA) செய்யவேண்டும். மக்களுக்கும், சுற்றுச்சுழலுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் கண்டறிய வேண்டும். அந்தத் திட்டத்துக்கு உண்மையில் எவ்வளவு நிலம் போதுமானது என்பதை மதிப்பிட வேண்டும். ஏனெனில் இதற்கு முன் தொழில்களுக்குத் தேவைப்படும் நிலத்தின் அளவைப்போல் பலமடங்கு நிலம் கையகப்படுத்தப் பட்டுப் பெருமுதலாளிகளுக்கு வழங்கப்பட்டன. முதலாளிகள் தம்மிடம் அதிகமாக உள்ள நிலத்தை மற்றவர்களுக்குக் குத்தகைக்கு விட்டும், மற்றும் தனியாருக்கு விற்றும் கொள்ளை இலாபம் ஈட்டினர். மேலும் கையகப்படுத்தவுள்ள நிலம் பொதுநலனுக்கு (Public Purpose) உண்மையில் பயன்படக்கூடியதாக உள்ளது தானா என்பதையும் ஆராயவேண்டும்.

அடுத்ததாக, முதலாளிய நிறுவனம் தொழில் தொடங்குவதற்காக நிலத்தைக் கையகப்படுத்துவதாக இருந்தால் 80 விழுக்காடு குடும்பங்களின் ஒப்புதலைப் பெறவேண்டும். அரசும்-தனியாரும் கூட்டாகத் தொழில் தொடங்குவதாக இருந்தால் 70 விழுக்காடு குடும்பத்தினரின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்று 2013 ஆம் ஆண்டிண் சட்டம் வரையறுத்துள்ளது. கையகப்படுத்தப்படும் நிலத்திற்கு, நகரப் பகுதியாக இருப்பின், நிலத்தின் சந்தை மதிப்பைப் போல் இரண்டு மடங்கு தொகையும், ஊரகப் பகுதியாயின், நான்கு மடங்கு தொகையும் நில உரிமையாளர்களுக்கு இழப்பீடாக அளிக்கவேண்டும். கையகப்படுத்தப்படும் நிலத்தைச் சார்ந்து வாழும் வேளாண் கூலித் தொழிலாளர்களுக்கும் அவர்களின் மறுவாழ்வுக்கான இழப்பீடு தர வேண்டும் என்று இச்சட்டம் கூறுகிறது.

**2013ஆம் ஆண்டின் நிலம் கையகப்படுத்தல் சட்டம் என்பது சிங்கூர் உழவர்களின் போராட்டத்தால் விளைந்த ஒப்பரிய சாதனையாகும். ஆனால் முதலாளிகள் இச்சட்டத்தை எதிர்த்தனர்.**

2014ஆம் ஆண்டு மே மாதம் நாடாளுமன்றத் தேர்தலில் பா.ச.க. தனிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது. நரேந்திரமோடி தலைமை அமைச்சரானார். தன்னை பெருமுதலாளிகளின் காவலர் என்று வெளிப்படையாக அறிவித்துக் கொண்டார். நூறு பொலிவுறு நகரங்கள் (Smart Cities) அமைக்கப் போவதாக அறிவித்தார். 2014-15-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தில்லி-மும்பை தேசிய நெடுஞ்சாலையில் 1,483 கிலோ மீட்டர் தொலைவில், 'இந்தியாவில் தயாரிப்போம் வாருங்கள்' (Make-in-India) என்று அந்நிய நாட்டினரை அழைக்கும் கோட்பாட்டைச் செயல்படுத்தும் வகையில் தொழிற்பூங்காக்களை அமைக்கப்போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இவற்றுக்கான நிலங்களைக் கையகப்படுத்தி முதலாளிய நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு 2013ஆம் ஆண்டின் நிலம் கையகப்படுத்தல் சட்டத்தின் விதிகள் தடையாக இருப்பதை நரேந்திரமோடி உணர்ந்தார்.

எனவே, மக்களவையில் தன் ஆட்சிக்கு உள்ள தனிப்பெரும்பான்மை வலிமையைக் கொண்டு நிறைவேற்றிவிடலாம் என்ற நினைப்பில், 2013 ஆம் ஆண்டின் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்யும் வகையில் புதிய சட்டத்தை மக்களவையில் கொண்டு

வந்து நிறைவேற்றினார். ஆனால் காங்கிரசுக் கட்சியின் கடும் எதிர்ப்பாலும் மாநிலங்கள் அவையில் பாரதிய சனதா கட்சிக்குப் பெரும்பான்மை வலிமை இல்லாததாலும் மாநிலங்கள் அவையின் ஒப்புதலைப் பெறமுடியவில்லை. மோடி அரசு கொண்டுவந்த-முதலாளிகளுக்கு ஆதரவான புதிய சட்டத்துக்கு நாடெங்கும் கண்டனங்கள் எழுந்தன. ஆனால் மோடி பின் வாங்கவில்லை. இதற்காக இரண்டு தடவைகள் அவசரச் சட்டம் கொண்டுவந்தார். இறுதியில் எந்தவொரு தலைமை அமைச்சரும் சந்திக்காத அவமானத்தை அவர் ஏற்க நேரிட்டது.

இந்தப் பின்னணியில் சிங்கூரில் நிலம் கையகப் படுத்தப்பட்டது செல்லாது என்று, 31-8-2016 அன்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் வி.கோபாலகவுடா, அருண் மிஸ்ரா ஆகியோர் அளித்த 204 பக்கங்கள் கொண்ட தீர்ப்பு, மம்தாவுக்கு மாபெரும் வெற்றி என்பதைப் போலவே, 2013 ஆம் ஆண்டின் நிலம் கையப்படுத்தல் சட்டத்தைச் சாரமிழக்கச் செய்திட முயன்ற நரேந்திர மோடியின் தலைமேல் விழுந்த சம்மட்டியடியாகவும் இருக்கிறது.

**இத்தீர்ப்பில், ''சிங்கூரில் கையகப்படுத்தப் பட்ட 997 ஏக்கர் நிலத்தை 10 வாரங்களுக்குள் சீர் செய்து, 12 வாரங்களுக்குள் உழவர்களுக்குத் திருப்பித்தர வேண்டும். இழப்பீடாக உழவர்களுக்கு அளிக்கப்பட்ட பணத்தைத் திரும்பப் பெறக்கூடாது. இழப்பீடு பெறாத, 400 ஏக்கருக்குரிய உழவர்களுக்கு இப்போது இழப்பீட்டுத் தொகை வழங்கப்படவேண்டும். ஏனெனில் பத்து ஆண்டுகளாகத் தங்கள் நிலத்தைப் பயன்படுத்த முடியாமல் இருந்தனர்'' என்று நீதிபதிகள் கூறியுள்ளனர்.**

நீதிபதிகள் வி.கோபாலகவுடாவும், அருண் மிஸ்ராவும் சிங்கூரில் நிலம் கையகப்படுத்தியது செல்லாது என்று தீர்ப்பளித்தாலும் இருவரும் அதற்கு வெவ்வேறு காரணங்களைக் கூறியுள்ளனர். தனித்தனியாகத் தங்கள் தீர்ப்பை எழுதினர். நீதிபதி கோபாலகவுடா, ''1894 ஆம் சட்டத்தில் பிரிவு 3 (எஃப்) இல் குறிப்பிட்டுள்ள 'பொது நோக்கத்திற்காக" (Public Purpose) என்கிற விதி சிங்கூரில் நிலம் கையப்படுத்தப் பட்டதற்குப் பொருந்தாது. ஏனெனில் இந்த நிலம் ஒரு தனியார் முதலாளி தொழில் தொடங்குவதற்காக மட்டுமே தரப்பட்டுள்ளதால் இதில் பொது நோக்கம் என்பது அறவே இல்லை'' என்று தன் தீர்ப்பில் கூறியுள்ளார்.

நீதிபதி அருண் மிஸ்ரா, ''ஒரு தனியார்-முதலாளிய நிறுவனம் தொழில் தொடங்க அரசு உழவர்களிடம் நிலத்தைக் கையகப்படுத்தி அளிப்பது என்பதில் 'பொது நோக்கம்' அடங்கி இருக்கிறது. முதலாளி தொழில் தொடங்குவதன் மூலம் பலருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது. உற்பத்தி பெருகுகிறது'' என்று தன் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.



*நிலம் பறிக்கப்பட்ட உழவர்களுக்கு முதலமைச்சர் மம்தா பானர்ஜி நிலத்தை அவர்களுக்கு திருப்பி அளிப்பதற்கானப் பட்டாக்களை வழங்கினார்*

**ஆயினும் இரண்டு நீதிபதிகளும் 1894 ஆம் ஆண்டின் சட்டத்தில் பகுதி 7 (Part VII) இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் நிலம் கையகப் படுத்தப்பட்டபோது பின்பற்றப்படவில்லை என்று கூறி, இது செல்லாது என்று தீர்ப்பு வழங்கினர்.** நிலம் கையகப்படுத்துவதற்காக அமர்த்தப்பட்ட கலெக்டர், உழவர்களிடம் முறையாகக் கலந்தாய்வு நடத்தவில்லை. அவ்வாறு நடத்தியதாக ஒரு பொய்யான அறிக்கையை அரசிடம் அளித்தார். அரசும் அதன் உண்மைத் தன்மையை ஆராயாமல் அப்படியே ஏற்றுக்கொண்டு நிலத்தைக் கையகப்படுத்தியது. இது மக்களுக்கு இழைத்த அநீதியாகும் என்று நீதிபதி அருண்மிஸ்ரா தன் தீர்ப்பில் பதிவு செய்துள்ளார்.

உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி, முதலமைச்சர் மம்தா பானர்ஜி 15.9.2016 அன்று சிங்கூரில் நடந்த மாபெரும் விழாவில், உழவர்களுக்கு நிலத்தைத் திருப்பித் தரும்வகையில் 9,117 பேருக்கு நிலப்பட்டாக்களை வழங்கினார். நருமதை அணைக்கு எதிராகப் போராடி வரும் சமூகச் செயற்பாட்டாளர் மேதா பட்கரும் இந்த விழாவில் கலந்து கொண்டார்.

2016 மே மாதம் நடைபெற்ற தேர்தலில் 295 இடங்களில் 211 இடங்களை மம்தா கட்சி வென்றது. சி.பி.எம்.கட்சியின் தலைமையிலான இடதுசாரி கூட்டணி 32 இடங்களை மட்டுமே வென்றது. 31-8-2016 அன்று வெளியான உச்சநீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சிங்கூரில் தான் செய்தது தவறு என்று ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை. மாறாக 1894 ஆம் ஆண்டின் சட்டத்தில் உள்ள குறைபாடே காரணம் என்று கூறியது. 2013 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்தல் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகேனும் சிங்கூரில் கையகப்படுத்தப்பட்ட நிலத்தை உழவர்களுக்குத் திருப்பி அளிக்கலாம் என்று அக்கட்சி கோரியிருக்க வேண்டும். ஆணவத்தின் காரணமாக அவ்வாறு கோரவில்லை. சிங்கூர் உழவர்களின் போராட்டம் தங்கள் உரிமைகளுக்காகப் போராடும் மக்களுக்கு ஒரு ஒளிவிளக்காகத் திகழும்.

# மானுட விடுதலை : பெரியாரும் அம்பேத்கரும்

\- குட்டுவன்

19ஆம் நூற்றாண்டில் இருபெரும் சமூகப் புரட்சியாளர்கள் பிறந்து இந்திய சமூகத்தில் புரை யோடியிருந்த சாதியத்திற்கு எதிராகக் களமாடினர். இந்த இருவரும் இன்றும் அவர்களின் சிந்தனை வடிவில் தொடர் போரினை நிகழ்த்தி வருகின்றனர்.

தந்தை பெரியார் செப்டம்பர் 17, 1879இல் பிறந்து 95 ஆண்டுகள் வாழ்ந்து டிசம்பர் 24, 1973இல் மறைந்தார். அண்ணல் அம்பேத்கர் ஏப்ரல் 14, 1891இல் பிறந்து 65 ஆண்டுகள் வாழ்ந்து 6 டிசம்பர் 1956இல் மறைந்தார். இந்தியத் தலைவர்களை அண்ணல் அம்பேத்கருடன் ஒப்பிட்டால் முறைசார்ந்த கல்வியைப் பல போராட்டங்களுக்கு இடையே பெற்று அமெரிக்கா-இங்கிலாந்து பல்கலைக்கழகங்களில் பலர் வியக்கும் வண்ணம் முனைவர் பட்டங்களைப் பெற்றவர். ஆய் வின் உச்சத்திற்கே சென்று சிறந்த படைப்புகளை உலகிற்கு வழங்கியவர். கொடுமைக்குள்ளான தாழ்த் தப்பட்ட சமுதாயத்தில் பிறந்து வாழ்க்கை முழுவதும் உயர் சமுதாயத்தினரோடு போராடிப் பெரும் சாதனைகளைப் படைத்தவர்.

தந்தை பெரியார் பள்ளிப்படிப்பையே தொடராதவர். இருப்பினும் பட்டறிவால்-பகுத்தறிவால் உயர்ந்தவர். 70 ஆண்டுகள் ஆதிக்க சமூகத்தினருக்கு எதிராக இயக்கம் கண்டு தொடர் போராட்டத்தை நடத்தியவர். 1920ஆம் ஆண்டுகளில் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டு சென்னை மாகாணத்தின் காங்கிரசு இயக்கத்தின் செயலாளராக, தலைவராக உயர்சாதி சமூகத்தினர் புடைசூழ வலம் வந்தவர். காங்கிரசு இயக்கத்தில் உயர்சாதியினரால் கடைப்பிடிக்கப்பட்ட வருணா சிரமக் கொள்கைக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியவர். தந்தை பெரியார் கண்ட இயக்கத்தின் தாக்கமும், அண்ணல் அம்பேத்கரின் கருத்தியலும் இன்றளவும் அனைத்துத் துறைகளிலும் காலத்தின் தேவைக் கருதி விவாதிக்கப்படுகின்றன. சான்றாக அண்ணல் அம்பேத்கரின் நூலான சாதியை அழித் தொழித்தல் (Annihilation of Caste) ஆங்கிலத்தில் 1944இல் வெளியிடப்பட்டவுடன், 1500 படிகள் இரண்டு மாதங்களுக்குள் விற்றுவிட்டன. தந்தை பெரியார் 1925இல் தொடங்கிய குடிஅரசு வார இதழ் தமிழகத்தில் அதிகம் விற்ற ஏடுகளில் ஒன்றாகும். ஆனந்த விகடன் இதழின் தொடக்க இதழ் விளம்பரம் குடிஅரசு வார இதழில் வெளியானது. 1.7.1974இல் பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் திருச்சி வே.ஆனைமுத்து அவர்களால் வெளியிடப்பட்ட சில ஆண்டுகளிலேயே அனைத்துப் படிகளும் விற்றுவிட்டன. 20 தொகுதிகள் அடங்கிய நூலின் இரண்டாம் பதிப்பு 2010இல் வெளி வந்து சில நாள்களிலேயே விற்றுவிட்டன. அண்ணல் அம்பேத்கரின் அனைத்து தொகுப்புகளும் மராட்டிய மாநில அரசால் 1979 முதல் 1989க்குள் ஆங்கில மொழியில் வெளியிடப்பட்டுச் சில மாதங்களிலேயே விற்று தீர்ந்துவிட்டன. இந்துமத சனாதனிகள் பலர் இந்நூலின் பல படிகளை வாங்கி எரித்துவிட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்விரு தலைவர்களும் இந்துமத சனாதனவாதிகளுக்கு தொடர் தொல்லை தருபவர்களாகவே இருக்கின்றனர். எவ்வளவு இடர் தந்தாலும் இந்த இரு சிந்தனையாளர்கள் மீண்டும் மீண்டும் எழுகின்றனர். சாதியத்தைத் தகர்க்கின்றனர். எடுத்துக்காட்டாக நடுவண் அரசின் உயர்கல்வி நிறுவனமான இந்தியத் தொழில்



நுட்பக் கழகத்தில் (IIT, சென்னை) இந்தப் புரட்சியாளர்கள் பெயரில் அமைக்கப்பட்ட வாசகர் வட்டத்திற்குத் தடை விதிக்கப் பட்டது. தடையும் தகர்க்கப்பட்டது. இந்நிகழ்வுகளிலிருந்தே ஆதிக்க சமூகத்தினரும் பிற்போக்குவாதிகளும் இந்த இருவர் இணைவதை எப்படிப் பார்க்கிறார்கள் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. பெரியாரும் அம்பேத்கரும் சாதி ஒழிப்புக் களத்தில் இன்றும், என்றும் தேவைப்படுவார்கள் என்பதற்கு இவைகள் சான்று பகர்கின்றன.

சாதி மதம் கடவுள் இவை இந்தியச் சமூகத்தில் ஒன்றோ டொன்று வலிமையான முறையில் பிணைக்கப்பட்டுள்ளன. மற்ற நாடுகளில் மதம் தனித்தே நிற்கிறது. மேலும் இங்கு சமூக அடித்தளம் பொருளாதார வளர்ச்சியில் பெரும்பான்மையோர் பங்கு பெறுவதையே தடை செய்கிறது. இதைச் சுட்டுவதற்காக அம்பேத்கர் தனது நூலில் சமதர்மக் கொள்கைத் திட்டங்கள் வழியாக ஒரு சமத்துவ சமுதாயத்தைக் கட்டியமைக்க முடியும் என்று மேற்கத்திய நாடுகளின் பாணியில் சமதர்மவாதிகள் தங்களின் கொள்கைகள எடுத்துரைக்கின்றனர் பின்பற்றுகின்றனர். சாதிய அடிப்படையில்தான் சமூகத் தகுதி மேலாதிக்கம் உருவாகிறது. இந்திய சொத்துரிமையே சாதிய அடிப்படையில்தான் உரு வாகியது. சாதிய ஏற்றத்தாழ்வுகளுக்கு ஏற்ப சில தொழில்களும் பாகுபாடு செய்யப்பட்டன. இத்தகைய சூழலில் மேற்கத்திய நாடுகளில் பின்பற்றப்படுகிற வேலை பகுப்பு முறை (Division of Labour) நம் நாட்டிற்கு எவ்வாறு பொருந்தும்?

இங்குள்ள சமூகத்தில் ஏணிப்படிக்கட்டு அடுக்கு முறை சாதிய அமைப்பு கோலோச்சுகிறது. இதன் வழியே சமூகத்தின் பெரும்பான்மையோர் மீது ஒடுக்குமுறை நிரந்தரப்படுத்தப் படுகிறது. "இந்து என்கிற பெயரே ஒரு வெளிநாட்டான் இட்ட பெயர். முகமதியர்களால், தங்களை வேறுபடுத்திக் காட்டிக் கொள்வதற்காக அளிக்கப்பட்ட பெயர். இந்தியத் துணைக் கண்டத்தில் இசுலாமியர் படையெடுப்புக்கு முன், இந்து என்ற சொல் எந்த சமஸ்கிருத நூலிலும் இடம் பெறவில்லை (The name Hindu is itself a foreign name. It was given by the Mohammedans to the natives for the purpose of distinguishing themselves. It does not occur in any Sanskrit work prior to the Mohammedan invasion, p.50, Dr.Babasaheb Ambedkar, Writings *and Speeches, Vol.I,1979)"* என்கிறார் அம்பேத்கர்.

எனவே இந்து சமூகம் என்ற ஓர் அமைப்பே கிடையாது. சாதி என்பது ஒரு கூட்டமைப்பே கிடையாது. ஒரு சாதி மற்ற சாதியுடன் இணைந்தது என்பதற்கான உணர்வே இல்லை. ஆனால் இந்து முஸ்லிம் கலவரத்தின் போதுதான் இந்த சாதிகள் ஒன்றோடொன்று இணைகின்றன என்று அடுக்கடுக்கான தரவுகளின் அடிப்படையில் சாதிய அமைப்பின் எதிர்மறை விளைவுகளை அம்பேத்கர் விளக்கிக் காட்டினார். ‘‘சதுர் வர்ணம்’’ புதியதன்று. வேதத்தைப் போன்று பழமையானது. இந்திய வரலாற்றில் ஒரே ஒரு காலகட்டத்தில்தான் புகழ், உயர்வு, சுதந்தரம் மூன்றும் இருந்தது. அதுதான் மௌரியர்கள் காலமாகும். மற்ற எல்லாக் காலகட்டங்களிலும் தோல்வியும் இருளும்தான் இருந்தன. மௌரியர்களின் காலத்தில்தான் சதுர்வர்ணம் முழுமையாக அழித்தொழிக்கப்பட்டது. பெரும் பான்மையான சூத்திரர்கள் அவர்களாகவே முன்வந்து அரசாள்பவர்களாக மாறினர் என்று அம்பேத்கர் வாதிடுகிறார்.

பார்ப்பனர்களை மதச்சார்பற்ற பார்ப்பனர்கள், மத குருமார்கள் என்றும் பிரிப்பது ஒரு பயனற்ற வேலை என்றும் அவர்கள் ஓர் உடலில் இருக்கும் இரண்டு கைகள். ஒன்று மற்றொன்றின் வாழ்விற்காகப் போராடும் என்றும் அம்பேத்கர் மதிப்பீடு செய்தார். இது எவ்வாறு தற்காலத்திற்குப் பொருந்தி வருகிறது என்ற ஐயம் கூட சிலருக்கு எழலாம். முற்போக்குக் கட்சியுடன் தொடர்பு உள்ளவர் என்று கூறிக்கொள்ளும் இந்து என்.ராம், கொலைக் குற்றத்திற்காக காஞ்சி சங்கராச்சாரியைக் கைது செய்தவுடன் காரில் பின் தொடரவில்லையா?

ஒரு பெண்ணுடன் ஓடிப்போன ஜெயேந்திரர், திரும்பி வரும்போது, தமிழக எல்லையில், அன்றைய குடிஅரசுத் தலவர் ஆர்.வெங்கட்ராமன் வரவேற்க வில்லையா?

இந்தியச் சமூகத்தில் பெரும் பிளவை ஏற்படுத்தி, பொருளாதாரத்தின் முக்கியமான காரணியான உழைப்பைப் பெரும்பான்மையான சூத்திரர்களுக்கு வழங்கிவிட்டது. கடும் உழைப்பை நல்கிய பெரும்பான்மையான மக்கள் ஒடுக்கப் பட்டார்கள்; ஒதுக்கப் பட்டார்கள்; தாழ்த்தப்பட்டார்கள். அம்பேத்கர் இதன் காரணமாகத்தான் கொதித்தெழுந்து கீழ்க்கண்ட வினாக்களை வைத்தார்: உலகில் எந்தவொரு சமூகத்தி லாவது அணுகமுடியாத, தொடமுடியாத நிழல்பட முடியாத, பார்க்கக்கூடாத மக்களைத் தன்னகத்தே உள்ளடக்கி உள்ளதா? உலகின் எந்தச் சமூகத்திலாவது குற்றப்பரம்பரை என்று மக்கள் சமூகத்தில் உள்ளதா? எந்தச் சமூகத்திலாவது எப்படி ஆடை அணிவது என்று கூடத் தெரியாமல் காட்டில் வாழும் பழங்கால மக்களை இன்றளவிலும் காணமுடியுமா?

நிலம், மூலதனம் அமைப்பு போன்ற மற்ற பொருளாதாரக் காரணிகளை உயர் வகுப்பினரின் பிடியில் தள்ளிவிட்டது. எனவேதான் அம்பேத்கர் குறிப்பிடுவது போன்று கிழக்கிந்தியக் குழும ஆட்சி தொடங்கிய காலத்தில் இவர்களின் செல்வாக்கு ஆங்கிலேயர்களைக் கூட இவர்களின் வசதிக்கேற்ப சட்டங்களை இயற்றுவதற்கு சட்டமியற்றச் செய்தது. இவர்களுடைய செல்வாக்குக் கிழக்கிந்தியக் கம்பெனியின் பிரிட்டி ஆட்சியினர் கூட ஏற்றுக் கொள்கிற அளவிற்கு இருந்ததையும் அம்பேத்கர் கூறியுள்ளார். பழங்கால இந்துச் சட்டத்தின்படி பிராமணர்கள் மத குருமார்களுடைய நிலையைப் பெற்றுவிட்டதனால் அவர்கள் கொலைக் குற்றம் செய்தாலும் தூக்குத் தண்டனைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள். இப்பழங்கால உரிமையைக் கிழக்கிந்திய கம்பெனி 1817 வரை அவர்களுக்கு நீட்டித்தது. இந்திய சமுதாயத்தில் புராணி கர்களின் கொடுங்கோல் ஆட்சி எப்படி நிலை பெற்றது. மதத்தால் இலாபம் பெற்று, சமுதாயத்தைத் திட்டமிட்டு விழுங்கியவர்கள்தான் பிராமணர்கள். பிராமணர்களால் டன் கணக்கில் தயாரிக்கப்பட்ட புராணங்களும் சாத்திரங்களும் செல்வப் புதையலாகக் கருதப்பட்டு சூழ்ச்சிமிக்க தந்திரங்களாக பிராமணர்களால், மூட நம்பிக்கையுடைய இந்துக்களை வெகுஜன ஏழைகளைச் படிப்பறிவற்றவர்களை முட்டாளாக்கி வஞ்சித்துச் சுருட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டனர் (Dr.Ambedkar Writings and Speeches, vol.1, page 218-220).

அம்பேத்கரின் மேற்கூறிய கருத்தும் கணிப்பும் இன்றளவும் அரசியலிலும் பொருளாதாரத்திலும் ஆட்சியிலும் தொடர்ந்து நிலை பெற்றிருப்பதை விடுதலை பெற்ற இந்தியாவில் பல நிகழ்வுகள் உறுதிப் படுத்தியுள்ளன.

இந்தியாவின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேரு ஒரு முற்போக்குச் சிந்தனையாளர். தன்னை ஒரு பகுத்தறிவாளராக அடையாளம் காட்டிக்கொண்டு செயல்பட்டார். அப்படிப்பட்ட பிரதமர் நேருவே பனாரஸ் பிராமணர்களின் பிடியில் சிக்கிக்கொண்டார் என்பதைக் கீழ்க்கண்ட வினாக்கள் மூலம் அம்பேத்கர் எடுத்து ரைக்கிறார்.

பிரதமர் நேரு, 1947 ஆகஸ்ட் 15ஆம் நாளில் ஒரு பிராமணன் விடுதலைப் பெற்ற சுதந்திர இந்தியாவின் முதல் பிராமணப் பிரதமராகும் நிகழ்வைக் கொண்டாடும் வகையில் பனராஸ் பிராமணர்களால் நடத்தப்பட்ட யாகத்தில் அமர வில்லையா? இந்த பிராமணர்கள் கொடுத்த ராஜ தண்டத்தை அணியவில்லையா? கங்கையிலிருந்து பிராமணர்கள் கொண்டு வந்த நீரைக் குடிக்கவில்லையா?

இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர். இராஜேந்திர பிரசாத் பிராமணர்களிடம் அடிபணிந்தது குறித்து அம்பேத்கர் வினவுகிறார் இந்திய குடியரசுத் தலைவர் அண்மையில் பனாரசுக்குச் சென்று பிராமணர்களை வழிபட்டு அவர்களின் பாதங்களை நீரால் கழுவி அதைக் குடிக்கவில்லையா?

இது போன்ற நிகழ்வுகள் இன்றும் தொடர்கின்றன. மக்கள் தொகையில் 3 விழுக்காடு அளவில் உள்ள பிராமணர்கள் உச்சநீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள் நடுவண் அரசின் பெரும் பொறுப்புகளில் 50 விழுக்காட்டிற்கு மேல் இன்றும் இடம் பெற்றுள்ளனர் என்பதை அண்மைப் புள்ளிவிவரங்கள் சுட்டுகின்றன. எனவே சாதியம் பல நிலைகளில், பல வடிவங்களில் ஒரு கொடிய அடக்குமுறை கருவியாக இன்றும் நிலை பெற்றுள்ளது. மேலும் கல்வி அறிவு பெற்ற தெளிவு பெற்ற பின்தங்கியோர் தாழ்த்தப்பட்டோர் வேலை வாய்ப்புகளில் - உயர் பதவிகளில் உரிய விழுக்காட்டு அளவிற்கு இடம் பெறாத அளவிற்கு அவ்வப்போது சட்டங்களை இயற்றித் தீர்ப்புகளை வழங்கி உள்ளடக்கிய வளர்ச்சி (Inclusive growth) என்ற அரசால் அறிவிக்கப்படும் கொள்கையைச் சிதைக்க முற்படு கின்றனர்.

தனியார் துறையில், குறிப்பாக மென்பொருள் தொழிலில் இந்திய அளவிற்கு உயர் சாதியினரின் ஆதிக்கமே இன்றும் நிலைபெற்றுள்ளது. பெரியார் அண்ணா, காமராசர் போன்ற பெருந்தலைவர்கள் இடஒதுக்கீடு கொள்கையில் சரியான விழிப்புணர்ச் சியுடன் தமிழ்நாட்டில் செயல்பட்டதாலும், விதிவிலக்

காகத் தமிழ்நாட்டில் காங்கிரசுக் கட்சி இந்துமத சனாதனிகளின் ஆதிக்கத்தில் செல்லாத காரணத்தினாலும் பா.ஜ.க. தமிழ்நாட்டில் வேரூன்ற முடியாமல் திண்டாடுகிறது.

சென்னை வளர்ச்சி ஆய்வு மையம் (Madras Institute of Development Studeis), சென்னை தொழில்நுட்பக் கழகம் (Indian Institute of Technology, Chennai) ஆகிய கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் விஜய பாஸ்கர், சுரேஷ்பாபு ஆகிய ஆய் வாளர்கள் சென்னையில் தகவல் தொழில் நுட்பத் துறையில் தனியார் துறையிலும் அரசு தனியார் பங்களிப்போடு செயல்படும் துறைகளிலும் வேலை வாய்ப்புகளைப் பெற்றவர்கள் பற்றிய ஒரு கள ஆய்வினை மேற்கொண்டனர். அந்த ஆய்வின்படி ஊர்ப்புறங்கள், சிறு நகரங்களில் படித்த தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சென்னையின் தகவல் தொழில்நுட்பத் துறையில் இடம் பெற்று வருகின்றனர் என்ற புள்ளி விவரங்களை அளித்துள்ளனர் (EPW, ‘The Politics of Urban Mega-projects of India : Income employment Linkages in Chennai’s IT Corridor, April23> 2016.vol.No.17, PP.85-92). இவர்களது சராசரி மாத வருமானம் அரசு மற்றும் பொதுத்துறை, தனியார் துறைகளைவிட அதிகமாகவும் உள்ளது என்றும் விளக்கி யுள்ளனர். இத்தகைய ‘‘உள்ளடக்கிய வளர்ச்சி’’ மற்ற மாநிலங் களில் இல்லை என்பதையும் சுட்டியுள்ளனர். இத்தகைய சமூக நீதியைத் தமிழ்நாடு அடைந்து வந்துள்ளதற்குத் தந்தை பெரியார் நிகழ்த்திய பெரும் போராட்டங்களும் காரணங்களாக அமை கின்றன.

தந்தை பெரியார் சாதியத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது 1948ஆம் ஆண்டு செருப்பைத்தைக்கும் தொழில் ஒரு கூட்டத்திற்கே அதுவும் இந்துமத தர்மப் படி 5ஆவது சாதிக்கே ஒதுக்கப்பட்டுவிட்டதால் தான், அது நம் நாட்டில் இழிதொழிலாகக் கருதப்பட்டு வருகிறதே ஒழிய அத்தொழில் இழிதொழில் என்பதற்காக அல்ல. அது போல்தான் வீதிகூட்டும் தொழிலும் கழிவறை சுத்தம் செய்யும் தொழிலும். மணியடிக்கும் தொழிலுக்குப் பெருமை இருந்து வருவதற்கும் இதுதான் காரணம். அத்தொழில் உயர்சாதிப் பார்ப்பானுக்கென்றே ஒதுக்கப்பட்டு விட்டதால்தான், உயர்வாகக் கருதப்பட்டு வருகிறதே ஒழிய அத்தொழில் உயர் வானது என்பதற்காக அல்ல. ஆகவே தொழில் காரணமாக இவர்கள் இழி மக்களாக இருக்கிறார்கள் என்று யாரும் கூறிவிட முடியாது. இந்தத் தொழிலாளிகளுக்கு உணர்ச்சி வரவேண்டும். நாங்கள் மட்டும் ஏன் உடலுழைப்பு செய்தே வாழ வேண்டும்? அப்படியிருந்தும் நாங்களேன் இழிசாதி மக்களாக வாழ வேண்டும்? என்று தொழிலாளர்கள் கிளர்ச்சி செய்ய வேண்டும். இன்றைய தொழிலாளர்கள் கூலி உயர் விற்காகக் கிளர்ச்சி செய்கிறார்களே ஒழிய, தமது இழிவு நீங்கக் கிளர்ச்சிச் செய்யக் காணோம். கூலி உயர்வால் பொருள் விலை ஏறுகிறது. விலை ஏற்றத்தைத் தொழிலாளிகள் தாம் சாமான் வாங்கும்போது கொடுக்க வேண்டியிருக்கிறது என்ற பொருளாதாரத்தை இவர்கள் உணரவில்லை; இவர்கள் தலைவர்களும் இவர்களுக்கு இதை உணர்த்துவ தில்லை. இந்த தனித்த உயர்ந்த நெறி சார்ந்த பெரியார் சிந்தனையை ஏன் தொழிலாளர் சங்கங்கள் பின்பற்றவில்லை என்பது ஆய்விற்குரியதாகும்.

- (தொடரும்)

## புதுச்சேரியில் விடுதலைவீரர் சீனுவாசன்-தனலெட்சுமி அறக்கட்டளை ஒன்பதாம் சொற்பொழிவு

புதுச்சேரி அரசு மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் சார்பில், 6.9.2016 செவ்வாய் முற்பகல் 10 முதல் 12.30 மணிவரையில், தொல்காப்பியர் அரங்கத்தில், ‘‘விடுதலைவீரர் சீனுவாசன்-தனலெட் சுமி அறக்கட்டளை’’யின் ஒன்பதாம் சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றது. புதுச்சேரி அரசு கலை-பண் பாட்டுத் துறை இயக்குநர் சு. கணேசன் தலைமை ஏற்றார்.

சீனு. திருமுகம், சீனு. தமிழ்மணி, புதுவைத் தமிழ்நெஞ்சன், சீனு.திருஞானம், சீனு.தனலெட்சுமி அம்மையார் முன்னிலை ஏற்றனர். மொழியியல் - பண்பாட்டு நிறுவன இயக்குநர் முனைவர் பக்தவத் சல பாரதி வரவேற்புரையாற்றினார்.

சென்னை அம்பத்தூர் பெரியார்-நாகம்மை அறக் கட்டளைத் தலைவர் வே. ஆனைமுத்து, ‘‘தாய்நாடு, தாய்மொழி:இந்தியாவில் இன்றைய நிலை’’ என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

முனைவர் சிலம்புசெல்வராசு நன்றியுரையு டன், பகல் 12.30 மணிக்கு விழா முடிவுற்றது.

அனைவர்க்கும் இனிய விருந்து அளிக்கப்பட்டது.

## கீழ்பென்னாத்தூர் புலவர் வி.நடாரசன் மறைவு



மா.பெ.பொ.க. ஆர்வல ரும் கட்சியின் முயற்சிக்கெல் லாம் துணை நின்றவரும், நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணி நிறைவு பெற்ற வரும் தமிழேந்தியின் ஆசிரியர் பயிற்சித் தோழருமான அன்பு தோழர் வி.நடராசன் அவர்கள் 05.09.2016 காலை 4.00 மணியளவில் இயற்கை எய்தி னார்.

அன்னார் 13.11.1949 பிறந்தவர். தம் மக்கள் ந.கபிலன், ந. பூபாலன் இவர்களுக்கு நல்ல கல்வி நிறைவான வேலை கிடைக்க சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்தார். அன்னாரை இழந்து வாடும் அவரது துணைவியார் ந.இந்திரா, மகன்கள், மருமக்கள், பேரக் குழந்தைகள் மற்றும் உறவினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

# குழந்தைகளுக்குத் தமிழைக் கற்பிப்போம்!

- இலக்கியப் புரவலர் மாம்பலம் ஆ. சந்திரசேகர்

வெள்ளைக்காரர்களை எனக்கு மிகவும் பிடிக்கிறது. அவர்கள் தோலின் நிற மயக்கத்தில் அல்ல; அவர்களின் ஆய்வில் உண்மை சொல்லும் தராசு நெஞ்சத்தின் வெள்ளை மனத்தின் அடிப்படையில்!

அண்மையில் அவர்கள் பழமையான பத்து மொழிகளின் எழுத்தின் அடிப்படையில் ஆய்வு செய்து வெளியிட்டுள்ளார்கள். அது முகநூலில் பதியப்பட்டு இருக்கிறது. ஒலி, ஒளி அடிப்படையில் காணக் கிடைக்கிறது.

'லீனா டிராம்பர்' என்ற மொழியியல் ஆய்வாளர் ஒரு பெண் என்பது சிறப்பு.

அவர்கள் ஆதாரபூர்வமாகப் பழமையான மொழிகளின் எழுத்துகளை ஆய்ந்து, எந்தெந்த ஆண்டுகளில் எந்த வரி வடிவம் தொடங்கித் தொடர்ந்தது என்று ஒப்பிட்டுக், காரண காரியத்தோடு அளிக்கிறார்கள்.

**மொழித்தொன்மை - எழுத்து வடிவம் - ஆண்டு**

| | | | |
|---|---|---|---|
| 1. | இலத்தீன் | 2016+75 | = 2091 |
| 2. | ஆர்மீனியன் மொழி | 2016+450 | = 2466 |
| 3. | கொரியன் மொழி | 2016+600 | = 2616 |
| 4. | ஹீப்ரு (ஏசுநாதர் பேசியது) | 2016+1000 | = 3016 |
| 5. | அராபிக் (நபிகள் மொழி) | 2016+1000 | = 3016 |
| 6. | சீனமொழி | 2016+1200 | = 3216 |
| 7. | கிரேக்க மொழி (சாக்ரடீஸ்) | 2016+1450 | = 3466 |
| 8. | எகிப்து மொழி | 2016+2600 | = 4616 |
| 9. | சமசுகிருத மொழி | 2016+3000 | = 5016 |
| 10. | தமிழ்மொழி | 2016+3484 | = 5500 |

உலகின் தொன்மையான பத்து மொழிகளில் மூத்த முதல் மொழி தமிழ். ஏராளமான விரிந்த இலக்கியம், இலக்கணம் கண்டு செழித்த மொழி. 5,000 ஆண்டுகள் கடந்த மொழி தமிழ் என்று சொல்லியிருப்பவர் ஓர் ஆங்கிலேயர். அவரின் ஆங்கிலம் இந்த வரிசையில் இல்லை.

முதலில் தமிழ்; தொடர்ந்து சமசுகிருதம். அதற்குப் பின்னர் எகிப்து, கிரேக்கம், சீனம், அரபி, ஹீப்ரு, கொரியன், ஆர்மீனியன், இலத்தீன் மொழி என்று, வரிசை பின்நோக்கி நகர்கிறது.

**இதில் தமிழ், சீனம் மட்டுமே மக்கள் பேசும் மொழியாகவும், எழுத்து மொழியாகவும் விளங்குகின்றன. பிற மொழிகளில் சிலர் கட்டமைக்க முயற்சி செய்கிறார்கள்.**

எனவே, மொழி நிலைக்க வேண்டும் என்றால் - பேசும் மொழியின் எழுத்து நிற்க வேண்டும். எழுத்து நிற்க வேண்டும் என்றால் எளிமை இருக்க வேண்டும்.

இன்று தமிழுக்கு மிகப்பெரிய அறைகூவலே பிற மொழியின் தாக்கம். குறிப்பாக ஆங்கிலம். தற்காலத்தில் தமிழ் பேசும் குடும்பத்து இளைய தலைமுறைகள் தமிழ் எழுத்தைக் கைவிட்டு, ஆங்கில எழுத்தில் தமிழ் மொழியை எழுதும் போக்கு நிலைத்து விட்டது. முகநூலில் தமிழ் பேசும் ஆங்கில எழுத்துகள்-விமர்சனம்-கருத்துகள்-தகவல்கள் மலிந்து விட்டன; பெரும் அதிர்ச்சி.



ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என் பதைக் கொடுமையான ஒரு மரண வாக்கு மூலம் சொல்லியது.

முகநூலில் தன்னுடைய படத்தை ஆபாசமாக மாறுதல் (மார்பிங்) செய்யப்பட்டு, வெளியிட்டதை அடுத்து, சேலத்தைச் சேர்ந்த பட்டதாரிப் பெண் விணுப் பிரியா கடந்த சூன் 27ஆம் நாள் தற்கொலை செய்து கொண்டார். அவர் ஒரு கண்ணீர்க் கடிதம் எழுதி வைத்துவிட்டு இறந்திருக்கிறார். "நான் யாருக்கும் என் படத்தைக் கொடுக்கவில்லை; அனுப்பவில்லை. இப்படி எடுக்காத படத்தை ஆபாசமாக மார்பிங் செய்து வெளியிட்டதைச் சொன்னாலும் நம்பவில்லை. என்னைப் பெற்றவர்களே என்னை நம்பவில்லை. இனி நான் வாழ்வதிலே பொருள் இல்லை" என்று மனம் நொந்து எழுதி வைத்துவிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

தமிழ் மட்டுமே படிக்கத் தெரிந்த தாய்க்கு எழுதியது தமிழ்மொழியில். ஆனால் எழுத்து தமிழில் இல்லை. ஆம்! தமிழ் எழுத்தில் இல்லை. ஆங்கில ரோமன் வடிவ எழுத்தில் எழுதியிருக்கிறார். அங்கே தமிழ் எழுத்து செத்துப்போய் விட்டது. ஆம்! 5,000 ஆண்டுகளுக்கு முந்தையது தமிழ் எழுத்துகள் என்று எந்த முகநூல் ஒப்பிட்டுக் காட்டியதோ, அந்தத் 'தமிழ் எழுத்துகள்' தமிழ் இளம் தலைமுறையிடம் செத்துப் போய்விட்டன. ஆம்! இலத்தீன், ஹீப்ரு, கிரேக்கம் என்ற தொன்மை மொழி எழுத்து வடிவம் காணாமல் போய் - பின் மொழியும் காணாமல் போய்விட்டது. அதேநிலை தமிழுக்கு வந்து கொண்டிருக்கிறது என் பதன் அடையாளம் தான் 'விணுப்பிரியா' ஆங்கில எழுத்தின் தமிழ்க் கடிதம்.

தமிழ் எழுத்தைக் காக்க என்ன வழி?

சீனம் 3,000 எழுத்துக்களைக் கொண்ட மொழி. ஒரு நாடு, ஒரு மொழி, ஒரு பயிற்சி, ஒரு பள்ளி உணர்வு ஆசிரியர் என்பதால் பழகப்பழகக் குழந்தைகளுக்கு எளிதாகப் படிக்க, எழுத, பேச இயல்பாக முடிகிறது.

தமிழ் 247 எழுத்துகள். இது அதிகமாக இருக்கிறது என்கிறார்கள் சில குழந்தைகள்.

தமிழில் அதிக மதிப்பெண் பெறுவதில்லை. இதற்குக் காரணம் ஆசிரியர்கள் என்கிறார்கள் சிலர். எல்லாப் பாடங்

களையும் கூட்டும்போது தமிழ் மதிப்பெண் கூட்டும்போது - பிற 'பிரெஞ்சு' போன்ற மொழிகளை எடுக்கும் மாணவர்கள் அள்ளிக்கொள்ளும் மதிப்பெண்களைவிடத் தமிழ் மதிப்பெண் குறைவு என்பதால் எங்கள் 'மொத்த மதிப்பெண்' குறைந்து விடுகிறது என்கிறார்கள் பள்ளி மாணவர்கள்.

தமிழ் படித்தால் என்ன பயன்? அரசு வேலையில் - 75 விழுக்காடு; அரசுப் பள்ளியில் படித்த மாணவர்களுக்கு - 75 விழுக்காடு ஒதுக்கீடு செய்யட்டுமே? உயர் கல்வியில் மருத்துவம், பொறியியல் அரசுப் பள்ளியில் படித்த மாணவர்களுக்கு மட்டும் அரசுக் கல்லூரிகளில் என்று ஒதுக்கட்டுமே? 12ஆம் வகுப்பு வரை தனியார் பள்ளிக் கல்வி ஏன்? தனியார் பள்ளிகளில் அவர்கள் சேர்வதில்லை. அரசுப் பள்ளியில் படித்த ஏழைத் தமிழ் மாணவர்களுக்கு தமிழ் வழியில் படித்து வந்தால்- உயர்கல்வியியல் இடம் ஒதுக்குங்கள்.

இப்படிக் கேள்விக் கணைகளைத் தொடுக்கிறார்கள் பல மாணவர்கள்.

5,000 ஆண்டுகளாகக் கற்றவர்கள் தமிழை உயர்த்தினார்கள். தமிழ் மட்டுமே பேசியவர்கள் தமிழைக் காத்தார்கள் என்பதே மெய்.

இப்போது ஆங்கிலம் என்பது அறிவு - அதில் இரண்டு 'சொல்' பேசினாலே உயர்வு என்ற நிலையும் - உடனே 'மாதம் உருவா இலட்சத்தில்' வேலை என்ற 'நம்பிக்கையும்', ஆரம்ப அரசுப் பள்ளியிலேயே 'ஆங்கில' வழியில் படிப்பை நுழைத்துவிட்டது. எனவே '26' எழுத்து ஆங்கிலம் எளிது. '247' எழுத்து தமிழ் கடினம் என்று நம்ப வைக்கப்படுகிறது. இதை உடைக்க வேண்டும். இதை அறிவியல் - ஆர்வம் - ஆசிரியர் பயிற்சி மூலம் முன்னெடுக்க வேண்டும்.

எப்படி எழுத்தைச் சுருக்கலாம்?

தமிழ் எழுத்து உயிர் எழுத்து 12, மெய் எழுத்து 18 = 30 எழுத்துகளே! அவற்றின் பெருக்கம் உயிர்மெய் எழுத்து 12 x 18 = 216. ஒரு ஆயுத எழுத்து. ஆக 247.

சில நாட்களுக்குமுன் மலேசியாவின் சரசுவதி அரிகிருஷ்ணன் என்ற அம்மையார் அவர்கள், இப்போது கனடா தமிழ் வானொலி நிகழ்ச்சி அமைப்பாளராக உள்ளவர் - தமிழ்நாட்டில் சென்னையில் நூல் வெளியீட்டுக்கு வந்தவர், என்னிடம் வானொலிப் பேட்டி எடுத்தார்.

அப்போது அவர் என்னிடம் சில கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார். "நான் தமிழ் ஆசிரியராக, தமிழ்க் குழந்தைகளுக்குப் பாடம் எடுக்கிறேன். இப்போது தமிழ் எழுத்துகளைக் கணினியில் பயன்படுத்துவது போல, குழந்தைகளுக்கு எளிதாகச் சொல்லித் தருகிறேன்" என்றார்.

நான் என் கணினிச் செயலியை எடுத்துக்காட்டி "நான் 247 எழுத்துகளைப் படித்தவன். அன்று 5ஆம் வகுப்பில் ஆங்கிலம் வரும். அதுவரை தமிழ் பழகும். இன்று 2 வயதிலேயே ஆங்கிலம். எனவே இந்தக் குழந்தைகளுக்கு கணினித் தமிழ் எழுத்து நடையில் சொல்லித் தந்தால் மிக எளிதாகப் பிடித்துக் கொள்ளும். பாராட்டுகள்" என்றேன்.

தமிழ் மிகவும் எளிய மொழி

**கணினியில் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என 12 உயிர் எழுத்துகள்; அடுத்து கசடதபற, யரலவழள, ஞஙணநமன 18 எழுத்துகள்-இவை மட்டும் இருக்கின்றன. மீதி இணைப்புக் குறியீடுகள் தனித்தனியாக மாட்டிக் கொள்ளலாம். குறியீடுகள் தனியே உள்ளன. இதன் எண்ணிக்கை 12 தான். ஆக மொத்தம் எழுத்து 30. குறியீடு 12 என 42க்குள் முடிந்து விட்டது.**

மாணவர்கள், இனிபேசும் மொழியை எழுத்தில் படிக்கலாம்.

'க' என்பது குறில். 'கா' என்ற நெடில் இந்த 'கி' - 'கீ' - 'கே' - 'கோ' என்ற குறியீடுகளை 'க' என்ற ஒற்றை எழுத்து வைத்தே கோத்துவிடலாம். அதேபோல 'ச' - 'த' - 'ம' என்று எது வந்தாலும் - 1 : 12 குறியீட்டைக் கொண்டே சொல்லிக் கொடுத்துவிடலாம். மிக எளிதாகக் கற்றுக்கொள்ளலாம்.

ஏற்கெனவே 'பெரியார்' எழுத்துச் சீர்திருத்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டது; நடைமுறையில் உள்ளது.

இப்போது 'கணினி'ச் சீர்திருத்தம் எங்களைப் போன்றவர்கள் பழகிக் கொண்டு வெற்றிகரமாக 'செல்போன்' கவிதை, கட்டுரைகள் படைக்கிறோம்.

பள்ளியில் ஆசிரியர்கள் பழகிக்கொண்டு-ஏற்றுச் சொல்லிக் கொடுக்கத் தொடங்கினால், குழந்தைகள் எளிதாகக் கற்றுக் கொள்ள முடியும்.

இதைத்தான் எழுத்தாளர் சரசுவதி அரிகிருஷ்ணன் அம்மையார் போன்றவர்கள் 'மலேசியா-சிங்கப்பூர் குழந்தைகளுக்குக் கற்பிக்கிறேன்! மிக அருமையாகக் கற்றுக்கொள்கிறார்கள்' என்கிறார்.

தமிழ் எழுத்துகள் குறையவில்லை. ஆனால் தமிழ் எழுத்துகள் சில மாற்றங்களில் - குறைவாக இருப்பதாக மனத்தோற்றம் - மனப்பழக்கம் உருவாக்கப்படுகிறது.

எனவே 'கணினி' வடிவில் உள்ளவற்றை - புத்தக வடிவில் எடுத்து வந்துவிடுவதும் - பின்னர் இவர்கள் வருங்காலம் முழுவதும், இனி கையில் மூத்த தலைமுறை போல எழுதப்போவது இல்லை. கணினிப் பலகையில் தட்டித்தான் 'தட்டச்சு' செய்யப் போகிறார்கள். எனவே 'கணினி' வடிவம் மிகவும் எளிது. சுலபம்.

எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு (குறள் 426)

என்கிறார், வள்ளுவர்.

உலகம் எப்படிப் புதுமையாக மாறுகிறதோ - அந்தப் புதுமையை ஏற்று - அதற்கேற்ப மாறி - மாற்றி நிலைப்பது தான் அறிவுடைமை என்கிறார், வள்ளுவர்.

மாற்றம் மனிதர்களுக்கு மட்டுமல்ல; நம் உயிரிலும் மேலான மொழிக்கும் அடங்கும்.

எனவே தமிழ் உணர்வாளர்களும் - ஆசிரியர்களும் - ஆட்சியாளர்களும்-கல்வியாளர்களும்-தொன்மைத் தமிழை இளம் குழந்தைகளுக்குக் கடத்த எந்த நவீன வழியையும் கடைப்பி டிக்க வேண்டும். அதில் முதன்மை 'கணினி' வழி. எழுத்தை நிலைநிறுத்தும் வழி! இனத்தின் கடமை!

(நன்றி : "மீண்டும் கவிக்கொண்டல்", 2016 சூலை)

# குருதிச் சேற்றில் காஷ்மீர்



காஷ்மீர்
பனிமலை இமயத்தின்
அழகோவியம்
முகில்கள் தாலாட்டும்
இயற்கையின் தாய்மடி
இன்றோ
குருதிச் சேற்றில்
கொந்தளிக்கிறது.

மோடியின் கொலைப்படைகள்
காஷ்மீர் இளைஞர்களின்
உடல்களைப்
பெல்லட் குண்டுகளால்
சல்லடையாய்த் துளைத்துச்
சாகடிக்கின்றன
இந்தியப் படையால்
அநாதையாக்கப்பட்டோர்
அய்ம்பதாயிரம் பேர்.

ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்பின்
போராளித் தலைவன்
புர்கான்வானி
ரம்ஜான் முடிந்த மறுநாளே
ஈவிரக்கமின்றி
இந்தியப் படையால் கொல்லப்பட்டார்
புர்கானின்
இறுதிச் சடங்கில் பங்கேற்றோர்
இரண்டு இலட்சம்பேர்
இரு மாதங்களுக்கு முன்இறந்த

முன்னாள் முதல்வர்
முக்தி முகமது சையித்
இறப்பில் பங்கேற்றோர்
வெறும் அய்யாயிரம் பேர்தான்.
மடிந்தவர்கள்
மண்ணை ஒருவேளை ஆளலாம்
மக்கள் மனங்களை
ஆளமுடியாது.

காஷ்மீர் போரில்
மோடி அரசுப் படைகளின் மீது
மக்கள் கல் எறிந்தே விரட்டுகிறார்கள்
வியத்நாம் போரில்
அமெரிக்கப் போர் விமானங்களை
வெறுங் கற்களை வீசி
விரட்டியடித்த வீரவரலாறு
மீண்டும் திரும்புகிறது
கடைசி இந்தியச் சிப்பாய்
வெளியேறும் வரை
காஷ்மீர் இளைஞர்கள்
ஓயப்போவதில்லை.

இரக்கமற்ற பெல்லட் குண்டுகளைப்
பயன்படுத்தும்
இரண்டே நாடுகள்
இஸ்ரேலும், இந்தியாவும்!
இஸ்ரேல்
பகைநாடான
பாலஸ்தீனத்தின் மீது
பொழிந்தால்
இந்தியா
சொந்த நாட்டு மக்களையே
சுடுகாடாக்குகிறது.

காஷ்மீரில்
பொது வாக்கெடுப்பு நடத்துதல்
அம்மாநிலத்தில்
சிறப்பதிகாரம் வழங்கும்
370–ஆவது பிரிவை நீட்டித்தல்
ஆகியவற்றை
அகற்றச் சொல்கின்றன
ஆர்.எஸ்.எஸ், பி.ஜே.பி!
மாறாய்க்
காஷ்மீர் பார்ப்பனப்
பண்டிதர்களுக்குக்
கருணையோடு
தனிக் குடியிருப்புகளைத்
தரச் சொல்கின்றன
அமர்நாத் கோயிலுக்கு
நிலம் வழங்கச் சொல்லி
இந்து வாக்குகளை
அள்ளுகின்றன.

என்றாலும்
வீழ்த்த முடியாது
விடுதலைக் கனவை
அது வெல்லும்!

– தமிழேந்தி

**கட்டுரைத் தொடர்-44**

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

**கிராஸ் செய்ய பெரியார் மறுப்பு**

ஈ.வெ.ரா. சாட்சியை ஒன்றும் கேள்வி கேட்க வேண்டியதில்லை என்று தெரிவித்தார்.

நீதி :- உங்கள் பேரில் கிரிமினல் குற்றம் சாட்டப் பட்டிருக்கின்றதாகையால், வழக்கிற்குச் சம்பந்தப்பட்ட ஸ்டேட்மெண்டைத்தான் கொடுக்க வேண்டும். சம்பந்தப் படாத வெளி விஷயங்களை நான் ஏற்கமாட்டேன்.

ஈ.வெ.ரா. :- நான் சட்ட நிபுணனல்ல. சாட்சியங் களைக் காதில் கேட்டேன்; பார்த்தேன்; பதில் கூறு கிறேன். எனக்கு பதில் கூற உரிமையுண்டு. இயன் றால் ஏற்றுக்கொள்ளுங்கள். இல்லாவிட்டால், தள்ளி விடுங்கள். நான் வழக்கிற்குச் சம்பந்தப்பட்டவை களையே கூறுகின்றேன்.

பின்னர் பெரியார் தமது நீண்ட வாக்குமூலத்தைப் படித்து நீதிபதியிடம் கொடுத்தார். படிக்கும்போது நடுவில் நீதிபதி சரி சரியெனத் தலையை ஆட்டிக்கொண்டே இருந்தார்.

பின்னர் கிரவுன் பிராசிக்கூட்டர் எழுந்து தங்களுக்கு இவ்வழக்கில் தண்டனையளிக்க வசதியாயிருக்கும் பொருட்டு எதிரியின் பேச்சுகளில் ஆட்சேபகரமான வற்றை சிகப்பு மையினால் மார்க் செய்கிறேன் என்று கூறி, மார்க் செய்து அப்பகுதிகளைக் கோர்ட்டில் வாசித்துக் காண்பித்தார்.

அதன்பின் நீதிபதி குற்றப் பத்திரிகை வாசித்தார்.

**தீர்ப்புக்கூற ஒத்தி வைப்பு**

பெரியார் தான் குற்றவாளியல்லவென்றார்.

மணி 1.30 ஆனமையால் தீர்ப்புக்கூற வழக்கை மாலை 2.00 மணிக்கு ஒத்திவைத்தார், நீதிபதி.

வழக்கைக் கவனிக்க வந்திருந்த முக்கிய பெரியார் கள் சர். எ.டி. பன்னீர்செல்வம், ஈ.வெ. கிருஷ்ணசாமி, கி.ஆ.பெ. விசுவநாதம், டி. சுந்தரராவ் நாயுடு, பி.ஏ., பி.எல்., டி. சண்முகம் பிள்ளை, பாரிஸ்டர் கே.சி. சுப்பிரமணியம் செட்டியார், எம். தாமோதரம் நாயுடு, பி.ஏ., பி.எல்., ஜஸ்டிஸ் ஆசிரியர் டி.ஏ.வி. நாதன், சண்டே அப்சர்வர் ஆசிரியர் பி. பாலசுப்பிரமணியம், டி.ஆர். கோதண்டராம முதலியார், சாமி அருணகிரி நாதர், கடலூர் தெய்வசிகாமணி முதலியார், சேலம் சித்தையன், சர்வாதிகாரி எஸ். சம்பந்தம், எர்னஸ்ட் காவேரிப்பாக்கம் சம்பந்தம் முதலிய பல பெரியார் களாகும்.

**தண்டனை**



சரியாக மாலை 3.25 மணிக்கு நீதிபதி வந்து தீர்ப்பை வாசித்தார்.

“இரண்டு பேச்சுகளும் 2 குற்றங்களாகின்றன. ஒரு குற்றத்திற்கு 1 வருஷம் கடுங்காவலும் 1000 ரூபாய் அபராதமும், அபராதம் செலுத்தத் தவறினால், மேலும் 6 மாதம் கடுங்காவலும் விதிக்கிறேன்” என்றார். ஆக இரண்டு குற்றங்கட்கு 2 வருடம் 2000 ரூபாய் அபராதம். அல்லது மேலும் 1 வருஷம் ஆக 3 வருஷம் கடுங்காவல் தண்டனையாகும்.

இரண்டு தண்டனைகளையும் ஒன்றாக அனுபவிக்க வேண்டுமெனவும் நீதிபதி கூறினார்.

பெரியார் அபராதம் கட்ட மறுத்து 3 வருஷம் கடுங் காவல் தண்டனையைப் பெருமகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்.

**ஸர். பன்னீர்செல்வம் கண்ணீர்**

தண்டனை பெற்ற பெரியாரை சர். எ.டி. பன்னீர் செல்வம் அவர்கள் கோர்ட்டிலேயே கட்டித் தழுவிக் கண்ணீர் விட்டார்.

பெரியார் அவர்கள் தான் இனி ஒரு கைதி (Prisoner) என சிரித்துக் கொண்டே கூறினார்கள்.

பின்னர் கோர்ட்டிற்கு வந்திருந்த எல்லாப் பெரியார் களும் வக்கீல்களும் தோழர்களும் பெரியார் ஈ.வெ.ரா. பாதத்தைத் தொட்டு இரு கண்களிலும் ஒற்றிக்கொண்டு வணக்கம் தெரிவித்தனர்.

**சிறைக்குப் புறப்பாடு**

**காலையிலேயே பெரியார் படுக்கை பெட்டியுடன் வந்திருந்தார். அவைகளை எடுத்துக்கொண்டு மாலை 3.45 மணிக்கு ‘மோட்டார் வேனில்’ ஏறும் போது வெளியே ஆவலாகக் காத்து நின்றிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் ‘பெரியார் வாழ்க’ என்று ஆரவாரித்துக் கரகோஷம் செய்தனர். பெரியாருக்கு மாலைகளிடப்பட்டன. பெரியார் ‘ஈ.வெ.ரா. வாழ்க’ என்ற வானளாவிய ஒலியினிடை பெரியார் ஏறியிருந்த கார் புகுந்து சென்றது. வழக்கைக் கவனிக்க காலை 10.00 மணிக்கு வந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் மாலை 4.00 மணிக்கு வழக்கு முடியும் வரை மத்தியானம் சாப்பிடக்கூடப் போகாமல் காத்து நின்றனர்.**

**பெரியார் தண்டிக்கப்பட்டார் என்ற செய்தி கேட்ட வுடன் மக்களிடையே ஏற்பட்ட உணர்ச்சி கரை கொள்ளாததாயிற்று.**

**சென்னை நகரத்தார் துயரம்**

இச்செய்தியைக் கேட்டு சென்னைத் தமிழர்கள னைவரும் எல்லையில்லாத் துயரமடைகின்றனர். இச்செய்தி சிறிது நேரத்திற்கெல்லாம் காட்டுத்தீ போல் நகரெங்கும் பரவிவிட்டது. வழக்கைக் கவனிக்க ஏராள மான பார்ப்பன வக்கீல்களும் கோர்ட்டிற்கு வந்திருந்தனர்.

**பெரியார் வாக்குமூலம்**

பெரியார் கொடுத்த வாக்குமூலம் வருமாறு :-

நான் சம்பந்தப்பட்டிருக்கும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி யானது காங்கிரசிற்கு விரோதமானது என்றும், காங்கிரஸ் கட்சியினரைக் கவிழ்ப்பதற்காக என்றும், பார்ப்பன துவேஷம் கொண்டதென்றும் கனம் முதல் மந்திரியாரே சட்டசபையிலும் பொதுக்கூட்டங்களிலும் தெரிவித்திருக்கிறார்.

இந்தக் கோர்ட்டு காங்கிரஸ் மந்திரிகள் நிர்வாகத் திற்கு உட்பட்டது.

**அடக்குமுறைக்காலத்து நியாயமேது?**

தாங்களும் பார்ப்பன வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவை தவிர இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை ஒழிக்க வேண்டுமென்பதில் காங்கிரஸ் மந்திரிகள் அதிதீவிர உணர்ச்சி கொண்டிருக்கிறார்கள். அது விஷயத்தில் நியாயம், அநியாயம் பார்க்க வேண்டியதில்லை என்றும் கையில் கிடைத்த ஆயுதத்தை எடுத்து உபயோகித்து ஒழித்தாக வேண்டும் என்றும், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி யைத் திடீரென்று வந்து புகுந்த திருடர்கட்கு ஒப்பிட்டு கனம் முதல் மந்திரியார் கடற்கரைப் பொதுக்கூட்டத்தில் பேசியிருக்கிறார். எனவே இந்தி எதிர்ப்பு விஷயமாய் மந்திரிகள் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் அடக்கு முறையே என்பது எனது கருத்து. அடக்குமுறை காலத் தில் இம்மாதிரி கோர்ட்டுகளில் நியாயம் எதிர்பார்ப்பது பைத்தியக்காரத்தனம்.

ஆதலால் இந்தக் கோர்ட்டு நியாயத்தில் இந்த வழக் கில் எனக்கு நம்பிக்கையில்லை. இன்று நடக்கும் வழக்கு விசாரணையில் நான் கலந்துகொள்ளப் போவதில்லை என்று முடிவு செய்து கொண்டேன்.

**பொது மக்களுக்கு அறிக்கை**

பொது மக்கள் தவறுதலாய்க் கருதாமல் இருப்பதற் கும், தப்பு வழியில் செல்லாமலிருப்பதற்கும், நான் நிரபராதி என்பதை எடுத்துக்காட்டுவதற்காகவும் ஒரு அறிக்கை எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்கிறேன். அதனை வழக்கு ஆதாரங்களோடு சேர்த்துக் கொள்ள வேண்டிக் கொள்ளுகிறேன்.

நான் இந்த வழக்கு விசாரணைச் சடங்கில் கலந்து கொள்ளவில்லை. வக்கீல் வைக்கவில்லை.

சர்க்கார் கட்சி வக்கீல் ஆங்கிலத்தில் பேசினார். நான் எட்டி இருந்ததனாலும் ஆங்கிலம் சரியாய்த் தெரியாததனாலும் அவர்கள் பேசினதும் சில சாட்சியங் கள் சொன்னதும் சரியாய்ப் புரியவில்லை. ஆனால் பின்னால் நடந்த சங்கதிகளைக் கவனித்தேன். ஒரு அளவுக்குப் புரிந்தது.

இவற்றுள் பிராதில், முதலாவதாக 21.4.1938இல் கவர்ன்மெண்ட்டார் இந்தி கட்டாயமாய்ப் படிப்பிப்பதை அமலுக்குக் கொண்டுவர உத்தரவு பிறப்புவித்தார்கள் என்றும், அதற்குப் பிறகு சில சுயநலக்காரர்களால் தாங்களே இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிப் பிரசாரகர் என்று பெயர் சூட்டிக் கொண்டு கனம் முதல் மந்திரியாரை நிர்ப்பந்தப்படுத்திஅந்த உத்தரவைக் கேன்சல் செய்யச் செய்ய வேண்டுமென்கிற நோக்கத்தோடு கனம் மந்திரியாரின் உரிமையைத் தடைப்படுத்தினார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறது.

**இந்தி எதிர்ப்புத் தோன்றியது எப்பொழுது?**

இது முழுவதும் உண்மைக்கு நேர் மாறானதாகும். மந்திரியார் ஜி.ஓ. 21.4.1938இல் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியும், கிளர்ச்சி ஸ்தாபனமும் அதற்கு முன்பே ஏற்பட்டதாகும். 1930இல் நடந்த நன்னிலம் சுயமரியாதை மகாநாட்டில் இந்தி புகுத்தும் நோக்கத்தையும், இந்தி புகுத்துவதால் ஏற்படும் கெடுதியையும் பற்றி இன் றைய காங்கிரஸ் விளம்பர மந்திரியார் கனம் ராமநாதன் அவர்களே தீர்மானம் கொண்டு வந்து கண்டித்துப் பேசி அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

**இந்தியை எதிர்ப்போர்**

தமிழ்ப் பண்டிதரும், தமிழ்ப் பாஷை, கலைகள் ஆகியவற்றில் நிபுணருமான சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகள் இந்தி பொதுமொழியா குமா? என்று கண்டித்து எழுதியிருக்கிறார்கள்.

அண்ணாமலை சர்வகலா சாலைப் புரபசர் எஸ். சோமசுந்தர பாரதிப் பெரியார் அவர்களும் 1937ஆம் வருஷத்திலேயே இந்தியைக் கண்டித்து கனம் முதல் மந்திரியாருக்குப் பகிரங்கக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

1937 டிசம்பரில் மாகாணத் தமிழர் மகாநாடு கூடி சென்னை மாகாண கவர்னர் பிரபு அவர்களிடம் தூதுசென்று இந்திக் கட்டாயத்தை மாற்றும்படிக் கேட்டுக் கொள்ளத் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. அதில் பல பெரியார்கள் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதன்பின் 1938 பிப்ரவரி வாக்கில் காஞ்சிபுரத்தில் ஒரு தமிழர் மகாநாடு சர் கே.வி. ரெட்டி நாயுடு அவர் கள் தலைமையில் கூடி, காலம் சென்ற சர்.எம்.கிருஷ் ணன் நாயரால் திறக்கப்பட்டுப் பல பெரியார்கள் முன்னி லையில் பல தீர்மானங்கள் இந்தியைக் கட்டாயப் பாடமாய்ப் புகுத்துவதைக் கண்டித்துத் தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

**ஆதலால் கனம் முதல் மந்திரியாருடையவோ, சர்க்காருடையவோ ஜி.ஓ.வுக்குப் பிறகு சுயநலக் காரர்கள் கூடிக் கிளர்ச்சி செய்கிறார்கள் என்பது தவறு.**

**எதிர்ப்பின் நோக்கம்**

கனம் முதல் மந்திரியார் இந்த வேண்டுகோள் களையும் பொதுஜன அபிலாஷைகளையும் லக்ஷியம்

செய்யாமல் இவற்றை அலக்ஷியப்படுத்துவதற்குச் சாக்காக "இந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி (அவரது) நண்பர் ஒரு இராமசாமி நாயக்கர் தான் செய்கிறாரே தவிர, இது பொதுஜனக் கிளர்ச்சி அல்ல" என்று சட்ட சபையிலேயே சொல்லிவிட்டதால், பொதுஜனங்கள், இதைப் பொது ஜனங்களது கிளர்ச்சியென்று கனம் முதல் மந்தியாரும், கவர்னர் பிரபுவும் அறியவேண்டும் என்பதற்காகவே, இந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை ஒரு டெமான்ஸ்ட்ரேஷன் (Demonstration) ஆகச் செய்யப்பட்டு வருகிறதே ஒழிய, அதில் எவ்வித நிர்ப்பந் தப்படுத்தும் கருத்தும் இல்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**காரியக் கமிட்டித் தீர்மானம்**

அன்றியும் இந்தியைப் பொது பாஷையாக்கக் கூடா தென்றும், பள்ளியில் வைப்பது முதலிய இந்திப் பிரச்சாரம் செய்வது வகுப்புக் கலவரத்தை உண்டாக்குகின்ற தென்றும், காங்கிரஸ் கூட்ட நடவடிக்கைகளுக்கு இந்தி தெரிந்துகொள்ளும்படிச் செய்தால் போதுமென்றும், காங்கிரஸ் காரியக்கமிட்டி தீர்மானித்திருக்கிறது.

சென்னை மாகாணத்தில் நடக்கும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி இந்தி மீதுள்ள அபிப்பிராய பேதத்தால் நடை பெறுவதாகவும் அதை விளக்கிக் காட்டிச் சரிசெய்யும் படிக் காங்கிரஸ் தலைவர் சுபாஷ் சந்திரபோஸ் அவர் களைக் கேட்டுக் கொண்டுமிருக்கிறது. ஆகவே இந்தக் கிளர்ச்சி காங்கிரஸ் துவேஷத்தால் செய்யப்படுவதும் அல்ல என்பதற்கு இதுவே ஆதாரம் போதுமென நினைக் கிறேன்.

1938 ஜுன் மாதம் முதல் தேதி கனம் முதல் மந்திரியார் வீட்டிற்குமுன் செய்யப்பட்டதாகச் சொல்லப் படும் நடவடிக்கைகளுக்கும் எனக்குமாவது இந்தி எதிர்ப் புக் கிளர்ச்சி ஸ்தாபனத்திற்காவது யாதொரு சம்பந்தமு மில்லை.

**எதிர்ப்பாளர் கொள்கை**

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி ஸ்தாபனத்தின் கொள்கை களில் சட்டம் மீறக் கூடாதென்பது முக்கிய காரியமாகும்.

முதன் மந்திரியார் வீட்டிற்குமுன் தொண்டர்கள் எந்தக் காரியத்தை முன்னிட்டும் போகக்கூடாதென்று தனிப்பட்ட முறையில் கேட்டுக்கொண்டு அறிக்கை விடுத் திருக்கிறேன். அந்த வேண்டுகோள் பொது ஜனங்களாலும், தொண்டர்களாலும் மதிக்கப்பட்டு, அது முதல் முதன் மந்திரியார் வீட்டின் முன் தொண்டர்கள் செல்லவில்லை. அதற்குப் பிறகு, பள்ளிக்கூடத்திற்குமுன் நடந்ததாகச் சொல்லப்படும் காரியங்களும் சரியல்ல. அங்கு தொண் டர்கள் செல்வது உபாத்தியாயர்களையும், பிள்ளை களையும் தடுப்பதற்காகவல்ல; இந்தியைப் பொது ஜனங்கள் ஏற்கவில்லை என்பதைக் காட்டுவதற்காக வேயாகும். எந்த உபாத்தியாயரும் எந்தப் பிள்ளை களும் தங்களைத் தடுத்ததாகவோ, அல்லது இந்தக் காரியத்தால் தங்கட்குப் பள்ளிக்கூடத்திற்குப் போகமுடி யாமல் போயிற்றென்றோ, இனியும் உபாத்தியாயரோ, மாணாக்கரோ இதனால் ஒருநாளாவது 'ஆப்செண்ட்' ஆனதாகவோ சொல்லப்படவோ இல்லை; ருசுக்களோ இல்லை. பிராதில் குறிப்பிட்ட விஷயங்கள் சரியல்ல. சட்டத்திற் கண்டபடி, குற்றமாவதற்கு ஜோடித்தவை களேயாகும். நான் பேசியிருப்பதாய்ச் சொல்லப்படும் 2 பேச்சுகளிலும் சட்டம் மீறும்படி நான் யாரையும் தூண்ட வேண்டுமென்றோ, தூண்டும் படியான கருத்துக் கொண்டோ பேசவில்லை. அந்தக் கருத்துகள் கொண்ட வாக்கியம் பேசியதாகக் குறிப்பிட்டிருப்பது உண்மை யல்ல. **ஏனெனில் நான் சம்பந்தப்பட்ட சுயமரியாதை இயக்கமும், தமிழரியக்கமும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியும், ஜஸ்டிஸ் இயக்கமும் எதுவும் சட்டப் படி, சட்டத்திற்கு உட்பட்டுக் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்கிற கொள்கை கொண்டதேயாகும். இதுவரை அக்கொள்கை மாற்றப்படவேயில்லை. என்னுடைய பேச்சு பூராவையும் படித்துப் பார்த் தால் இது விளங்கும்.**

மற்றும் அப்பேச்சுகளில் சட்டம் மீறக்கூடாது; யாருக் கும் எவ்விதத் தடையும், சங்கடமும், மனநோவும் உண்டாக்கக் கூடாது; துவேஷ உணர்ச்சி, கட்டுப்பாட் டிற்கு விரோதமான உணர்ச்சி கூடாதென்றெல்லாம் வியக்தமாய்ப் பேசியிருப்பதை அதில் காணலாம்.

**பெண்கள் மகாநாட்டுத் தீர்மானம்**

என் பேச்சிற்குப் பிறகே பெண்கள் பள்ளிக்கு முன்போய் நின்றார்கள் என்று சொல்வதும் சரியல்ல. நான் பேசுவதற்கு முன்பேயே மகாநாட்டில் தீர்மானம் ஆகியிருக்கிறது. அதையும் என் பேச்சிலேயே காண லாம்.

பெண்களும் எவ்விதத் தடங்கலான காரியம் செய்தார்களென்றும் எவ்விதக் குற்றமான காரியங்கள் செய்தார்களென்றும் எப்போதம் ருசு செய்யப்படவில்லை. ஏதாவது ஒரு கிளர்ச்சி நடக்க வேண்டுமென்றால், ஒருமுறை கொண்டுதான் நடத்த வேண்டும். அம் முறையால் குற்றம், தடை, பலாத்காரம், துவேஷம் உண்டாகும்படி இருக்கக்கூடாது என்பதில் நான் எப் போதும் கவலை கொண்டிருக்கிறேன்.

**குற்றச்சாட்டு சரியானதல்ல**

நான் சம்பந்தப்பட்ட எந்தஸ்தாபனத்திலும் இவ்வித தப்பான கொள்கைகட்கு இடம்கொடுக்கவேயில்லை. காங்கிரஸ்காரர்கள், காங்கிரஸ் மந்திரிகள் ஆதிக்கத்தில் உள்ள காலத்தில் பல தடையான காரியங்கள்-அதாவது கிராமப்புற மறியல் முதற்கொண்டு பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெறாமல் தடை, குழப்பம், பலாத்காரம் முதலியன நடத்துவது வரையில் நடந்த காரியங்கள் குற்றமாகக் கருதப்படவில்லை. காங்கிரஸ் சர்க்காரும் அவை கூடா தென்று உத்தரவு போட்டதில்லை. தவிரவும் என்மீது சுமத்தப்பட்ட இந்த சட்டப்பிரிவும் கொஞ்சமும் சரியான தல்ல. இது ஏதாவது ஒரு குறிப்பிட்ட வியாபாரம் செய்கை ஆகியவைகளைத் தடுப்பதற்கு என்பதும், அதையும் பொது மக்களும் குறிப்பாகக் காங்கிரஸ்காரர்களும் வெறுத்துக் குறைகூறிக் கண்டித்ததென்பதும் பொது

மக்கள் அறிந்ததேயாகும். அப்படியிருக்க அந்தச் சட்டத்தை ஒரு நியாயமான உரிமையுள்ள காரியத்தைச் செய்ய தடுப்பதற்கு உபயோகப்படுத்துவது அந்தச் சட்டத்தின் தத்துவத்திற்கே முரண்பட்டதாகும்.

சாட்சி சுயமரியாதை இயக்கம் பார்ப்பனருக்கு விரோதமான உணர்ச்சி ஊட்டக் கூடியது என்று சொன்னார். தோழர் வக்கீலும் அந்த உணர்ச்சி இந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியிலுமிருப்பதாகக் கருதும்படிச் செய்யப் பிரயத்தனப்பட்டார். அந்தக் கருத்து சம்பந்தப் பட்ட விஷயங்கள் என் இரண்டாவது பேச்சாகக் கோர்ட்டில் ஒப்புவிக்கப்பட்ட சர்க்கார் ஆதாரத்திலேயே இருக்கிறது.

**அறிக்கை வெளியிட்டதின் நோக்கம்**

ஆகவே, இந்த விஷயங்களைத் தங்கள் கவனத்திற்கு என்றே நான் சமர்ப்பிக்கவில்லை. தங்களால் காங்கிரஸ் மந்திரிகள் இஷ்டத்திற்கு விரோதமாக எதுவும் செய்ய முடியாது. பொது ஜனங்களுக்கு விஷயம் தெரியட்டும் என்றும், நான் சட்டம் மீறனேனென்றும் மற்றவர்கள் கருதி அதைச் செய்யத் துணிந்துவிடக்கூடாது என்பதற்கும், இந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியும் என்னுடைய எவ்வித முயற்சியும் செயலையும் இன்று வரையிலும்கூடச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டதென்றும், துவேஷம், குரோதம், பலாத்காரம் சிறிதும் சம்பந்தப்பட்டதல்லவென்றும் தெரிவிப்பதற்காகவேயாகும். **ஆகவே, கோர்ட்டாரவர்கள் தாங்கள் திருப்தியடையும் வண்ணம் அல்லது மந்திரிமார்கள் திருப்தியடையும் வண்ணம் எவ்வளவு அதிக தண்டனையைக் கொடுக்க முடியுமோ அவைகளையும், பழிவாங்கும் உணர்ச்சி திருப்தியடையும் வரைக்கும் எவ்வளவு தாழ்ந்த வகுப்பு கொடுக்க உண்டோ அதையும் கொடுத்து இவ்வழக்கு விசாரணை நாடகத்தை முடித்து விடும்படி வணக்கமாகக் கேட்டுக் கொள்கிறேன்.**

**இலட்சியத்துக்கு விலை**

**மற்றும் வழக்கை வக்கீல் முடித்துவிட்ட பிறகும் சட்டப்படிக் குற்றம் ஏற்படத் தகுந்த மாதிரி, வக்கீல் சாட்சியை மிரட்டி வாக்குமூலம் வாங்கி சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறதென்பதாகவும் எழுதிக் கொடுத்தார்.**

**எவ்வளவு நியாயமான இலட்சியத்தை அடைய வேண்டுமானாலும் அதற்காகக் கஷ்ட நஷ்டங்களை டைதல் என்னும் விலை கொடுக்க வேண்டுமாதலால் அவ்வாறு வேண்டிக் கொள்கிறேன்.**

(ஒப்பம்) ஈ.வெ. ராமசாமி

- **தொடரும்**

## சாதி மறுப்புத் திருமணம்

சூலூர், ம. சரவணகுமார் - தா. இராசலட்சுமி இணையர், 17.9.2003இல் பெரியார் பிறந்த நாளில், சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்ட தன் நினைவாக, 17.9.2016 பெரியார் 138ஆம் பிறந்த நாளில் உருவா 1,000/- வளர்ச்சி நிதி அளித்தனர்.

## வெள்ளையாம்பட்டு சுந்தரம் துணைவியார் கோகிலா அம்மையார் மறைந்தார்



பெயர்பெற்ற நூல் பதிப்பாளர் வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்களின் அன்புத் துணைவியார் கோகிலா அம்மையார் அவர்கள், தம் 76ஆம் அகவையில், 21-9-2016 புதன்கிழமை பிற்பகல் 2.15 மணிக்கு, சென்னை எம்.ஜி.ஆர். நகரிலுள்ள பெரியார் தெருவில் எண்.66இல் உள்ள தம் இல்லத்தில் மறைவுற்றார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இத்துயரச் செய்தி கிடைத்தவுடன் மா.பெ.பொ.க. சார்பில் வே. ஆனைமுத்து, கலச. இராமலிங்கம் ஆகியோர் 21-இரவு 7.30 மணிக்கு அன்னாரின் இல்லம் அடைந்தோம்.

வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்களின் துணைவியார் கோகிலா அவர்களாலும், சுந்தரத்தின் பெற்றோராலும் போற்றி வளர்க்கப்பட்ட - கல்வி அளிக்கப்பட்ட மகன் - மகள் முறையினரும், பெயரன் - பெயர்த்தி முறையினரும் 50 பேர் சோகத்தோடும், வருகிற விருந்தினரைக் கவனிப்பதிலும் கருத்தாக இருந்ததை அங்கு கண்டு மலைத்துப் போனோம்.

கோகிலா அம்மையார் உடலுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினோம். கோகிலா அம்மையாரின் உடல் எம்.ஜி.ஆர். நகர் சுடுகாட்டில் 22-9-2016 வியாழன் காலை 11 மணிக்கு எரியூட்டப்பட்டது.

**தமிழகத்திலும் சென்னையிலும் ஒரு நூற்றுக்கு மேற்பட்ட தமிழர்கள் நூல் பதிப்புத் துறையில் உள்ளனர். இவர்களிடையே வெள்ளையாம்பட்டு சுந்தரத்துக்கு உள்ள பெரிய சிறப்பு-அவர் பல புதிய எழுத்தாளர்களைத் தேடிப்பிடித்து, அவரவரின் முதலாவது நூலைப் பதிப்பித்தவர் என்பதே ஆகும்.**

பதிப்பகம் வைத்துப் பெரும் பொருள் ஈட்டியோரிடையே, - பெரியார் தெருவில் தாம் குடியிருக்கும் 66ஆம் எண் வீட்டை ஒட்டியுள்ள இரண்டு பெரிய மாடி வீடுகளையும், ஒரு பெரிய பெறுமானமுள்ள மனையையும் விற்றுவிட்டவராக இன்று சுந்தரம் உள்ளார்.

இவ்வளவு இன்னல்களுக்கிடையேயும் தம் 84ஆம் வயதிலும் ஒரு வேலைக்காரத் தேனீ போல் - சுறுசுறுப்போடு செயல்படுகிறார். கொள்கையில் திராவிடர் இன - பெரியார் கொள்கைப் பற்றோடு - இயக்க வேறுபாடு, கட்சி வேறுபாடு கருதாமல் திறந்த மனத்துடன் பழகுகிறார்; செயல்படுகிறார். சர். பி. தியாகராயர், தந்தை பெரியார் நெறியில் வகுப்புவாரி உரிமைக் கொள்கைக்குத் தம்மாலான எல்லாம் செய்வதில் முன்னணியிலுள்ளார்.

தம் துணைவியாரை இழந்து துயருறும் வெள்ளையாம்பட்டு சுந்தரம், அவர்தம் தம்பி நடராசன், மகள் செந்தாமரை, மகன் புகழேந்தி ஆகியோர்க்கும், பெயரக் குழந்தைகளுக்கும், அவர்தம் நண்பர்களுக்கும் என் சார்பிலும், மா.பெ.பொ.க. சார்பிலும் ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வளர்க கோகிலா அம்மையார் புகழ்!

**- வே. ஆனைமுத்து**

## வாழ்க்கை ஒப்பந்த விழாக்கள்



### சி.கார்த்திக் - கி.ரம்யா

சேலம் மாவட்டம், சேலம் வட்டம், சின்னக் கொல்லம்பட்டி மா.பெ.பொ.க. ஆதரவாளர் மா.கிருட்டிண குமார்-கி.செல்வி இணையரின் மகள் கி.ரம்யாவிற்கும்; சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், ஆண்டிக்கவுண்டனூர் பி.சிதம்பரம்-சி.மஞ்சுளா இயைரின் மகன் சி.கார்த்திக்குக் கும் வாழ்க்கை ஒப்பந்த விழா, மேச்சேரியில் 4-9-2016 ஞாயிறு காலை 6 மணிக்கு நடைபெற்றது. இரத்தினகிரி திருமண மண்டபத்தில் காலை 8 முதல் 11 மணிவரை மணமக்கள் வரவேற்பு நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### அரி (எ) திலீபன் - ஏ. விஜயலட்சுமி

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி வட்டம் மணவூர் கிராமம் பு.மா.ஆனந்தன்-மோகனம்மாள் இணையரின் மகன் அ.அரி (எ) தீலிபனுக்கும்; திருவள்ளுவர் மாவட்டம் பள்ளிப்பட்டு வட்டம் ஆர்.ஆர்.பேட்டை அடுத்த செல்லாத் தூர் கிராமம் சி.எஸ்.ஆறுமும்-புவனேஸ்வரி இணை யரின் மகள் அ.விஜயலட்சுமிக்கும் வாழ்க்கை ஒப்பந்த விழா 4-9-16 ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு திருவாலங்காடு வி.ஜே.மகாலில் நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### சீ.தமிழ் - மு. சங்கீதா

உளுந்தூர்பேட்டை வட்டம் உ.செல்லூர் வீ.சீத்த லைச் சாத்தான் (சீத்தாராமன்) அமுதவள்ளி இணையரின் மகள் சீ.தமிழ் (எ) தமிழிசை, கடலூர் மாவட்டம் விருத்தாசலம் வட்டம் எடச்சித்தூர் முருகேசன்-கொளஞ்சி (எ) சத்யாபமாவுக்கும் வாழ்க்கை ஒப்பந்த விழா 29-8-2016 திங்கள்கிழமை காலை 6 மணிக்கு உளுந்தூர் பேட்டை சுமங்கலி கோதாவரி அம்மாள் திருமண மண்டபத்தில் ப.அருளி தலைமையில் நடைபெற்றது. தேன்மொழி அருளி வாழ்த்துரை வழங்கினார். விழா இனிதே நிறைவுற்றது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### அணிநிலா தோற்றம்

வேலூர், காட்டுப்பாடி மு.சுவாமிநாதன்-சு.மனோகரி இணையரின் மகன் சு.அரவிந்தன்-மு.சகிரா இணை யருக்கு, 8-9-2016 அன்று பெண் மகவு பிறந்தது. குழந்தைக்கு அணிநிலா என்று பெயர் சூட்டப்பட்டது. அதன் மகிழ்வாக பெரியார்-நாகம்மை அறக்கட்டளைக்கு ரூ.10,000/- நன்கொடையாக அளிக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### இரா. தமிழழகன் - த. தனலெட்சுமி

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், வடக் கலூர் மு.நடேசன்-அஞ்சலை அம்மாள் இவர்களின் மூன்றாவது மகன் ந. இராமலிங்கம்-விசாலாட்சி இணை யரின் கடைசி மகன் இரா. தமிழழகன், எம்.பி.ஏ., பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், ஒகளூர் தனசேகர்-தாமரைச்செல்வி இணையரின் மகள் த.தன லட்சுமி, பி.ஏ. இவர்களின் இணையேற்பு விழா, 4.9.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் பசுமை நிறைந்த வயல் பகுதியான வடக்கலூர் மண மகனின் அம்பேத்கர் இல்லத்தில், சுயமரியாதை இயக்கத் தோழர்கள், பெரியார் கொள்கையாளர்கள், புரட்சியாளர் அம்பேத்கர் இயக்கத் தோழர்கள், அறிஞர் பெருமக்கள் முன்னிலையில், சுயமரியாதை முறையில் நடைபெற்றது.

விழாவில், அக்ரி ந. ஆறுமுகம், க. திருவள்ளுவன், வெ. சித்தார்த்தன், பெ. நடராசன், அ. ஆதி சிவம், மணமகன் சித்தப்பா, ந.கருணாகரன்-க. ஜெயக்கொடி, திருமதி. க.சிவபாக்கியம் கணேசன், மருத்துவர் கு.குண கோமதி ஆறுமுகம், வழக்குரைஞர் இரா.ஸ்டாலின், கு.குணவதி ஸ்டாலின் ஆகியோரும் அறிஞர் பெரு மக்களும், உறவினர்களும் திரளாகக் கலந்துகொண்டு மணமக்களுக்கு வாழ்வியல் கருத்துரை வழங்கி வாழ்த்தினார்கள்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### கு. தமிழ்மறவன் - கி. சுகன்யா

புதுச்சேரி, குருமாம்பட்டு பொதுப்பணித்துறை ஒப்பந்தக்காரரும், அம்பத்தூர் பெரியார்-நாகம்மை அறக்கட்டளை புரவலர்களுள் ஒருவருமான ந.க. குண சேகரன்-புதுச்சேரி நகர மன்ற முன்னாள் உறுப்பின ரான தனசேகரி அம்மாள் இளைய மகன் தமிழ் மறவன்; பண்ணுருட்டி வட்டம், கீழ்க்குப்பம் த.கிருஷ்ண மூர்த்தி-சாந்தி மகள் சுகன்யா ஆகியோரின் வாழ்க்கைத் துணைநல ஏற்பு விழா 5.9.2016 திங்கட்கிழமை காலை 7 மணிக்கு, வழுதாவூர் சாலை, ஸ்ரீராம் திருமண நிலையத்தில் சிறப்புற நடைபெற்றது.

மணவிழாவுக்கு புதுச்சேரி மாநில முன்னாள் முதல்வர் ந. அரங்கசாமி தலைமை ஏற்று மங்கல நாணை எடுத் தளித்தார். “சிந்தனையாளன்” ஆசிரியர் வே.ஆனைமுத்து மணமக்களுக்கு வாழ்க்கை ஒப்பந்தத்தை நடத்தி வைத்தார்.

தொடக்கத்தில் ந.க.குணசேகரன் வரவேற்புரை யாற்றினார். மணமக்களுக்கு அறிவுரை கூறி, சீனு. அரிமாப் பாண்டியன், அ.தெ. தமிழநம்பி, கோ.தாம ரைக்கோ உரையாற்றினர். க.இரகுநாதன், கு. தமிழ்ச் செல்வன் முன்னிலை ஏற்றனர். புதுவை தமிழ்நெஞ்சன் நன்றியுரையும், மணமக்கள் ஏற்புரையும் வழங்கினர். சிந்தனையாளன் வளர்ச்சிக்கு உருவா 1,000 வழங்கப் பெற்றது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### மா. சடையப்பன் - ச. சரண்யா

சேலம் பெத்தநாய்க்கன் பாளையம் எடப்பட்டி புதூர் மாணிக்கம்-மாது இணையரின் மகனும், வே. ஆனைமுத்துவின் அண்ணார் துரைசாமி (எ) வேம் பாயி மகள் வழிப்பெயரனும் ஆன சடையப்பன்; விழுப்

புரம் செம்பராட்டு க. சரவணன் - ஜோதி ஆகியோரின் மகளான சரண்யா ஆகியோரின், சாதி மறுப்பு வாழ்க் கைத் துணைநல ஏற்பு விழா, புத்திர கவுண்டன் பாளையம், ஸ்ரீகண்ணய்யன் திருமண மண்டபத்தில் 11.9.2016 ஞாயிறு காலை 9 மணிக்கு சிறப்புற நடை பெற்றது.

பாட்டாளி மக்கள் கட்சியின் மாநிலத் தேர்தல் பணிக் குழுத் தலைவர் புதுப்பூலாமேடு பு.தா. அருள்மொழி தலைமை ஏற்றார். ச. ஜெயப்பிரகாஷ் வரவேற்புரை வழங்கினார். முன்னிலை ஏற்று, “சிந்தனையாளன்” ஆசிரியர் வே. ஆனைமுத்து வாழ்க்கை ஒப்பந்தத்தை நடத்தி வைத்தார்.

பேராசிரியர் மி.கா. செல்வகுமார், க. சண்முகம், அ. தமிழரசு மற்றும் பலர் மணமக்களுக்கு அறிவுரை வழங்கி உரையாற்றினர்.

மணமக்கள், தம் நண்பர்கள் 10 பேர்களுக்கு, “சிந்தனையாளன்” ஆண்டுக் கட்டணமாக உருவா 2,000/- வழங்கினர்.

மா. பிரபு, பெ. மகேந்திரன் நன்றி கூறினர்.

## செந்தமிழன்-ஸ்ரீரஞ்சனி



திருவண்ணாமலை, பாவலர் வையவன் - செல்வி இணையரின் மகன் செந்தமிழனுக்கும், தஞ்சாவூர் கி. சீனிவாசன்-லலிதா இணையரின் மகள் ஸ்ரீரஞ்சனிக் கும், பாவலர் வையவனின் பெற்றோராகிய திரு. சோ.கோ.ஏகாம்பரம்-திருமதி. மங்கையம்மாள் முன்னி லையில் தஞ்சாவூர் பாலாஜி நகர் நகரத்தார் திரு மணக் கூடத்தில் 08.09.2016 வியாழக்கிழமை அன்று ‘தமிழர் கண்ணோட்டம்’ இதழாசிரியர் தோழர் பெ.மணியரசன் தலைமையில் திருமணம் நடைபெற் றது. அனைவரையும் மணமக்களின் பெற்றோர்கள் வரவேற்றனர். திருவண்ணாமலை ஆகாஷ் குழுமத் தலைவர் முத்துக்கிருஷ்ணன், தொழிலதிபர் சி.சி. துரை, கொங்குசாமி பதின்மப் பள்ளித் தலைவர் மாதவ சின்ராஜ், தஞ்சை வழக்கறிஞர் இராசேந்திரன், பி.எஸ்.என்.எல். ஓய்வூதியர் சங்கச் செயலாளர் சாமிநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஒவியர் சோ.ஏ.நாகராசன் நன்றி கூறினார். மணவிழா மகிழ்வாக, ‘தமிழர் கண் ணோட்டம்’ இதழ் வளர்ச்சிக்காக ரூ.2500 வழங்கப் பட்டது.



மேற்படி மணமக்களுக்கான திருமண வரவேற்பு நிகழ்ச்சி, திருவண்ணாமலை ஆண்டாள் சிங்கார வேலு திருமண மண்டபத்தில் 11.9.2016 ஞாயிறு மாலை சிறப்பாக நடைபெற்றது.

24.9.2016 அன்று, மணமக்கள் செந்தமிழன்-ஸ்ரீரஞ்சனி ஆகியோர் சென்னை அம்பத்தூரிலுள்ள ‘பெரியார் நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை’ மையத்துக்கு நேரில் சென்று, அறக்கட்டளை நிறுவன ரும், ‘சிந்தனையாளன்’ மாத இதழின் ஆசிரியருமான பேரறிஞர் வே.ஆனைமுத்து அவர்களிடம் வாழ்த்துப் பெற்றனர். உடன் பாவலர் வையவன், செல்வி, மருத் துவர் பேரன்பு ஆகியோர் சென்றனர். சிந்தனையாளன் வளர்ச்சிக்கு ரூபா 2,500 மணமக்கள் வழங்கினர்.

## மழலைச்செல்வன் “கௌதம்” பிறந்த நாள் விழா

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், வடக்கலூர் ந. கருணாகரன் - க. ஜெயக்கொடி இவர்களின் மகள்வழிப் பெயரனும், கீழப்புலியூர் க. பெருமாள் - சரஸ்வதி இவர்களின் மகன்வழிப் பெயரனும், பெ. சதிசுகுமார்-தமிழ்க்குயில் இணையரின் மகன் “கௌதம்” முதலாவது பிறந்த நாள் விழா 10.8.2016 காலை கீழப்புலியூரிலும், மாலை திருச்சி, நொச்சியம் இல்லத்திலும் நடைபெற்றது.

பெரம்பலூர் நகர திராவிடர் கழகத் தலைவர் அக்ரி ந. ஆறுமுகம், மருத்துவர் குணகோமதி, வடக்கலூர் ந. இராமலிங்கம்-விசாலாட்சி, திருச்சி சிவபாக்கியம் கணேசன், சிந்தனையாளன் ஆசிரியர் குழு உறுப்பினரும், பெரியார்-நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை அறங்காவல ருமான ந. கருணாகரன்-க. ஜெயக்கொடி, வழக்குரைஞர் இரா. ஸ்டாலின்-குணவதி, அஞ்சலி கருத்தம்மா ஆசிரியர் செந்தில்குமார்-செவ்வந்தி, வழக்குரைஞர் சுரேசுகுமார்-செந்தாமரை, தமிழ்இனியன்-கலைச்செல்வி, கௌதம் மாமா க.விடுதலைத்தமிழன் ஆகியோர் கௌதம் அவர் களை பாராட்டி மகிழ்ந்தனர்.

இதன் மகிழ்வாக சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூ.500/- வழங்கப்பட்டது.

# இந்தியா ஒரு தேசமா?

- பாவலர் வையவன்

இந்தியா என்பது
பல்வேறு விலங்குகளை
அடைத்துவைத்திருக்கும் பட்டி!

இங்கு
மதவாதம், மார்க்சியம்
திராவிடம், தலித்தியம்
பெண்ணியம், பகுத்தறிவு
ஒருமைப்பாடு என்பனவெல்லாம்
வெறும்
வாக்குப் பொறுக்கும்
வசீகரச் சொற்களே!

ஒருவேளை அச்சொற்கள்
அதன் உண்மையான அர்த்தத்தில்
வேறெங்கேனும் செயல்படலாம்.

தமக்கென 'ஒரு தேசத்தை'
உருவாக்கிக் கொள்ளத் தெரியாத
தந்தைகளும் அண்ணன்களுமே
அரசியல் கலைஞர்களாய்
அமைகிறார்கள் தமிழகத்திற்கு!

காஷ்மீர் சிக்கல் முதல்
காவிரிச் சிக்கல் வரை
தேர்தல் நோக்கிலேயே
தீர்க்க மறுக்கிறார்கள்!

நிலத்தின் தன்மைகேற்ப
ஓடும் நதிகளை
'மாநிலங்கள்' மடக்கிக் கொள்வது
மாபெரும் கொடுமை!

காவிரி, முல்லைப் பெரியாறு,
பாலாறு என
ஆறுகள்தோறும் கோளாறு!

ஒரு சிக்கலை
ஐம்பது, நூறு ஆண்டுகளானாலும்
தீர்க்கமுடியாத...மண்டுகளுக்கு
எதற்குப் பாராளுமன்றமும்
பக்கம்பக்கமாய்ச் சட்டப் புத்தகமும்?

இந்தியா என்ற ஒன்று
இருக்கும் வரை
அதற்குள் வாழும் மக்கள்
வெறும் வாக்களிக்கும்
'ஐந்துக்களே!'

இந்திய அரசுகளின்
தலையாய நோக்கம்
"பிரச்சனைகளைத் தீர்ப்பதல்ல;
தீர்க்காமல் வைத்திருப்பதே!"

**இந்தியச் சிதைக்குத்
தீ மூட்டும்வரை
விக்னேஷ்களின் நெருப்புக்கு
விடிவேயில்லை!**

**சரி, அது இருக்கட்டும்!
சினிமாவில் அடுத்த
சிறந்த நடிகர் யார்?
இயக்குநர் யார்? என்றறிந்து
உடனே
உங்கள் ஊருக்கு அழைத்துவந்து
ஒரு கூட்டம் போடுங்கள்!**

**'கலையோ', 'கரன்சியோ'
ஏதாவது ஒன்று
வளரட்டும்! வளரட்டும்!**

## ஆசிரியருக்கு மடல்

அன்புள்ள சிந்தனையாளன் ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம். நான் கடந்த சில மாதங்களாக "சிந்தனையாளன்" இதழைத் தொடர்ந்து படித்து வருகின்றேன். இந்த மாத செப்டம்பர் இதழைப் படித்தேன். அதில் வெளிவந்துள்ள இந்திய மொழிகளின் புள்ளிவிவரங்களைக் கவனமாகப் படித்தேன். கடந்த 15-9-2016 அன்று பெங்களூரில் நடைபெற்ற (NIPA) மாதாந்திரக் கூட்டத்தில் தக்க ஆதாரங்களுடன் நீங்கள் வெளியிட்டிருந்ததைப் படித்துக் காட்டினேன். அனைவரும் வியந்து போனார்கள்.

மேலும் 17-9-2016 அன்று புதுச்சேரியில் நடந்த (ISTD) H.R. தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டு அங்குள்ளவர்களிடம் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டேன். சிந்தனையாளன் இதழ் பெயருக்கேற்ற படி சிந்தனையத் தூண்டுவதாக உள்ளது. இந்த இதழை மாதா மாதம் எனக்குத் தவறாமல் வழங்கும் கு.தொல்காப்பியன் அவர்களை வாழ்த்த வயதில்லை. ஆகையால் வணங்குகிறேன். சிந்தனையாளன் வளர்ந்து சிறக்க வாழ்த்துகிறேன்.

21-9-2016 **கே.சஞ்சீவிகுமார்,** ஒசூர்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### பெரியார் 132வது பிறந்தநாள் விழா

17.9.2016 சனி காலை 8 மணிக்கு, வீரானந்தபுரம் முதன்மைச் சாலையில் பெரியார் தொண்டர்களால் பெரியார் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

தி.க.வீ.ரெங்கு (தேநீர் கடை) தலைமையில், தோழர் சின்னபுங்கனேரி பன்னீர்செல்வம் கொடியேற்றி வைத்தார். வே.காசிநாதன் (மா.பெ.பொ.க.) கருத்துரை வழங்கினார். வந்திருந்த அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. மேற்கண்ட மூவருக்கும் பொதுநலத் தொண்டர் தோழர் அபிமன்யு பொன்னாடை போர்த்தி மகிழ்வித்து நன்றி கூறினார்.

19-9-2016 **வே.காசிநாதன்,** வீரானந்தபுரம்

## முருக்கன்குடி இரா.இராஜு மறைவுற்றார்

பெரம்பலூர் மாவட்டம், முருக்கன்குடி நான் பிறந்த ஊர். என் வீட்டுக்குப் பின்புறம் உள்ள வீட்டில், தொப்புள் உடையார் என்கிற இராமசாமி-பூவாய் அம்மாள் இணையர் வாழ்ந்தனர். என் பெற்றோரும், அவ்விணையரும் சொந்த அண்ணன்-தம்பி குடும்பத்தார் போல் உளமாரப் பழகினோம். நான் அவர்களை சிற்றப்பா, சின்னாயி என்றுதான் அழைத்தேன். அவர்கள் போதிய கல்வி பெறாத-பெரிய உடலுழைப்பாளர்கள். ஆயினும் தம் மகன் கள் இராஜு, சின்னசாமி ஆகியோர்க்கு நல்ல கல்வி அளித்தனர். இவர்கள் இருவரும் வளம் பெருக்கி நலமாக வாழ்கின்றனர்.

அண்மையில், நோய்வாய்ப்பட்ட மூத்தவர் இரா.இராஜு, தம் 70ஆம் அகவையில் முருக்கன் குடியில், தம் இல்லத்தில் 19-9-2016 திங்கள் மாலை 4 மணிக்கு மறைவுற்றார் என்பதை, எதிர்பாராத வகையில் 20-9-2016 காலை 8 மணிக்கு என் தம்பியின் குடும்பத்தாரைப் பார்க்கப் போன போது அறிந்து, மனம் நொந்தேன். உடனே வீ. பாலுச்சாமி, மற்றும் என் தம்பி குடும்பத்தினருடன் சென்று, இரா. இராஜு அவர்களின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினேன்.

இரா. இராஜு அவர்களை இழந்து துயருறும் அவர்தம் துணைவியார் செல்லம்மாள், அவர்தம் குழந்தைகள்; தம்பி இரா.சின்னசாமி அவர்தம் குடும்பத்தார் அனைவர்க்கும், என் குடும்பத்தின் சார்பிலும், என் தம்பி குடும்பத்தின் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறேன்.

**- வே. ஆனைமுத்து**

## புலவர் இளஞ்சேரல் இயற்கை எய்தினார்



பாலவர், புலவர் இளஞ்சேரல் பாவேந் தரைப் பின்பற்றிப் பாக்களை யாத்தவர். அஞ்சலகத் துறையில் பணியாற்றியவர். சென்னைக் கடற்கரை நிலையத் திற்கு எதிரில் உள்ள அஞ்சலகத்தில் பணி யாற்றி ஓய்வுற்றார். வண்ணாரப்பேட்டை யில் வாழ்ந்த திருவாளர் ஆறுமுகன் -திருமிகு பாஞ்சாலி அம்மையார் ஆகிய இவ்விணையர்க்குப் பிறந்தவர். உரிய பருவத்தில் திருமிகு கன்னியம்மாளைக் கைப்பிடித்தார். பிள்ளைகட்கு அறவுடைநம்பி, எழிலன், தமிழரசி என்று தமிழ்ப் பெயர் சூட்டி மகிழ்ந்தார். பெயரர்கட்கு அன்பு மணி, வளர்மதி என்று பெயரிட்டார். தமிழீழ விடுதலையைக் காணவேண்டிய வேட்கையுடன், ஆதரவுடன் வாழ்ந்தவர்.

பண்டித வித்துவான் மி.பொன்.இராமநாதன் செட்டியார் தலைமையில் இயங்கிய திரு.வி.க.இலக்கிய மன்றத்தின் சார்பாக வண்ணை சர் தியாகராயர் கல்லூரியில் மாலை நேரத் தமிழ்க் கல்லூரியில் புலவர் கி.த.பச்சையப்பனிடம் தொல்காப்பியம், நன்னூல் அகலவுரை (விருத்தியுரை) இவற்றை இளஞ்சேரலும், அவர் மனைவியும் பயின்று புலவர் பட்டயம் பெற்றனர்.

தமிழ்ப் பாவட்டம் (கவிதை வட்டம்) என்னும் அமைப் பைப் பெரும் புலவர் பழநிபாலசுந்தரனார், புலவர் கி.த.ப, முக்கனி மொய்தீன், பாவலர் இலம்போதரன் போன்றோர் துணையுடன் தொடங்கித் திங்கள்தோறும் தொடர்ந்து நிகழ்த்தி னார். 447 கூட்டங்கள் முடிந்த பின்னர் முடிந்தார். தோற்றம்: 30.6.1938-மறைவு: 15.9.2016, அவர் தொட்டுத் தொடர்ந்த தமிழ்ப்பணியை நாம் தொட்டுத் தொடர்வோம்.

*செய்தி : புலவர் கி.த.பச்சையப்பன்*

## யாழ்ப்பாண நகரில் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் தமிழர் பகுதியில் சிங்களர்களைக் குடியேற்றுவதை எதிர்த்து- வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையில்...



இலங்கையில் 1983 முதல் ஈழத் தமிழரையும் தோட்டத் தொழிலாளத் தமிழரையும் அழிப்பதை இலங்கை அரசு வன்னெஞ்சத்துடன் மேற்கொண்டது.

2009 மே 18இல் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கைப் படைக்கும் இடையே ஆன இறுதிப்போர் முடிவுற்றது. அப்போரில் 1.41 இலக்கம் தமிழ் மக்கள் பாஸ்பரஸ் குண்டு வீசிக் கொல்லப்பட்டனர்.

போர் நிறுத்தம் ஏற்பட்டு 7 ஆண்டுகள் முடிந்த பின்னரும்-ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னரும், 1980களில் இலங்கைப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழரின் நிலங்கள் ஒப்படைக்கப்படவில்லை; இறுதிப் போரில் சிறைப்படுத்தப்பட்ட தமிழர்கள் விடுதலை செய்யப்படவில்லை.

இக்கொடுமையை எதிர்த்து, 24-9-2016 சனிக்கிழமை அன்று, யாழ்ப்பாணம் நகரில், வடக்கு மாகாண முதலமைச்சர் நீதிபதி விக்னேஸ்வரன் தலைமையில், ஆயிரக்கணக்கான தமிழர்கள் திரண்டு மிகப்பெரிய ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

"சிங்களர்களைத் தமிழர் பகுதியில் குடியேற்றுவதை நிறுத்திடு!"

"தமிழர் பகுதிகளில் புத்தர் கோவில்களைக் கட்டாதே!"

"தமிழர்களிடமிருந்து கைப்பற்றிய நிலங்களை ஒப்படை செய்!"

"சிறைப்படுத்தப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்" என்ற கோரிக்கைகளை முழங்கிக் கொண்டும், கோரிக்கைப் பதாகைகளைச் சுமந்து கொண்டும் நகரில் ஊர்வலமாக வந்து, வடக்கு மாகாண முதலமைச்சர் நீதிபதி விக்னேஸ்வரன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

**இலங்கை வடக்கு மாகாணத்தில், ஈழத் தமிழர்கள் பெரிய அளவில் பங்கேற்ற முதலாவது பொது நிகழ்ச்சி இதுவாகும்.**

## பிரதமர் மோடியின் சமஸ்கிருதத் திணிப்பைக் கண்டித்து மாந்தத் தொடரிப் போராட்டம்




இந்தியப் பிரதமர் மோடி அரசின் சஸ்கிருதத் திணிப்பைப் கண்டித்து, 14-9-2016 புதன் மாலை 4 மணிமுதல் 5.30 மணிவரை சென்னை, கோயம்பேடு பேருந்து நிலையம் எதிரே உள்ள அம்பேத்கர் சிலை அருகில் மனிதச் சங்கிலி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தோழர் வே.ஆனைமுத்து தொடங்கிவைத்தார்.

பொழிலன், வேல்முருகன், தமிழ் அரிமா இருநூறுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். செந்தமிழ்வாணன் நன்றியுரையுடன் இனிதே முடிவுற்றது.

**முழக்கங்கள்**

1. காவிரி நீரைத் தமிழ்நாட்டுக்குப் பெற்றுத்தர வக்கற்ற நிலையில் கன்னட இனவெறியைத் தூண்டும் இந்திய அரசைக் கண்டித்தும்;
2, சமஸ்கிருதத் திணிப்பை எதிர்த்தும், மோடியின் புதிய கல்விக் கொள்கையை மறுத்தும், மாந்தத் தொடரிப் போராட்டம் நடைபெற்றது.

## சிந்தனையாளன் பத்தாண்டுக் கட்டணமாக

மருதூர் தலைமை ஆசிரியர் வே. சோமசுந்தரம், 30.8.2016 இல் மறைவுற்றார். அன்னாரின் மறைவு குறித்து, துக்கம் உசாவிட, வே.ஆனைமுத்து, புலவர் இரா.கலியமூர்த்தி, இரா.சீனுவாசன், பொ.மன்னர் மன்னன் மற்றும் பலர் 19.9.2016 மாலை 4 மணிக்கு, சோமசுந்தரம் இல்லம் சென்று, அவர் படத்துக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். குடும்பத்தினரிடம் துக்கம் உசாவி விடை பெற்றனர்.

சோமசுந்தரம் துணைவியார் செந்துறை சோ. சரசுவதி அம்மையார் உருவா 1,000/- முதல் கட்டமாக வழங்கினார்.

## முல்லையின் 18ஆம் பிறந்த நாள்

மேற்குத் தாம்பரம், பெரியார் - நாகம்மை அறக் கட்டளை ஆலோசனைக்குழு உறுப்பினர் மா.சுப்பிர மணி-கஸ்தூரி இணையரின் மகள் முல்லை, தம் 18ஆம் பிறந்த நாள் 17.9.2016இல் வந்ததை முன் னிட்டு, உருவா 1,000/- வளர்ச்சி நிதி அளித்துள்ளார்.

## யாருளர் இங்கு அய்யாவே?

**- வே. ஆனைமுத்து**

1. நேற்றைக்கு நின்ற நெறிகள் பழையனவே
இற்றைக் குதவா எனவுரைத்தீர் இற்றையவை
நாளைப் பழையனவே நாடாதீ ரெனவுணர்த்தி
நாளெல்லாம் நற்றுணையாய் நடந்திட்டீர் அய்யாவே!

2. கற்றார்க்குத் தெளிபொருளாய்க் கல்லார்க்கும் எளிமையராய்க்
கற்பனைக்கும் எட்டாத கருத்தூற்றாய்; கற்போர்க்கு
உற்றபே ராசானாய் உயர்ந்திருந்தீ ரீனியாங்கள்
பெற்றிருத்தல் பேராசை யெனவெண்ணிப் பொன்றினிரோ?

3. நாடோறும் ஊர்தோறும் நலந்தெளித்து, நடந்திட்டீர்;
ஈடேறும் எம்மினந்தான் எனவெண்ணி யாமெல்லாம்
மேடேறுங் காலத்து மேதினியை அழவிட்டுத்
தேடேம் யாம் எனக் கருதிச் சென்றீரோ அய்யாவே?

4. வாடாதீர், சிந்திப்பீர், வழி வழியென் றோதாதீர்!
நாடாதீர் நலங்கெடுத்த நால்வருண மென அறைந்தீர்?
தேடாதீர் கடவுளரைத் தேடியவ ரெவர் கண்டார்?
வாடாமல் வதங்காமல் வதிவ தவன் யாங்கென்றீர்?

5. அறிவதற்கு இயலானாய் அவனொருவன் ஏதென்றீர்;
அடைவதற்கு இயலானாய் அவனிருத்தல் ஏனென்றீர்;
தடைய மதாய்க் கண்ணுக்குத் தட்டாத அந்நிலைக்குத்
தகையவனாய் அவனொருவன் தானிருத்தல் இலையென்றீர்!

6. யாதானும் நாடாமல் ஊராமால் எனக்கொள்ள
யாதானுந் தடையென்றால் - யாதென்பீர், ஏனென்பீர்;
வேதா கமங்கள் என வீணர்பலர் சொற்றக்கால்
வேகாது ஈங்கெனவே வீசிடுவீர், என்றுரைத்தீர்!

7. அழியாத தன்மையதாம் ஆன்மாவென் றறைந் தார்க்கே
அழிவுற்ற பாட்டனிற்பின் அணியணியா யுளமாந்தர்
தனித்தனி ஓர் ஆன்மாவா? தனியாகார் எனவுரைத்தால்
இனித் தனியே வந் தவருள் எவ்வழியே புகும்என்றீர்!

8. ஆன்மாவை அழித்திட்டீர்; அதன் வழியே நிலைபெற்ற
மேன்பாடு உளதென்னும் மேலுலகம் பொய்யென்றீர்!
தான்பாடு படலெல்லாம் தனக்கென்றே கருதாது
மேன்பாடு அனைவர்க்கும் மேவ வகை காணென்றீர்!

9. வானூர்தி வேகத்தில் வளர்ந்திட்ட புதுமையெலாம்
வானூர்தி வேகமதில் வந்தடையச் செய்திட்டீர்!
வானூர்தி வேகத்தில் வளர்ந்திட்ட நெஞ்சங்கள்
வானூர்தி வேகத்தில் வறட்டுவரோ நன்றியினை?

10. ஆயிரத்தோ டெண்ணூற்றி எழுபத்தி ஒன்பதன்மேல் -
ஆயிரத்து ஆண்டுகளின் அடிமை நிலை மீட்கவந்தீர்!
அடிமைநிலை மீளற்குள் அடிகொடுத்து மறைந்திட்டீர்
அடிமைநிலை மீட்டற்கு யாருள ரிங் கய்யாவே!

(“சிந்தனையாளன்”, 14-9-1974)

## அனைத்துத் தொழிலும் கூட்டுழைப்பால் நடைபெறும் செயல்களே!

மனிதர்களால் செய்யப்படும் அனைத்துத் தொழில்களும் தனித்து நின்று செயல்படுவதில்லை; அனைத்துத் தொழிலும் குறைந்தது இரண்டு பேர்களையாவது கொண்டே செயல்படுகின்றன. விவசாயம் என்றால், உழவர், பராமரிப்பவர், விதைப்பவர், அறுவடை செய்பவர், பாதுகாப்பவர், வியாபாரி எனப் பலரின் கூட்டுழைப்பால்தான் செயல்படுகின்றது. மீன் பிடித்தல் என்றாலும், முத்துக்குளித்தல் என்றாலும் பலருடைய உழைப்பு தேவைப்படுகின்றது.

அனைத்து நிறுவனங்களும் முதல் போட்டவரால் மட்டும் இயங்கவில்லை. முதலாளி முதல் போட்டால் தொழிலாளிகள் உடல் உழைப்பை அளிக்கின்றனர். முதல் போட்டு விட்டால் அனைத்தும் தானாக இயங்குவதில்லை; பலரின் கூட்டுழைப்பால்தான் நிறுவனங்கள் இலாபம் காண்கின்றன. தொழிலாளிகளும் நிறுவனத்தில் தானும் ஒரு இலாபப் பங்குதாரர் என்பதை உணர்ந்து உழைத்தால், கூடுதல் வருவாய் கிடைக்கும். கிடைத்த இலாபத்தை முதலாளிகளும் தொழிலாளிகளின் நலன் கருதிப் பகிர்ந்து கொடுத்தால் நிறுவனமும் பல வளர்ச்சிகளை அடையும். தந்தை பெரியார் 1900 லேயே அப்படிச் செய்தார். இலாபத்தை முதலாளி மட்டும் எடுத்துக் கொண்டால் குறுகிய காலத்தில் தொழில் நலிந்துவிடும். சில முதலாளிகள் தொழிலாளிகளின் ஏழ்மையைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர். இதனால் தொழிலாளிகளின் உழைப்பும் ஈடுபாடுடன் செயல்படாமல் பாதிப்புகள் ஏற்படுகின்றன. இலாபத்தைப் பகிர்ந்து கொடுக்கும் அனைத்து நிறுவனங்களும் நன்கு வளர்ச்சி கண்டுள்ளன.

தற்பொழுது தமிழகத்தில் உழைக்காமல் செயல்படும் தொழில் அரசியல் மட்டுமே. ஒரு சில அரசியல்வாதிகளைத் தவிர அனைத்து அரசியல் வாதிகளும் மக்களின் நலனுக்கு எதிராகச் செயல்படுகின்றனர். தேர்தல் காலங்களில் சில இலட்சங்கள் செலவு செய்தால் பிறகு, கோடிக்கணக்கில் கொள்ளையடிக்கலாம் என்ற எதிர்பார்ப்புடன் ஈடுபடுகின்றனர். வரும் உள்ளாட்சித் தேர்தலில் நம்முடன் சேர்ந்து வாழும் நபரே தேர்தலில் பெரிய அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து வெற்றி பெற்று மக்களுக்கு நல்லது செய்வதாகக் கூறி வருவர். அதில் கொள்ளையடிப்பவர்களே அதிகம். இந்தத் தேர்தலில் மக்களுக்கு நலன் செய்பவரை மட்டும் கட்சி பார்க்காமல், நல்ல மனிதர்களைத் தேர்ந்தெடுங்கள். நல்லவர்களைத் தேர்ந்தெடுக்கும் அனைவரும் அறிவாளிகளே. மற்றவர்கள் அனைவரும் அறிவிலிகளே.

**அரசியலில் இப்பொழுதெல்லாம் அதிக அளவில் பொறுக்கிகளும் ரவுடிகளும் கொள்ளையர்களும் பெரிய பெரிய கட்சிகளில் இணைந்து பாதுகாப்புடன் தங்கள் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்கின்றனர். இவர்களை வாக்காளர்களால் மட்டுமே ஒழிக்க முடியும்.**

**அனைத்தும் கூட்டுழைப்பாலேதான் செயல்படுகின்றன. கட்சிக்குத் தலைவர் மட்டும் இருந்தால் இயங்காது; நல்ல தொண்டர்களும் வேண்டும்; தொழிலுக்குத் தொழிலாளிகளும் வேண்டும்.**

**வெற்றிக்கு, கூட்டுழைப்பு தேவை! தேவை!!**

**- உழவர் மகன் ப.வ.**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி அக்டோபர்-2016

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **இரா. குப்புசாமி** | கரூர் | 1000/- |
| **க. ஆதிமூலம்** | கீழ்ப்பென்னத்தூர் | 1000/- |
| **தி.ச.குணசேகரன்** | திருக்கழுகுன்றம் | 1000/- |
| **இரா.பத்மநாபன்** | மாதவரம் | 1000/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **ஆ.தெ.அறிவுடைநம்பி** | அரியலூர் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 300/- |
| **பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| பேரா. **ச.பொ.சீனிவாசன்** | மூணாறு | 200/- |
| **வீ. இராசாப்பிள்ளை** | சிதம்பரம் | 200/- |
| **மரு. வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| சென்ட்ரிங் **இரா.ப. கோவிந்தன்** | தாம்பரம் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **இ. கபிலன்** | சிதம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **இளவரசன்** தமிழ்க்களம் | அரியலூர் | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - அக்டோபர் - 2016

| | | | |
|---|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... | 100/- |
| **க. குப்புசாமி** | சோளிங்கபுரம் | .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்ப்பென்னாத்தூர் | .... | 100/- |
| **கு.சூரியன்** | பெங்களூர் | .... | 100/- |
| **கு.பாரி** | சோளிங்கபுரம் | .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... | 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை - 53.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-53. ☎ : 044-2625 2119